**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
➤ Criminal Cases
➤ Civil Litigation
➤ Family
➤ Immigration
TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900
COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 08 ♦ ISSUE - 148 ♦ 24 FRIDAY JUNE 2011

- மார்ச் 2007ம் ஆண்டுக்கு முன்னர் மற்றும் பின்னர் அகதி அந்தஸ்து கோரி இதுவரை எதுவித முடிவுகளும் கிடைக்காது இருப்பின்,
- தற்போதைய புதிய சட்டவிதிகளுக்கமைய நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரக்கூடிய வகையில் புதிய விண்ணப்பம் செய்து தரப்படும்.
- கைது செய்யப்படுதல் தடுத்து வைத்தல் மற்றும் நாடு கடத்தலுக்கு எதிராக உயர்நீதிமன்ற விண்ணப்பம் மற்றும் தடை உத்தரவு பெற்றுத் தருவதற்கென,
- அனுபவம் வாய்ந்த சட்டத்தரணி குழுவினர் ஆலோசனை பெற, தொடர்பு கொள்ளவும்.

இலவச ஆலோசனை!!
**Vincent Solicitors**
07870 763 570 / 020 8574 0666
11-13, South Road, Southall UB1 1SU

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**ASTA SKILLS COLLEGE**
ESOL Skills For Life with Citizenship
Asta CITIZENSHIP TEST
ILR and Nationality Citizenship applications
சனி மற்றும் ஞாயிறுகளிலும் Esol வகுப்புகள் உண்டு.
Esol Citizenshipக்குத் தேவையான தகுதிகள் பெற்றுத் தரப்படும்.
Knowledge of language and life in Uk
Nationality citizenship, ILR(PR)
Accredited courses
Home office Recognised courses
ASTA : Trident Business Centre, 89 Bickersteth Road, Tooting, London, SW17 9SH
Tel: 020 8355 3453 Mob: 07958 178321

**Properties to Let !**
UNIVERSAL ESTATES www.universal-estates.co.uk
1, 2, 3, 4, 5 படுக்கையறைகள் கொண்ட வசதியான வீடுகள் வாடகைக்கு உள்ளன.
- Norbury
- Croydon
- South Norwood
- Brixton
- Crystal Palace
- Streatham
- Tooting
- Balham
- Clapham
- Mitcham
- Dulwich
- Thornton Heath
- Lewisham and surrounding areas

தமிழில் உரையாட அழையுங்கள்
Charlina - Tel: 0208 764 6444
1526, London Road, Norbury, SW16 4EU
E.Mail: info@universal-estates.co.uk

**SOLUTIONS FOR DAILY ACHES AND PAINS**
Veda Aid
THE NATURAL WAY TO EASE PAIN



**Veda Aid represents a modern approach based on ancient Ayurvedic principles**

It is a health care system based on a select variety of pure natural herbs, extracts and essences; free from artificial additives, colours, preservatives and chemicals.

Our technicians utilize the latest technologies to research, develop and formulate two varieties of naturally balanced cool and warm solutions for daily muscular aches and pains.

Available on-line at: **www.veda-aid.com**
For more information contact:
**info@veda-aid.com**
or phone: 020 8977 3737
Veda Aid Limited. P. O. Box 293,
Hampton, TW12 9AN. UK

10% off Veda Aid Solutions for Oru readers
Quote code: ORU/10/VA11
Offer expires 31 Sept 2011

இனியும் குழந்தைப் பாக்கியம் இல்லை என்ற கவலையை விடுங்கள்!
20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களுடன் தொடர்புகொண்டு உங்கள் கவலைகளை இன்றே தீர்த்திடுங்கள்



HSFC
HARLEY STREET FERTILITY CLINIC
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web: www.hsfc.org.uk

**RESTAURANT FOR SALE**
ரெஸ்ரோரன்ட் விற்பனைக்கு!!
Srilankan and South Indian restaurant for sale at a prime location in NW6 With A3 and A5 license



for further information Please contact
0795 639 2869

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

MATHS & ENGLISH AFTER SCHOOL
STUDY PROGRAMMES AGED 4 -16 YEARS

**Give your child the Learna Advantage. Today.**

- Maths & English Classes for 4- 16 years
- Challenging individualised learning path
- Focus on Problem Solving, Reading and writing
- Improve child's self – confidence and concentration skills
- Thousands of computer activities & Printed worksheets
- Monthly progress tests and instant reports



LEARNA

• Individualised • Interactive • Inspiring
Let your child have the Learna experience
Call us or visit us on the web www.learna.co.uk

**0845 094 0061**
Learna Education Centre, 5 - 6 The Broadway, Sutton, Surrey SM1 4BU

**airfare direct**

www.airfare-direct.com
Call us on
**020 8090 5503**

JET AIRWAYS · KUWAIT AIRWAYS · GULF AIR

| Other Airline's Special Fares to Colombo | |
|---|---|
| Oman Air £210 | Jet Airways £190 |
| Gulf Air £190 | Kuwait Airways £190 |

Special package for Umra & Colombo on Saudi Airlines

Srilankan Airlines

| | |
|---|---|
| Colombo..... | £250 |
| Chennai...... | £215 |
| Kochi.......... | £215 |
| Trivandrum.. | £215 |
| Bombay...... | £155 |
| Delhi........... | £155 |

* All Fares exclude Tax

IATA · VISA · All major cards accepted

t:01727 736 961/0845 230 9262 e:info@airfare-direct.com
5 Metro Centre, Ronsons way, St Albans, Hertfordshire, AL4 9QT

**M&K**
MALIKS & KHAN
SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

**IMMIGRATION**
All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

**PERSONAL INJURY**
All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + **£300.00 Cash back** on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

**CONVEYANCING**
Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

**FAMILY LAW**
Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration



**'KNOW YOUR FUTURE'**
Look forward to the comming years
with help of Eastern Astrology
Seek sound astrological advise to solve your problems

**CONSULT VIDOOSHI MRS B.POTA**
Interviewed by Sunday mirror 1970, among leading 5 Astrologerd in England.

**Who predicted**
- Conservatives Victory in 1992
- Labour's Victory in 1997

The First Indian Lady Astrologer and
Palmist Practising in Britain Over 40 Years
Coming from a family of astrologers.

**WIDE INTERNATIONAL CLIENTELE**
(Tel/Fax: 020 8732 2826 for appt.(daytime) E:Mail: vidoshi@sky.com

**RND**
JEWELLERS



தனிப்பட்ட தகவல்கள் இரகசியமாக காக்கப்படும்.
தரமும், உத்தரவாதமும் மிகக் குறைந்த கட்டணத்தில்

Pawnbrokers & Cheques cashed

- Highest cash loans on gold jewellery, lowest interest charges
- Cheques Cashed - Wages, Housing Benefit, Inland Revenue
- International Money Transfer & Foreign Exchange
- Professional Jewellery & Watch Repairs / Engraving

குறைந்த வட்டியில் தங்க நகைகள்
மீது உடனடி பண உதவி

- சம்பளம் வீட்டு வாடகை நல உதவி, வருமான வரி
- நகைகள் மற்றும் கடிகார திருத்த வேலைகள், பெயர்கள் பதித்தல்.
- பண பரிமாற்றும் சேவை
- உங்கள் உறவுகளிற்கு உரிய நேரத்தில் ரகந்த இடத்தில் பணமாற்றீடு செய்திட நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்.....

Private and Confidential Services

315 Northolt Road, South Harrow,
Middlesex HA2 8JA
**020 8869 0644**

- **ESOL with Citizenship**
- **Points Based Test**
- **Spouse Visa Test**
- **Citizenship Courses for Settlement**
- **Student Visa Extention Test**

- Successfully trained over 32,000 students
- Certificates within 20 days
- Online numeracy and literacy courses
- Courses from £200
- Multilingual Staff

**FREE**
Initial Assessment




Hum Hain na!

OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE
& WE TRAIN YOU UNTIL YOU PASS

To enrol or enquire about your nearest centre, call our team on 020 7099 2400

Head Office:
Vista Business Centre, 9th flr, 50 Salisbury Road
Hounslow TW4 6JQ
E-mail: courseinfo@trainingconnect.co.uk
Tel: +44(0)207 099 2400

TrainingConnect
www.trainingconnect.co.uk
Australia • China • Dubai • India • Russia • UK

National Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway, Birmingham, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Croydon.

# பூராயம்



## மன்மோகன் சிங்கும் உருத்திர குமாரனும்

ஒருவித்திலை பார்த்தால் மன்மோகன் சிங்கும் எங்கடை உருத்திர குமாரனும் ஒண்டுதான் என்று என் நண்பன் ஒருவன் சொன்னான். ஏன் என்று கேட்டேன், இரண்டு பேரும் மக்களால் தெரிவு செய்யப்படாத பிரதமர்கள் என்று அவன் பதில் சொன்னான். அவன் சொல்லிறதிலையும் விசயம் இருக்குது.

*- பிரதீபன்*

## தொப்பி போடிறது சரியா பிழையா?

ரெயினிலை போகேக்கை யாராவது தொப்பியுடனும் நீண்ட தாடியுடனும் பெட்டிக்குள் ஏறினால், பலரும் விறுக்கு விறுக்கென்று மற்றப் பெட்டிக்கு மாறி விடுகிறார்கள். ஏதேனும்' ஏடாகூடாம நடந்திடக் கூடாது என்ற பயத்திலை நானும் அப்பிடித்தான் செய்கிறேன். ஆகையால் நீண்ட தாடி வைத்திருக்கிற ஆட்கள் தொப்பி போடிறது சரியா? தவறா? என்று ஏன் ஒரு ரீவி விவாதம் வைக்கக் கூடாது. ரொப்பிக் இல்லாமல் தவிக்கிற எங்கடை ரீவிக்காரர் யாராவது இதை ஏன் கவனத்தில் எடுக்கக்கூடாது.

*- தொப்பிப் பயத்தில் இருக்கும் திருக்குமார்*

## வரலாற்றுச் சாதனை

அண்மையில் பிரித்தானியநாடாளுமன்ற வளாகத்தில் நாடுகடந்த அரசாங்கம் நடாத்திய உயர்மட்டக் கூட்டத்தில் பிரித்தானிய அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களான லீ ஸ்கொட், சிபோன் மக்டொனா, வீரேந்திர சர்மா போன்றோர் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்கள். இது எமது விடுதலைப் போராட்டத்தின் ஒரு திருப்பு முனை எனறே நான் கருதுகிறேன்.

*- நிர்மலன்*

## தகவல் களஞ்சியம்

உமா மகாலிங்கம் தரும் தகவல் களஞ்சியம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. ஆங்கிலத்தில் உள்ள விடயங்களை சரியாக விளங்க முடியாத எனக்கு இலகுவில் விளங்கும் வகையில் தமிழில் சுவைபட அவர் எழுதுகிறார். அவருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன.

*- ராமேஸ்வரன்*

## இருட்டு நிகழ்ச்சி

தொலைக்காட்சி, வானொலிகளில் கருத்துச் சொல்கிறேன் பேர் வழி என்று அறுத்துக் கொட்டுபவர்களின் தொல்லை தாங்க முடியாததுதான். அதற்காக நிகழ்ச்சி வழங்குனர் என்ன செய்ய முடியும்? மறு முனையில் இருப்பவர் எத்தனை பெரிய அலுப்பன் என்று அவருக்கு எப்படித் தெரியும். போதக் குறைக்கு அவர்கள் ஒவ்வொரு பெயர்களில் வருவார்கள். ஒன்று செய்யலாம் எல்லா ஊடகங்களும் ஒரு பிளாக் லிஸ்ட் வைத்து அதில் இப்படியான அலுப்பர்களை இணைத்து விடவேண்டும். இந்த லிஸ்டில் உள்ளவர்களை ஒரு நிகழ்ச்சியிலும் கருத்துச் சொல்ல அனுமதிக்கக் கூடாது.

*- கயல்விழி*

## அஸ்வரின் வாக்கு தேவவாக்கா?

சிறிலங்கா பாராளுமன்றத்தில் அஸ்வர் என்ற மறைகழண்ட எம்பி ஒருவர், தலைவர் பிரபாகரனின் மனைவி பிள்ளைகளை தாங்கள் பராமரித்து வருவதாகத் தெரிவிக்க, அதை விழுந்தடித்துக் கொண்டு பரபரப்புச் செய்தியாய் போட்டிருக்கின்றன எங்கடை இணைய தளங்கள். மறுநாள் தான் பிழையாக சொல்லி விட்டேன் என்று அந்த மறைகழண்டது சொல்ல எங்களது ஊடகங்கள் அசடு வழிந்துள்ளன. யார் எதைச் சொல்லிறான் எனற விவஸ்தையே இல்லாமல் செய்தி வெளியிடுகிற இந்த ஊடகங்களை என்ன செய்யலாம்?

*- கதிர்காமத்தம்பி*

## தலையாரிகளின் தமிழ் உணர்வு

புலம்பெயர் தமிழர்களின் தலைகளாக இனங்காட்டிக் கொள்வோர் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் அப்பப்போ தொலைக்காட்சியிலும் தோன்றுவார்கள். சில இணையத்தளங்களிலும் அறிக்கை விடுவார்கள். ஆனால் மே 18 அன்று நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் இரண்டாம் ஆண்டுநிகழ்வில் ஆயிரக்கணக்கில் மக்கள் அணிதிரண்டு வந்து இறந்த அந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். ஆனால் இந்த தலையாரிகள் பலரைக் காணமுடியவில்லை. அன்றையநாளில் இது எம் போன்ற உணர்வாளர்களை மிகவும் வருத்தியிருக்கும் என நினைக்கின்றேன். ஆனாலும் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற இளந்தளிர் நிகழ்ச்சிக்கு பலரைக் காணக்கூடியதாக இருந்தது. இதில் முக்கியமான சிலர் இளந்தளிர் நிகழ்ச்சிக்கு அழைத்தார்கள் வந்தோம். ஆனால் ரபல்கர் ஸ்கெயாரில் நடைபெற்ற இரண்டாம் ஆண்டுநிகழ்ச்சிக்கு தங்களை அழைக்கவில்லை என்றும் பதில்கூறியிருந்தார்கள். இதுதானா இந்த தலைகளுடைய இன உணர்வு.

*- க.வாகீசன்*

## விமர்சனத்துக்கு அப்பால் ஏற்றுக் கொள்வோம்

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர வாசகர்களின் உதவியை நாடி 5ம் பக்கத்தில் வெற்றிடம் விடப்பட்டுள்ளது. இதுவரை உதவ முன்வந்த அன்பர்களின் பட்டியல் விரல்விட்டு எண்ணக் கூடிய தொகையினர் மட்டுமே ' ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்' என்ற அடையாளத்தை விமர்சனத்துக்கு அப்பால் ஏற்றுக் கொள்வோம்

*- உமா மகாலிங்கம்*

## கருத்துக்களம்

கருத்துக்களுக்கு களம் அமைப்பதற்காக பத்திரிகை நடத்துவதாகச் சொல்லும் நீங்கள் எனது வரலாற்று உண்மை கொண்ட காலத்தேவை கருதி வெளியிடப்பட்ட கருத்துக்களை பக்க சார்பின்றி தணிக்கை செய்யாமல் முழுமையாகப பிரசுரிப்பீர்கள் என நம்புகிறேன். கருத்தை கருத்தால் எதிர்கொள்ள வேண்டும். சேயோன் உருட்டுக் கட்டையுடன் என்னைத் தேடி வரக்கூடாது.

*- தம்பி*

## எல்லாவற்றையும் பாராட்டுவோம்

உங்கள் இறுதி வெளியீட்டில் இரண்டு விடயங்களை பற்றி சொல்ல விரும்புகிறேன். சேயோன் எழுதிய கட்டுரையில் இரட்டைக்குழல் துப்பாக்கியாக அல்லது பல்குழல் பீரங்கியாக படை நடத்துவோம் என தேசியத்திற்காக பாடுபடும் எல்லா வழிகளையும் நன்றாகப் பாராட்டியிருந்தார். நன்றி. அதேநேரம் வேல்தர்மாவின் கட்டுரையில் G.T.V பற்றி மறைமுகமாக எழுதியிருந்தார். என்ன இருந்தாலும் எந்த வகையில் எந்த விடயம் வந்தாலும் நாங்கள் பாராட்ட வேண்டும்.

*- கிருபா*

ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 020 7043 4314.

# கலையின் பெயரால் கடப நாடகம்

இலண்டனில் Tooting Broadway எனும் பெயரில் தமிழ்ப்படம் தயாரிக்கப் படுவதாக அறிந்தேன் . இதன் உள்நோக்கம் முழுக்க முழுக்க நன்கு திட்டமிட்ட எம்முடைய இளைய சமுதாயத்தின் தமிழர் சார்பான நடவடிக்கைக்கு எதிரான விடயம்.

1.இலண்டனில் ஈழத் தமிழர்களிடையே எவ்வளவோ விடயங்கள் திரைப்படமாக்க இயலும்போது மிக மிக சிறிய எண்ணிக்கையிலான அதுவும் குறிப்பிட்ட வயது எல்லையில் உள்ளபோது உருவாகும் இந்த குழுக்கள் Gangs பற்றிய படம் தேவைதானா? இந்த முன்னைநாள் குழு அங்கத்தவர்கள் பலர் இப்போது தங்களை மாற்றி சமுகத்துடள் சேர்ந்து வாழ்கிறார்கள்.

2. 2000 ஆண்டில் பல சம்பவங்கள் நடந்தாலும் இப்போது 2011 இல் மிக மிக குறைந்து விட்டது. Tooting இல் 10-15 வயது Boys சிறிய குழுக்களாக திரிகின்றனர். அவர்களும் நாளை தங்களை இச்சமுதாயத்துடன் இணைத்து விடுவார்கள். இவர்கள் தொழில் ரீதியாக (Black Gangs) போன்ற வன்முறைக் கூட்டமல்ல

3. இப்படம் இந்திய தமிழர்கள் மூலம் வெளிவரக் காரணம் என்ன? பொதுவாக புலம்பெயர் தேசங்களில் ஈழத்தமிழர்கள் பல நாடக, சினிமா தயாரிப்புகளில் முயற்சி செய்கின்றார்கள். அதில் வெற்றியில் பெற்றிருக்கிறார்கள். இப்போ இப்படத்தின் மூலம் இந்திய தமிழர்கள் ஈழத்தமிழ் இளைஞர்கள் பற்றி எதைக் காட்டி எதை அடைய முயல்கிறார்கள். லண்டனில் உள்ள இளைய சமுதாயம் தமிழ் போராட்டம் சார்ந்த பல நல்ல நடவடிக்கைகளில் தாங்களாக ஈடுபடுகிறார்கள். இந்த நடவடிக்கைகளை மாற்றிக்காட்டிஎம் இளையவர்கள் வன்முறையாளர்கள் என்று காட்டி இப்போராட்டங்களை கொச்சைப்படுத்துவதே நோக்கம்.

4. கமலகாசனின் படம் போல வன்முறை என்ற அருவருப்பான காட்சிகளைக் காட்டி விட்டு படத்தின் கடைசியில் இதற்கு எதிர்ப்பு அல்லது போதனை போன்றதே இந்த இந்தியர்களின் முயற்சி.

5. இப்படத்தில் நடிக்கும் நடிக்க ஆசைப்படும் எம்மவர்கள் கொஞ்சம் யோசிக்க வேண்டும். இப்படத்தின் உள்நோக்கம். இந்த படத்தின் மூலம் உங்கள் முகத்தில் நீங்களே சேறை பூசிக் கொள்ள வேண்டாம்.

6. அசின், சல்மான்கான் இலங்கை போனால் படம் பகிஸ்கரிப்பு செய்யும் நீங்கள் இப்படத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்.

7. சினிமாவில் கறுப்பாய் குள்ளமாய் இருப்பவர்களை வேடிக்கை செய்யும் காட்சியைப்பார்த்து அதே கறுப்பாய் குள்ளமாய் இருக்கும் நாங்கள் கை தட்டி சிரிக்கும் கோமாளித்தனம் ஏனோ?

8. இந்திய RAW இன் இலங்கை உளவு அமைப்பின் திட்டமிடல்தான் இது. இதை லண்டனில் ஆரம்பிப்பது பிரசாரத்திற்கு அவர்களுக்கு மிகவும் உதவும்.

9. நம் பத்திரிகைகள், மற்றைய ஊடகங்கள் இவ்விடயங்களை வெளிக் கொணரவேண்டும். நாமாகவே இவற்றைத் தெரிந்துகொள்வது கடினம். பிறர் சொன்னால் தான் எங்களால் புரிந்து கொள்ள முடியும்.

தயவு செய்து ஏதாவது செய்யுங்கள்.

*-- கரிகரன்*

## சிவசங்கர் மேனனின் காமெடி...

சமீபத்தில் வெளிவந்த இணையத்தளச் செய்தியிலே இந்திய வெளியுறவுச் செயலர் சிவசங்கர்மேனன் கூறியிருந்தார் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே தான் வெறும் தரகர் மட்டும் தான் வேறு எதுவும் செய்யமுடியாது என்று. ஆனால் எனக்கொரு சந்தேசம் என்னவென்றால் எனக்குத் தெரிந்த வகையில் 2002 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் தரகர்களான நேர்வே அரசாங்கம் தான் நியமிக்கப் பட்டிருந்தார்கள்.

ஆனால் இந்தியத் தரப்பு எப்போ தரகராக இருந்தது அல்லது யார் இவர்களைத் தரகராக நியமித்தார்களோ தெரியாது. இதை பார்க்கும் போது வடிவேல் ஒரு படத்தில் நானும் ரவுடிதான் என்று காமெடி பண்ணியது போல தெரிகிறது. இது சிவசங்கர் மேனனின் காமெடியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

*- தாஸ்*




Prime Citizenship Test முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

£ 165 மட்டுமே

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம் உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

**North London Branch**
104 Millennium Business Centre
Humber Road
Staple Corner NW2 6DW

**Head Office**
14 Lombard Business Park,
2 Purely Way, Croydon CR0 3JP

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

**Prime citizenship Test**
unit 28, unix House, Abbe Road, Park Royal, London, NW10 7TR

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

தொடர்புகளுக்கு அழையுங்கள்
www.prime citizenshiptest.co.uk
Tel: 020 8150 9953
Mob: 075 3893 3261

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு

**Our services:**
- ESOL with citizenship
- Spouse Visa Test
- Point Base Test
- Multilingual Staff

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JUNE 24, 2011, ISSUE 148

## சிறிலங்காவை தனிமைப்படுத்துதல்

சிறிலங்கா துடுப்பாட்ட அணியுடன் போட்டிகளில் கலந்து கொள்ளும் முடிவினை இங்கிலாந்து அணி மீளாய்வு செய்து கொள்ள வேண்டும் என்ற இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் அதற்றன் அவர்களது கோரிக்கைக்கு ஆதரவு பெருகி வருகிறது.

இக்கருத்தினை வலியுறுத்தும் செய்திகளை சனல் 4, த கார்டியன் போன்ற மைய ஊடகங்களும் வெளயிட்டு வருகின்றன. இது தொடர்பில் சனல் 4 இன் இணையதளம் நடாத்திய கருத்துக் கணிப்பில் எண்பத்தேழு விழுகாடு வாக்குகள் அதற்றன் அவர்களது கோரிக்கைக்கு ஆதரவாகக் கிடைத்துள்ளன.

நீண்டகாலமாகவே இக்கோரிக்கையை முன்வைத்து தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும் பரப்புரைகளிலும் ஈடுபட்டு வந்துள்ள போதிலும், இப்போது தமிழரல்லாதவர்களும் இவ்விடயத்தில் ஈடுபாடு கொண்டுள்ளமை முக்கியம் வாய்ந்த ஒரு திருப்பமாக கருத முடியும். சிறிலங்காவை சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தும் முயற்சிக்கு இது துணை புரியும் என எதிர்பார்க்கலாம்.

முன்னர் இனவெறி தலை விரித்தாடிய கொமன்வெல்த் நாடான சிம்பாபே நாட்டுடன் விளையாடுவதற்கு, பிரித்தானியா உட்பட சில நாடுகள் தடை விதித்தது போல், இனப்படுகொலை புரியும் கொமன்வெல்த் உறுப்பு நாடான சிறிலங்காவுடன் விளையாடுவதற்கும் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையின் நியாயப்பாட்டினை மானிட நேயமிக்கவர்கள் ஏற்றுக் கொள்வர்.

அண்மையில் த கார்டியன் பத்திரிகையில் கட்டுரையாளர் ஒருவர் குறிப்பிட்டது போல், அரசியலையும், விளையாட்டையும் கலக்கக் கூடாது என முட்டாள்கள் மாத்திரமே நினைப்பார்கள். இது சிறிலங்காவின் கிரிக்கட் அணி விடயத்தில் முழுக்க முழுக்க உண்மையானது. இறுதி இரண்டு போட்டிகளிலும் கலந்து கொள்ளவிருக்கும் அதன் முன்னாள் தலைவர் சிறிலங்காவில் பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார். சிறிலங்கா இராணுவத்தின் ஆட்டிலறி பிரிவைச் சேர்ந்த அஜந்த மெண்டிஸ் என்பவரும் அணியில் அங்கம் வகிக்கின்றார்.

தற்போதைய போட்டித் தொடர் ஆரம்பித்திலிருந்து போட்டி நடைபெறும் மைதானங்களுக்கு வெளியில் தமிழ் இளையோர் அமைப்பினர் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வார்ப்பாட்டங்கள் பற்றிய செய்திகளை மைய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்து வருகின்றன. ஆகையால் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டு இளையோர் அமைப்பினருக்கு ஆதரவு வழங்க வேண்டியது அவசியமாகிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*இப்ப முந்தினதை விட அதிகமான ஆக்கங்கள் வந்து சேருகின்றன. அதுகளை வாசித்து எடிற் பண்ணி பிரசுரத்துக்கு ஏற்றதாக மாற்றுகிற வேலையிலை கூடுதல் நேரத்தை செலவிடுகிறோம். வருகிற ஆக்கங்கள் பிரசுரிக்கிற தரத்திலை இருந்தாலும் எல்லாத்தையும் பிரசுரிக்கிறதுக்கு பக்கங்கள் போதுமானதாக இல்லை. ஆனபடியால் எதைப் போடிறது எதை விடுறது எண்டது திண்டாட்டமாய்தான் இருக்கு. ஆக்கங்களை அனுப்பிறவை ஒண்டை கட்டாயம் செய்ய வேணும். என்னெண்டா உங்கடை தொடர்பு விபரங்களை அனுப்ப வேணும். மின்னஞ்சல், ஸ்கைப் ஐடி, போன் நம்பர் எதெண்டாலும் பரவாயில்லை. ஆனால் உங்களை உடனை தொடர்பு கொளளக் கூடியதாய் இருக்க வேணும். வீட்டு முகவரியை அனுப்பினால் உங்களை தொடர்பு கொள்ள நாள் பிடிக்கும் அது சரிவராது. ஏன் தொடர்பு விபரம் கேட்கிறமெண்டால் நீங்கள் எழுதிற கையெழுத்து விளங்காவிட்டால் தட்டச்சு செய்யிறவர் அதை தள்ளி வைச்சிடுவார். தொடர்பு விபரமிருந்தால் உங்களை கூப்பிட்டு விசயத்தை கேட்கலாம் அவ்வளவுதான்.*

*இன்னும் கொஞ்ச நாளிலை பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை விடப்போகிறது. வீட்டிலை பிள்ளைகள் போர் அடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களை **ஒரு பேப்பர்** ருக்கு எழுதச் சொல்லுங்கோ. சின்ன கட்டுரையள் எழுதியனுப்பலாம். படம் கீறிஅனுப்பலாம். இப்பத்தானே சின்னப்பிள்ளையிளிட்டையும் கமரா, கமரா உள்ள போன் எண்டு பல விசயங்கள் இருக்கு ஆனபடியால் படமெடுத்தும் அனுப்பலாம்.*

*கிட்டடியிலை சனல் 4 இல் 'சிறிலங்காவின் கொலைக்களம்' எண்ட விவரணம் போட்டவையள்தானே. அதைப்பற்றி தமிழரல்லாத மற்றவர்கள், உங்கடை பக்கத்து வீட்டுக்காரர் அல்லது வேலைத்தளத்திலை கூட வேலை செய்யிறவை, பெற்றோல் நிலையத்திலை, கடைத்தெருவிலை சந்திக்கிறவை என்ன கருத்துச் சொல்லிச்சினம் என்பதை அறியத்தாருங்கள். எழுதியனுப்ப நேரமில்லை எண்டால் 020 7043 4314 என்ற இலக்கங்களை அழுத்தி குரல் அஞ்சலில் தெரிவியுங்கோ. நாங்கள் அவற்றை தொகுத்து பிரசுரிப்போம்.*

*கவுன்சிலோப் பகுதியில் பேப்பர் இப்போது ஒழுங்காக வைக்கப்படுகிறது. இந்த உதவியை செய்த நண்பருக்கு நன்றி. வேறு பகுதிகளிலும் பேப்பர் வைக்கப்படுவதில்லை எண்டால் அறியத் தாருங்கோ. எங்களாலை முடிஞ்சதை செய்யிறம்.*

***ஒரு பேப்பர்** ருடன் தொண்டரடிப்படையில் இணைந்து பணியாற்ற விரும்புவர்கள் எங்களை தொடர்பு கொள்ளலாம். தேவையான பயிற்சி வழங்குவோம்.*

*இன்னொண்டையும் ஞாபகப்படுத்த வேணும் சிறுதுளி பெருவெள்ளம் எண்டது மாதிரி நீங்கள் செய்கிற பொருளாதார உதவிகள் பேப்பரை ஒழுங்கா வெளிக்கொண்டு வர உதவும். ஆகவே கொஞ்சம் காசு தட்டுப்படுகிற நேரம், **ஒரு பேப்பர்** ருக்கும் உதவி செய்தீர்கள் எண்டால் பெரிய உதவியாய் இருக்கும்.*

*வேற என்ன?*

*சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# Post-War Sri Lanka: Rethinking Reconciliation

By Amarnath Amarasingam
DOCTORAL CANDIDATE,
WILFRID LAURIER UNIVERSITY

As my doctoral dissertation deals with Sri Lankan Tamil activism in Canada, I was asked by a few people why I had not yet weighed in on the recent Channel 4 documentary, Sri Lanka's Killing Fields, which in conjunction with the United Nations Report released in March, provides a devastating account of war crimes committed by both Sri Lankan government forces and the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

My answer often was that I had not yet gotten over my moment of sheer speechlessness. What is left to say that has not already been said by clips of bound Tiger rebels being summarily executed, or passing shots of Sinhala soldiers tossing dead bodies onto the back of trucks, or merciless video of screaming Tamil civilians running from bunker to bunker as shells fell nearby, or recordings from cameras stalking the hollow cries of a mother clutching the tiny body of her bleeding child. No, there was nothing to be said.

Then came the Sri Lankan government's rather farcical attempt to downplay both the UN Report and revelations of the Channel 4 documentary. Rajiva Wijesinha, an MP in the Sri Lankan parliament, told Al Jazeera that while he is "not saying that everything in it is fake," he believes much of the Channel 4 footage to have been "manipulated" and went on to argue that it "seems quite possible that much of what was shown was in fact done by the Tigers."

When asked about the deliberate shelling of hospitals, Wijesinha responded that they had evidence of the LTTE placing heavy weapons near hospitals and "if" such shelling actually happened, it is a "great pity."

Similarly, Sri Lanka's Ambassador to the United States, Jaliya Wickramasuriya, told PBS NewsHour that the footage in the documentary is "not authentic." When asked about the deliberate shelling of no-fire zones during the final months of the conflict, Wickramasuriya responded: "All this is propaganda. Lots of people can say lots of things."

While the government response was predictable, another line of argument has recently gained some fanfare. This peculiar position, as most recently articulated by Amjad Mohamed-Saleem in Groundviews, argues:

## Reconciliation

"The release of this documentary and other reports provides unwarranted distraction from the main issues that the government (and any government in a post conflict country) should be held accountable for including: steps taken towards reconciliation, stemming the rising cost of living, tackling corruption and trying to ensure law and order."

While I agree with the overall vision, I cannot help but demand that those responsible for heinous atrocities not be allowed to walk, head held high and cleansed of wrong doing, beside me while I take these "steps" towards reconciliation.

> An individual, regardless of whether they are dressed in SLA or LTTE uniform, cannot kill your family, and then flippantly tell law enforcement officials who come to arrest him that they are living in the past.

As such, some of the current arguments for reconciliation, while commendable in principle, have mutated into a rather immoral and circular conversation-stopper. Those pushing for reconciliation tend to argue that there are extremists on both sides who wish to perpetuate tensions between the Sinhalese and Tamil communities. Placing themselves between Tamil separatists and Sinhala nationalists, the "reconciliationists" often present their view as the moderate or center position. However, simply placing yourself in the middle does not make you a moderate. Like with all relationships, reconciliation most genuinely arises after apologies, acknowledgement, and forgiveness.

The Sri Lankan government has neither offered an apology nor a statement of regret, but rather continues to insist that it had a policy of zero civilian casualties, and, ipso facto, any evidence of civilian deaths is either doctored, manipulated, or part of a broader conspiracy.

## No Apology or regret

The government has also attempted to reframe the conflict, including the last months of the war, as simply one theatre in the overall global 'war on terror'. This is all in addition to the government's dismal efforts at post-war reconciliation.

As Jayadeva Uyangoda recently argued in Asian Survey, the "preoccupation with regime consolidation over reconciliation constituted the core of Sri Lanka's political trajectory in 2010." In light of these developments, to demand a conversation on reconciliation is to put the cart before the horse.

To even enter these topics into the conversation with many reconciliationists, one risks being branded 'divisive'. While this perspective is often presented as being open to dialogue, and accepting of other points of view, it has become painfully evident that for many individuals pushing reconciliation, the parameters of the discussion are pre-set and involve willfully ignoring any call for truth, and dismissing the need to bring those responsible to justice.

I argue, then, that the argument for reconciliation, in its present form, is a kind of post-war pacifism that is too convenient for the victor, and ultimately disrespectful to the innocent.

As such, the call for reconciliation has, regrettably, come to resemble the Sri Lankan government's demand that life be allowed to simply move forward. Many in the Tamil diaspora in Canada and abroad proceed to rightly dismiss this call as nothing more than majoritarian rhetoric masquerading as the 'moderate' position. If there is to be reconciliation, then, it seems clear that there must first be a substantial rethinking of the concept itself.

*Courtesy: www.huffingtonpost.ca*

# மறுபடி ஒரு முறை காட்டிக் கொடுக்காதீர்கள்

போராட்டம் என்பது இரண்டு இரகசிய இராணுவக் குழுக்களிடையே நடைபெறுகின்ற யுத்தமுமோ அந்த இராணுவக் குழுக்களின் இரகசியங்களைப் பேணுகின்ற உளவு நிறுவனமோ அதனைச் சுற்றி அரசியல் காய் நகர்த்தும் பொறிமுறையோ அல்ல. துரதிஷ்ட வசமாக முப்பது ஆண்டுகள் தமிழ் மக்களுக்குச் சொல்லித் தரப்பட்ட, பழக்கப்படுத்தப்பட்ட வழிமுறைகள் இவை மட்டும் தான்.

உலக நாடுகளின் அரசுகள் அனைத்தும் இணைந்தே இனப்படுகொலையை நிகழ்த்தி விட்டு இன்று "நடந்து விட்டதே" என வருத்தம் தெரிவிப்பதன் பின்னணியில் பல அரசியல் காரணங்கள் உள்ளன. தமிழ் மக்கள் என்பவர்களின் பிரதினிதிகளோ உலக நாடுகளை வால் பிடித்து ஏதாவது சாதித்து விடலாம் என்று கோமாளித்தனமாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் அவ்வாறான நம்பிக்கையை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று எமக்கு மத்தியில் அதிலும் குறிப்பாகப் புலம் பெயர் நாடுகளில் சமூகப் பற்றுள்ளவர்களின் கடமை, இந்தத் தவறான சிந்தனைக்குள் கட்டுண்டுடிருக்கும் மக்கள் கூட்டத்தை இலங்கை அரசிற்கு எதிரான மக்கள் சார்ந்த போராட்ட வழிமுறையை நோக்கி வென்றெடுப்பதாகும். 80 வீதமான அரபியர்கள் அமரிக்காவைத் தங்கள் எதிரியாகக் கணிக்கிறார்கள்.

60 வீதமான உல மக்கள் அதிகார அரசுகளே அழிவுகளுக்குக்காரணம் என்கிறார்கள். இவர்களிலிருந்தெல்லாம் ஒடுக்கப்படும் தேசிய இனமான நாம் விலகிச் சென்று எம்மைச் சிறுபான்மை ஆக்கி எம்மை நாமே அன்னியப்படுத்திக் கொள்கின்ற அவலத்தை இவர்கள் நடத்தி முடிக்கிறார்கள். ஏனென்றால் நமது தலைமகள் இந்த நாடுகளின் ஆட்சி அதிகாரத்திற்கு விசுவாசமானவர்கள். அதனால் அவர்களை ஒடுக்குவோருக்கு ஆதரவானவர்கள்.

பலர் இவற்றைப் புரிந்து கொள்வதில்லை. மூன்று தசாப்தம் உருவாக்கிய பழமைவாதச் சிந்தனை எம் ஒவ்வொருவரிடமும் அழுக்குகளாக ஒட்டியிருக்கின்றது. எதிர்ப்பியக்கதின் பரந்துபட்ட பன்முகத்தை நிராகரித்து தூய்மை, புனிதம் என்ற குறியீடுகளூடாக ஒற்றைப் பரிமாணச் சிந்தனை வளர்ச்சி பெற்றுள்ளது. இதே சிந்தனையும் அதன் அழிவரசியலும் தொடருமானால் இன்னும் 30 வருடங்கள் அழிவுகளை மட்டுமே நாம் அறுவடை செய்வோம்.

தவறுகளை உணர்வதற்கும், பரந்த மனோபாவத்தோடு தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளவும் தவறினால் நாம் ஊக்குவிக்க வேண்டிய எதிர்ப்புப்போராட்டம் முன்னோக்கி நகர வாய்ப்பே இல்லை. சிங்கள-பௌத்த "புனித" நிலமாக வடக்குக் கிழக்கு மலையகம் என்பன மாற்றப்பட்டு விடும்.

தவறுகளை விமர்சித்தல் என்பதே தவறு என்கிற "மிரட்டல்" தமிழ் இனவாதிகளால் முன்வைக்கப் படுகிறது. ஏன் தவறுகளை விமர்சிக்கிறோம் என்றால் *அவை மறுபடி நிகழக் கூடாது* என்பதற்காக மட்டுமே. இலங்கை அரச பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்பதற்காகவே.

ராஜபக்சவைப் பழிவாங்க வேண்டுமானால் தவறுகளைக் கண்டுகொள்ளாமல் ஒன்றிணையுங்கள் என்கிறார்கள். ராஜபக்ச மட்டுமா எமது பிரச்சனை? அறுபது ஆண்டுகளாக அழிக்கப்படுகின்ற தேசிய இனத்தின் உச்சபட்சக் குறியீடு மட்டுமே ராஜபக்சவும் அவரது குடும்பமும்.

ராஜபக்ச அகற்றப்பட்டால் அவரது இடத்தை நிரப்புவதற்கு ஆயிரம் பேரினவாதிகள் வரிசையாக நிற்கிறார்கள். இனிமேல் ஒவ்வொரு இனப்படு கொலையாளியும் இவ்வளவு துணிவாக 50 ஆயிரம் மக்களைக் கொன்று போட்டுவிட்டு அரியாசனத்தில் அமர்ந்திருப்பதை அனுமதிக்க முடியாது என்பதால் ராஜபக்ச தண்டிக்கப்பட வேண்டும் என்ற சிறிய, பரந்த மனோபாவத்தினூடான விளக்கத்தைக் கூட இனவாதிகள் சொல்லத் தயாரில்லை. இங்கே ராஜபக்சவிற்கு எதிரான போராட்டம் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டமாக, அழிக்கப்படும் தேசிய இனத்தின் மக்கள் சார்ந்த போராட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஏன் இவர்கள் போராட்டத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் ஆய்விற்கு உட்படுத்த மறுக்கிறார்கள்? எம்மைச் சுற்றியிருப்போர் கொலைகாரர்களும், திருடர்களும் என்பதை அறிந்து கொண்டும் ஏன் அவர்களோடு கைகோர்த்துக் கொள்வோம் என்கிறார்கள்? ஒடுக்கப்படுவோரின் உண்மையான நண்பர்களை அறிந்துகொண்டும் ஏன் தமிழர்களைச் சிறுபான்மையாக ஒதுக்க எண்ணுகிறார்கள்? உலகெங்கும் உருவாகி பெரும் சக்தியாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஜனநாயக முற்போக்கு அணியினரிடம் இருந்து தமிழ் மக்களை ஏன் அன்னியப்படுத்துகிறார்கள்.

இலங்கையில் ராஜபக்ச குடும்பம் நிகழ்த்தும் திட்டமிட்ட குடியேற்றங்களுகு எதிராக, அதிகாரச் சீர்குலைவுகளுக்கு எதிராக எல்லாம் மக்கள் தங்களது சக்திக்கு உட்பட்டுப் போராட முனைகிறார்கள்.

இந்திய இராட்சத இராணுவத்தின் கொலைக் கரங்களுக்கு எதிராகப் பழங்குடி மக்கள் போராடுவது போல, கஷ்மீர் மக்கள் தமது சுய நிர்ணய உரிமைக்காகப் போராடுவதுக் போன்று, நாகாலாந்தில் மரண அச்சுறுத்தலுக்கு மத்தியில் மக்கள் போராடுவது போல ஈழத் தமிழர்களும் போராட ஆரம்பித்திருக்கிறார்கள். அது சிறியதாக இருக்கலாம்.

அதன் வளர்ச்சி தவிர்க்க முடியாத அரசியல் புறச் சூழலைக் கொண்டிருக்கிறது. அவர்களின் நண்பர்களை இனம் கண்டு கொள்வதும் அதனூடாக அவர்களின் போராட்டத்தைப் பலப்படுத்துவதும் எமது கடமை. மாறாக, 80 களில் இந்தியாவை நம்பி மக்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து சீரழித்தைப் போன்று இப்போது ஏகாதிபத்திய அரசுகளை நம்பி மக்களைக் காட்டிக் கொடுக்காதீர்கள்.

*(இனியொரு)*

# "The world has seen the evidence. Now we must act!"

## By: Periasamy Kanthavel

In a nut shell, the Channel 4 documentary appeared to provide, compelling evidence that Sri Lankan government forces massacred prisoners, that civilian hospitals were shelled and that female Tamil fighters were sexually assaulted before being killed. The world has seen the evidence. What next?

When one says 'The world", that includes the politicians, the real culprits, the learned and Great Elderly, the real forces that brought the truth out, some genuinely good officers among the various NGOs and INGO's, and the common people that may include the very popular newly married Royal Couple,Prince William and Kate. There would be many Mike Atherton too.

If you take the politicians, the British parliamentarian seem, never got the hang of the Sri Lanka problem and they are the main cause of the Tamil genocide. "The LTTE was long blighting the Sri Lanka government", said the UK Ambassador to the UN at the height of the war. The UK Ambassador, during the vital period, August 2007 to November 2009, when even the UN started playing foul, was giving all the encouragement to the murderous Sri Lankan governments. It was none other than Sir Robert John Sawyers, (KCMG - Knight Commander of St Michael and St George, with the acronym: Kindly Call Me God).

This Honourable gentleman is a diplomat and senior civil servant. Sawyers was previously Political Director at the Foreign and Commonwealth Office, a post he held since August 2003. In this post he advised the Foreign Secretary on political and security issues worldwide and negotiated on behalf of the Foreign Secretary with international partners in the G8, EU and the UN. He was particularly closely involved in policy on Iraq, Iran, Afghanistan and the Balkans. Prior to this, he served two years in the Middle East as Ambassador to Egypt from 2001 to 2003, and for three months was the British Government's Special Representative in Baghdad. He even headed the British team in the EU3 negotiations over Iran's nuclear program, utilizing his scientific background on nuclear matters.

From January 1999 to summer 2001 he was Foreign Affairs Adviser to Prime Minister Tony Blair, dealing with all aspects of Foreign and Defence Policy and working closely with international counterparts. On 16 June 2009, he was made the new chief of the Secret Intelligence Service.

Then how come, that such a diplomat with vast experience and merit became nasty and dumb like, when the Sri Lanka Govt. was carrying out genocide of Tamils. Maybe he had no choice. He was there even when Tony Blair was the Prime Minister and the powerful British Tamil Diaspora was tamed by the the Labour government. Just before the British general elections, another buffoon, an off-licence shop champion, formed the 'Tamils for the Conservative". Then again, he was told,"The LTTE was long blighting the Sri Lanka government and have to be destroyed", a pathetic slogan, now the trade mark of British foreign policy towards Tamils, was used by William Hague, the British foreign minister, of to-day.

### DAVID MILIBAND and BERNARD KOUCHNER

David Miliband and Bernard Kouchner have suddenly got some mood and said, " In April 2009, we travelled together as foreign ministers to Sri Lanka, as 25 years of fighting between the Sri Lankan government and the Tamil Tigers neared its end. The remaining fighters were trapped in the northern most part of the country — along with large numbers of civilians. U.N. estimates put the numbers of civilians there in the last few months of the war at over 300,000. Our purpose was simple: to draw attention to the human suffering, to call for humanitarian aid and workers to be allowed in, and to call for the fighting to stop...."

What a lie! David Miliband dragged Bernard Kouchner, the then Foreign Minister of France to Sri lanka to congratulate the Sri Lankan government and said," What a spectacular victory!" This gave the murderous Sri Lanka the needed encouragement and blessing to wipe out the Vanni Tamils.

During the month of November 2008, the LTTE fighters gave a torid time to the Sri lankan forces. They lost thousands of Sinhalese fighters and thousands deserted the battalian and ran away. Almost all the cabinet ministers and others ran to President Rajapakse and wanted the war to be stopped and accept defeat. This was a big blow for the British government. While Gotha was convincing the President that the Mankulam debacle was only a battle and they could win the war with the help of India. Basil Rajapakse went to India and got India to underwrite the wiping out of LTTE and gave all the men, especially Infantry and machines. That was the spectacular victory David Miliband mentioned.

The New Democratic Party in Canada has passed its own resolution calling for an "independent, international and impartial mechanism to ensure truth, accountability and justice in Sri Lanka".

### 'Blood on our hands'

Ms McDonagh told MPs there is "evidence of continuing abuses against Tamils, including torture and extra-judicial killings."

"I think Parliament needs to say whether we want our country to continue with these miserable deportations, and to continue to have Tamil blood on our hands.". Her statement at least gives some hope that the British Government is learning and learning fast, in spite of the truth that the British Border agencies deported Tamil Refugee claiments, a bad act during the time of good news. That is Britain.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

1st and Best Accountants
Wembley .................. 07828 396 651

BBK Partnership
Croydon .................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate ................ 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பைத் தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்
கனடா
தயா - அரவிந்தன் - சிந்து
பிரான்ஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன்
சுவிஸ்
சயந்தன்
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
சாரதா
விளம்பரம்
சோபனா - தனா
அச்சு
தர்சினி (கனடா) - பானு
வடிவமைப்பு
மயூரன் - பெகின்
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
நிவேதா
வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850
தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# கவனம்!

நிதானமாக எழுத வேண்டுமென்று தான் எப்பொழுதும் சிந்திப்பதுண்டு. நிதானம் தவறிய எழுத்துக்களைப் பலர் கண்டித்ததும் உண்டு எனவே ஒவ்வொரு முறையும் கவனமாக இருக்க முயல்வேன். ஆனால் நிதானம் தவறிய சிலரின் நடத்தைகள் என் கவனத்தை மீறி விடுகின்றன.

இப்பொழுது பாருங்கள் தீபம் என்ற தொலைக்காட்சியில் அனஸ் என்பவர் கேள்வி நேரம் என்றொரு நிகழ்ச்சியை நடாத்துகிறார் தீபம் இப்பொழுது இலவசமாக ஒளிபரப்பாகிறது. (ஆண்டுக்கு 10 பவுண்ஸ் தான் அதனது சந்தா என்றாலும் அதன் சந்தா தாதரராவதில்லை என்பதில் பிடிவாதம் எனக்கு) அந்நிகழ்ச்சியில் தொடர்ந்து நச்சுக் கருத்துக்களைப் பரப்பி வருவதைக் கண்டு கோபம் துடித்துக்கொண்டு எழுகிறது.

நேற்று ஞாயிறு (19-06-11) ஐங்கரன்-கலைஞர் தொலைக்காட்சியில் மானாட மயிலாட என்ற நிகழ்ச்சி நடந்தது (அதுவும் இலசவமான ஒளிபரப்பு). அதில் ஒரு பாடலுக்கு மூர்க்கமாக ஒரு நடனமாடுகின்றார்கள். அதில் பாடப்பட்ட பாடலின் பொருள் 'தமிழா தமிழா தமிழீழம் காண்போம் இது உறுதி' தமிழ்நாட்டிலிருந்து குப்பைகளாக நிகழ்ச்சிகள் வரும்போது இப்படியொரு பாடலுக்கு நடனமாட அவர்களை நிர்ப்பந்திப்பது எது.

மறுக்க முடியாமல் ஒப்புக்கொள்ள வேண்டியது என்னவென்றால் தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் தொடர்பான எழுச்சி சூழ் கொண்டு சுழன்றாடத் தொடங்கி விட்டது. ஜெயலலிதாவின் வெற்றிக்கு அதுவும் ஒரு காரணம்.

கேள்வி நேரம் நிகழ்ச்சியில் ஈழத்தமிழரான அனஸ் என்ன செய்கிறார்?. புலிக்கொடி ஏந்துவது சரியா தவறா? என்று வாதத்திற்கு ஒரு நிகழ்ச்சி செய்கிறார். அதுவும் மிக ரஞ்சகமான முறையில். அனஸ் தனது கருத்துக்கு ஒத்துவரக்கூடியவர்களை நிகழ்ச்சியில் பேச அனுமதிக்கிறார். எதிர்க்கருத்துக்களை இருட்டடிப்புச் செய்கிறார்.

புலிக்கொடி ஏந்த வேண்டாம் என்று வாதிட வந்தவர்கள் ஏலவே புலிக்கொடி ஏந்தி அதனால் விளைந்த பாதகங்களை அனுபவித்தவர்கள் என்றால் கூட நாம் அவர்கள் கருத்துக்கு காது கொடுக்கலாம். இவர்கள் யார் என்றால் முள்ளிவாய்க்கால் நிகழும் காலங்களில் மூக்கு முட்டக் குடித்து வயிறு முட்ட உண்டு மெத்தையின் மேல் புரண்டு கிடந்தவர்கள். சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாவது கண்டு சிந்தை இரங்கவில்லை மாத்திரமல்ல, சிரித்து மகிழ்ந்தவர்கள்.

மேலாக சிங்கள வெறியன் மகிந்தா லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் வைத்த விருந்துக் கேளிக்கைகளில் கலந்து திளைத்து மகிழ்ந்தவர்கள். வெளியில் ஈழத்தமிழர் பெரும் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்க உள்ளே மகிந்தாவின் காலை நக்கிக் கொண்டிருந்தவர்கள். புலிக்கொடியைப்பற்றி கதைக்கிறார்கள்.

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

என் தீராத கோபம் இவர்களில் மாத்திரமல்ல. இதை ஒழுங்கு செய்த அனஸ் மீதே. நேற்று இன்று அல்ல நெடுங்காலமாகவே அவர் இத்தகைய வேலைகள் செய்வதனை நாம் அறிவோம்.

இந்நிகழ்ச்சியில் புலிக்கொடி ஏந்தவேண்டும் எனும் வாதத்தை நிலை நிறுத்த இராஜமனோகரன், நிமலன் என்ற இருவரையும் அனஸ் அழைத்திருந்தார். இருவரும் 'பச்சைத் தண்ணிகள்'. உண்மையில் இருவரும் போயிருக்கக் கூடாது. இது சபைக்கு ஏற்றவேண்டிய வாதமே அல்ல.

சரி போனவர்கள் என்ன செய்திருக்கவேண்டும்? தமது கருத்தை ஆணித்தரமாக நிலைநிறுத்தியிருக்க வேண்டும். அதைவிடுத்து 'நான் அங்கு போனேன்' 'அவரைச் சந்தித்தேன்' சுயபுராணம் பாடிக்கொண்டார் இராஜமனோகரன். நெளிந்து கொண்டிருந்தார் நிமலன். இருவரும் தமிழத் தேசியத்தில் ஆழ்ந்த பற்றுக்கொண்டவர்களும் அயராது உழைப்பவர்கள் என்பதுவும் எனக்குத் தெரியும் ஆனால் வாதிடப்போவோர் வீறுடன் போக வேண்டாமா? அனஸ் தன் கருத்தை அடித்து நிலை நிறுத்த இப்படியானவர்களைத் தான் அழைப்பார் என்பது அவரது வஞ்சகச் செயலின் இன்னொரு வரி.

புலிக்கொடி பிடிப்பதா இல்லையா என்பதைக் கொடி பிடிப்பவர் தீர்மானிக்கட்டும். அதைத் தீர்மானிக்க நீங்கள் யார்? இசுலாமியப் பெண்கள் முக்காடு அணியக்கூடாது என்று பிரான்சில் சட்டம் வந்திருக்கிறது. அதற்கு வையுங்கள் உங்கள் வாதத்தை. ஆத்மார்த்தமான எங்கள் உணர்வின் மீது ஏறி நின்று கும்மாளமிடாதீர்கள்.

புலிக்கொடி என்பது எங்கள் உணர்வின் எங்கள் எழுச்சியின் குறியீடு. பிரபாகரன் என்பது எங்கள் நெஞ்சில் நீக்கமற நிறைந்திருக்கும் தாரக மந்திரம். புலிக்கொடியை உயர்த்திப் பிடித்து பிரபாகரன் நாமத்தை உரக்கச் சொல்லித்தான் உலகத் தமிழர் அனைவரும் அணிதிரள்கிறோம். ஓர்மம் பெறுகிறோம் வீறு கொள்கிறோம்.

வன்னி அவலம் நிகழ்ந்த காலை பிரபாகரன் நாமம் சொல்லி புலிக்கொடியை உயர்த்திப்பிடித்துத் தான் இரண்டு இலட்சம் மக்கள் அணிதிரண்டு இலண்டன் மாநகரையே அதிரச் செய்து உலகையே உலுப்பி எடுத்தோம்.

மகிந்தனை இலண்டனை விட்டு ஓட ஓட விரட்டி அடித்தது புலிக்கொடி தந்த உணர்வு தான்.

புலிக்கொடி என்பது ஈழத்தமிழரின் அடையாளம். உணர்வு குறியீடு மேலாக ஈழத்தமிழரின் ஆத்துமா அது. புலிக்கொடியே ஈழத்தமிழரை ஓரணியில் ஒன்று திரட்டுகிறது. உணர்வை உசுப்புகிறது, ஓர்மம் பெறச் செய்கிறது, வீறுகொண்டு எழ வைக்கிறது, வீரஞ்செறிந்த போரை நிகழ்த்துகிறது. அது வெறும் விளையாட்டுப்பொருளோ வான வேடிக்கையோ அல்ல.

அனஸ் அவர்களுக்குத் தாழ்மையான வேண்டுகோள், தமிழர்களுடைய உணர்வுகளுடன் விளையாடாதீர்கள். யார் அனுப்பி நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள் என்று ஆராய்வது எங்கள் வேலை அல்ல. உமது எஜமானர் விசுவாசத்தை அளப்பதும் எமக்குத் தேவை இல்லை. இவ்வளவு காலமும் இல்லாமல் இப்பொழுது எதற்கு கொடிப்பிரச்சினையும் தலித் பிரச்சினையும் 'கவனம்' என்ற சொல்லைத் தான் மிகக் கவனமாகப் பயன்படுத்துகிறேன்.

# தவறு செய்யத் தூண்டாதீர்கள் நண்பர்களே!

அல் பாஹித் என்ற அரபு ஞானி ஒரு நாள் தன் நண்பரிடம் வருத்தத்துடன் சொன்னார். 'நாம் கடவுளுடைய கருவியாக இருந்து செயல்பட வேண்டும் என்று நினைத்தாலும் சில சமயங்களில் சைத்தானுடைய கருவியாக இருந்து விடுகிறோம். இன்று கூட நான் சைத்தானுடைய கருவியாக மாற நேரிட்டது'

அவர் நண்பருக்கோ வியப்பு. இவரைப் போன்ற அப்பழுக்கில்லாத ஞானி எப்படி சைத்தானுடைய கருவியாக மாற முடியும்? 'நீங்கள் மிகக் கவனமாக இருப்பீர்களே. பின் எப்படி அது சாத்தியம்?' என்று கேட்டார்.

'நான் இன்று மசூதிக்குத் தொழச் சென்ற போது என் செருப்பை வெளியே விட்டுச் சென்றேன். திரும்பி வந்து பார்த்த போது செருப்பைக் காணவில்லை. இன்று ஒரு திருடனை உருவாக்கி விட்டேனே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது'

'அதில் உங்கள் தவறு ஒன்றும் இல்லையே' என்றார் அந்த நண்பர்.

'என் தவறு தான் அது. ஒருவரை ஆசைப்பட வைப்பதும், கோபப்படுத்துவதும், சந்தேகத்தைக் கிளம்புவதும், வெறுப்பை விதைப்பதும், மனிதர்களைப் பிரிப்பதும் மிகவும் எளிது. சைத்தான் தன்னுடைய இந்த செயல்களைச் செய்ய மனிதர்களையே உபயோகப்படுத்துகிறது. அந்த வகையில் இந்தத் தவறு நிகழ நான் பயன்படுத்தப்பட அனுமதித்து விட்டேன்'

அல் பாஹிதின் சிந்தனையின் உயர்வைப் பாருங்கள்.

மற்றவர்களைத் தவறு செய்யத் தூண்டுவதில் இரண்டு வகை உண்டு. அறிந்து தூண்டுவது. அறியாமல் தூண்டுவது.

அறிந்தே மற்றவர்களைத் தவறு செய்ய மற்றவர்களைத் தூண்டுவது நேரடியாக அந்தத் தவறை விடக் கொடுமையானது. தங்களை நல்லவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலரை நான் கவனித்திருக்கிறேன். அவர்களாகத் தவறுகள் செய்து அடுத்தவர்களைத் துன்புறுத்தத் தயங்கும் எத்தனையோ பேர் அடுத்தவர்களைக் குற்றம் செய்யத் தூண்டுவதில் வருத்தம் கொள்வதில்லை.

என்ன செய்கிறோம், இதன் விளைவு என்ன என்ற சிந்தனை கூட அவர்களிடம் இருப்பதில்லை.

எனக்குத் தெரிந்த ஒருவர் தானாக மற்றவர்களிடம் சண்டை போடமாட்டார். ஆனால் மற்றவர்களை சண்டைக்குத் தூண்டி விடுவதில் கெட்டிக்காரர். மற்றவர்கள் சொன்ன வார்த்தைகளை தொனியை மாற்றி, முகபாவனையை மாற்றிச் சொல்லி சண்டையை மூட்டி விடுவார். அவரைப் பொறுத்த வரை அவர் பொய் சொல்லவில்லை. வார்த்தைகளை மாற்றிச் சொல்லவில்லை. ஆனால் தொனியும், சொல்லும் முகபாவமும் மாறினால் வார்த்தைகளின் அர்த்தம் முற்றிலுமாக மாறி விடுகிறது, அது பொய்யிலே பெரிய பொய் என்பது அவர் அகராதியில் இல்லை.

இன்னொருவர் மேலதிகாரியைப் பற்றி ரோஷக்கார சக ஊழியர்களிடம் சொல்கையில் 'அவருக்கு நாம் எல்லாம் அடிமைகள் என்று நினைப்பு. கிள்ளுக்கீரையாய் நம்மை நினைக்கிறதால் தான் மதிப்பதே இல்லை...' என்று சொல்லிக் கொண்டே இருப்பார். திடீரென்று யாராவது ஊழியர் கிள்ளுக்கீரை இல்லை என்று நிரூபிப்பதற்காகவே அந்த மேலதிகாரியிடம் போய் சண்டை போடுவார். இப்படி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை வேண்டுமென்றே தவறாக ஊகித்து மற்றவர்களுக்கிடையில் மனஸ்தாபத்தை வளர்த்துவதில் சிலர் கில்லாடிகள்.

கடைசியில் பெரும் பிரச்னைகள் அவர்களுக்குள் வெடிக்கையில் இவர்கள் மட்டும் இரண்டு பக்கமும் வேண்டப்பட்ட ஆட்களாய் நிற்பார்கள்.

உண்மையில் நேரடியாகச் சண்டை போடுபவர்களை விட அதிகமாக இவர்கள் வெளிச்சத்திற்கு வராமலேயே கேடு விளைவிக்கிறார்கள். அல் பாஹித் கூறியது போல இது போன்ற மனிதர்களையே சைத்தான் தன் வேலைக்குத் தேர்ந்தெடுக்கும் என்றே தோன்றுகிறது. வதந்திகளைப் பரப்புவது, வெறுப்பு விதைகளைத் தூவுவது, மற்றவர் ஒற்றுமைக்கு பாதகம் விளைவிப்பது போன்ற செயல்களைச் செய்பவர்கள் சமூகத்திற்கு அளப்பரிய கேடுகள் விளைவிக்கிறார்கள்.

பல நேரங்களில் அவர்கள் அப்படியெல்லாம் செய்ய உண்மையான காரணம் நேரம் போகாமையே. உப்புசப்பில்லாத வாழ்க்கையில் சில நிமிட பரபரப்பிற்காக இப்படி அறிந்தே தவறுகள் செய்யத் தூண்டினாலும் விளைவுகள் அந்த சில நிமிடங்களையும் தாண்டி பல காலம் பலரைப் பாதிக்கிறது என்பதால் அது மிகப்பெரிய தவறு என்பதை அவர்கள் உணர மறந்து விடுகிறார்கள்.

அடுத்தது அறியாமல் தூண்டுவது. நம்முடைய செயல்கள் யார் யாரை எந்த அளவு பாதிக்கின்றன என்ற பிரக்ஞையே இல்லாமல் நடந்து கொள்வது.

இதற்கு எத்தனையோ உதாரணங்கள் சொல்லலாம். நாகரிகம் என்ற பெயரில் ஆபாச ஆடைகள் அணிந்து வலம் வரும் பெண்கள் பலர் மனதில் பல வக்கிரங்களை உருவாக்கி விடுகிறார்கள். அப்படி உருவாகும் வக்கிரங்கள் யார் யாரிடம் எப்படி எல்லாம் நடக்கத் தூண்டும், யாரெல்லாம் எப்படி பாதிக்கப்படுவார்கள் என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

பிரபலமாக வேண்டும் என்ற எண்ணத்தில் தவறான எண்ணங்களை எழுதுகிற, ஊக்குவிக்கிற எழுத்தாளர்களையும், பதிவர்களையும் கூட இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

அதே போல் பேச்சாளர்கள், அரசியல் மற்றும் மதத்தலைவர்கள் கூட அந்த நேரத்திற்குப் பிரபலமாக வேண்டும் என்றும் பலர் கவனத்தைக் கவர வேண்டும் என்பதற்காகவும் கைத்தட்டலுக்காகவும் காரசாரமாகப் பேசி எத்தனையோ மனங்களில் விஷத்தைத் தடவி விடுகிறார்கள். அதன் விளைவுகளின் பிரம்மாண்டத்தை உணர அவர்கள் தவறி விடுகிறார்கள்.

அறிந்தும், அறியாமலும் செய்யும் இது போன்ற தூண்டுதல்களுக்கு இன்னும் எத்தனையோ உதாரணங்கள் சொல்லிக் கொண்டே போகலாம். தவறுகள் செய்யாமல் இருப்பது மட்டுமே போதுமானதல்ல. மற்றவர்களைத் தவறுகள் செய்யத் தூண்டாமல் இருப்பதும் மிக முக்கியம். விஷ விதைகளை விதைப்பது சுலபம். ஆனால் உருவாகும் விருட்சங்களை அழிப்பது சுலபமல்ல. விருட்சங்களை அழிக்க சக்தி இல்லாதவர்கள் விதைகளையும் விதைக்காமல் இருப்பதே உத்தமம். தங்கள் பாவக்கணக்கை கூட்டாமல் இருப்பதே நல்லது.

*- என்.கணேசன்*

# அதிகாரங்களை எதிர் கொள்ளுதலும் எதிர்ப்பரசியல் பற்றிய தவறான கற்பிதங்களும்



கோபி
*ஒரு பேப்பர்*

விடுதலைக்காக போராடுபவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் பல்வேறு எதிர்ப்புகளை எதிர்கொள்கிறார்கள். இருந்தாலும் அவர்களது வாழ்வு அர்த்தம் நிறைந்ததாக நகர்கிறது. மரணத்தையிட்டு கலங்காத அவர்கள், பல சந்தர்ப்பங்களில், தாம் வரித்து நின்ற இலட்சியம் நிறைவேறு முன்னரே மரணத்தைச் சந்திக்கிறார்கள். வரலாற்றில் இடம்பிடித்துக் கொள்கிறார்கள். இலட்சியவாதிகளின் நிலை இப்படியிருக்க, சந்தர்ப்பவாதிகள் வேறும்விதமாக இருக்கிறார்கள். அவர்கள் அதிகாரத்தின் பக்கமே எப்போதும் இருப்பார்கள். இலட்சியம், கொள்கை என்பவை பற்றி எதுவித அக்கறையும் இல்லாத இவர்களுக்கு, இருக்கும் இடத்தை மாற்றுவதும் அதற்கேற்ப கொள்கைகளை மாற்றுவதும் இலகுவாக அமைந்து விடுகிறது. சிலநேரங்களில், அதுவும் மற்றவர்கள் முடியாது என்று வீழ்ந்து கிடக்கும் நிலையில், இவர்களது கரங்கள் உயர்ந்து விடுன்றன. இதனால் ஏற்படும் குழப்பங்களுக்கும், அழிவுகளுக்கும் அளவில்லை.

இத்தகைய ஒளியை மறைக்கும் கிரகண நிலையில்தான், முள்ளிவாய்க்காலில் தமிழ்மக்களின் போராட்டம் முடக்கப்பட்ட பின்னரான நிலவரம் இருந்தது. விடுதலைக்காக போராடியவர்கள் இடர்பட்டுக் கொண்டிருக்க, அவர்களது இடத்தை சந்தர்ப்பவாதிகள் நிரப்ப முனைந்தார்கள்?. எதிர்ப்பரசியலை கைவிட்டு விட்டு, இனப்படுகொலை செய்வோரின் காலில் விழுந்து கொண்டு அதிகாரத்துக்கு முண்டு கொடுக்க முனைப்புக் காட்டினார்கள். இங்கு அதிகாரம் என்கிறபோது அது தனித்து சிறிலங்கா ஆட்சி பீடமாக இருக்க வேண்டும் என்பதில்லை, இந்தியா, மேற்குலகம் என இன்னபலரும் இருக்கலாம். இந்த அதிகாரங்களுடன் கைகோர்த்துத்தான் பயணிக்க வேண்டும் என்ற போதனை இப்போது பல்வேறு மட்டங்களிலிருந்தும் வருகிறது. அதிகாரங்களுக்கு ஏவல் புரிந்து கொண்டு, அவர்களை தங்களின் நண்பர்களாக்கி உள்ளதாக வேறு கதை அளக்கப்படுகிறது.

2009 மே க்கு பின்னர் வந்த சில மாதங்கள் மிக மோசமானவை. இக்காலகட்டத்தில், இனி சிறிலங்கா அரசாங்கத்தின் காலடியில் விழுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற பரப்புரைகள் வெளிப்படையாகவே வைக்கப்பட்டன. கே.பி. இன் இணைவுடன், அவரது விசுவாசிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் சிறிலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டனர். அல்லல்படும் போராளிகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் உதவுகின்ற சாக்கில், தமிழ் மக்களின் எதிர்ப்பரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விடயத்தில், தங்களுடன் சேராதவர்களை அதிகாரங்களுக்கு காட்டிக் கொடுக்கும் நடவடிக்கை இன்று வரைக்கும் தொடர்கிறது. இவர்களது ஆதரவு ஊடகங்கள், குறிப்பாக இணையதளங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று தெளிவு காட்டுவதாக மக்களை குழப்பும் கைங்கரியத்தில் ஈடுபடும். மற்றயது, அவதூறுகளை அள்ளி வீசி சேறடிப்பு நடாத்தும். இவர்களால் வழங்கப்படும் தத்துவ விளக்கங்கள், மேற்கோள் காட்டல்கள், கட்டுடைப்புகள் எல்லாமே எதிர்ப்பரசியலை தகர்த்தெறிய வைப்பதை நோக்காக கொண்டிருக்கின்றனவே தவிர, மக்கள் நலன் மீதான அக்கறையினால் எழுந்தவை அல்ல. இங்கு எதிர்ப்பரசியல் என்ற பதம் அதிகாரத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவது என்ற அர்த்தத்தில் பாவிக்கப்படுகிறது. இது பாராளுமன்ற அரசியலில் காணப்படும் எதிர்கட்சியின் செயற்பாடு போன்ற அதிகாரத்தை கைப்பற்ற முனையும் செயற்பாடு அல்ல, ஒடுக்குமறை இருக்கும் வரை இது தொடரும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**இந்த இரண்டு பெண்களிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள நிறையவே இருக்கிறது. அவை அடக்கு முறைகளை எதிர்கொள்ளும் விடயத்தில், எங்களுக்கு மனோதிடத்தையும் உறுதியையும் தரும்.**

போரின் பின்னரான காலத்தில், தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை களைந்து நல்லிணக்கத்தினை பேணுவது தொடர்பாக பல்வேறு மட்டங்களில் பேசப்பட்டுவருகிறபோதும் அதன் செயல்முறை வடிவம் என்பது ஒவ்வொரு தரப்பிற்கு இடையிலும் வேறுபாடுகளை கொண்டதாக காணப்படுகிறது. முழுக்க முழுக்க சிங்கள பௌத்த மேலாதிக்கத்தில் தமிழ் இனத்தை கொண்டுவருவது என்ற சிறிலங்கா அரசின் அணுகு முறை தொடக்கம்,

இனவழிப்பு நடவடிக்கையை விசாரிக்க சர்வதேச மட்டத்திலான ஒரு சுயாதீன விசாரணை அமைக்கப்பட வேண்டும் என்ற தமிழர் தரப்பின் கோரிக்கை வரை பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. சர்வதேச நாடுகளினதும், அமைப்புகளினதும் பரிந்துரைகள் இந்த இரண்டு அந்தங்களுக்கும் இடையில் அமைந்து விடுகின்றன.

உண்மையில், ஈழத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சனைகள் தனித்துவமானவை என்று குறிப்பிட முடியாது. இதுபோன்ற அவலங்களை உலகின் பல்வேறு இனங்களும், இனக்குழுமங்களும் எதிர்நோக்கியுள்ளன. இந்நிலையில் ஆட்சியதிகாரங்களில் நண்பர்களைத் தேடும் தமிழ் அமைப்புகளினதும், செயற்பாட்டாளர்களினதும் நடவடிக்கைகள் விமர்சனத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாதது. தமது நாட்டில் மக்களை ஒடுக்கும், அல்லது மக்கள் மீது போர் தொடுக்கும் இந்தியா போன்ற நாடுகளிடமிருந்தோ, அல்லது தமிழ் மக்களுக்கு எதிரான போருக்கு பல்வேறு வழிகளிலும் உதவிய மேற்குலக நாடுகளிடமிருந்தோ நாம் எதனை யாவது பெற்றுக் கொள்ள முடியுமா? என்ற கேள்வி எம்முன் இயல்பாகவே எழுகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் அமைப்புகள் சம்பந்தப்பட்ட நாடுகளின் புலனாய்வு அமைப்புகளின் பிரநிதிகளுடனோ, அல்லது அவற்றிற்கு நெருக்கமாகச் செயற்படுவர்களுடனேயே சந்திப்புகளை மேற்கொள்கின்றன.

அதிகாரங்களுடன் உறவு கொள்வதற்கு மாற்று, அதிகாரங்களை எதிர்கொண்டு போராடுபவர்களுடன் உறவுகளைப் பேணுவதாக அமையும். இங்கு ஒருவகை சகோதரத்துவம் காணப்படுவதையும், பரஸ்பரம் பிரச்சனைகளை பகிர்ந்து சிலவிடயங்களை கற்று கொள்ள முடிவதனையும் உணரலாம். இது அதிகாரங்களுக்கு உவப்பான விடயமல்ல என்றாலும் இதையிட்டு அவர்களுடன் குலாவும் தமிழர்கள் அச்சப்படத் தேவையில்லை. இலக்கு ஒன்றாகஅமையுமாயின், வெவ்வேறு தரப்புகள், இம்முயற்சிகளை சமாந்தரமாக மேற்கொள்ளுவதில் குழப்பங்கள் ஏற்பட இடமில்லை.

தாயகத்தில், தமிழ் தேசியக்கூட்டமைப்பு, புலத்தில் உலகத்தமிழர் பேரவை, நாடு கடந்த அரசாங்கம் என்பவை அதிகார மையங்களிடமிருந்தே தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனவாகத் தெரிகின்றன. அளவெட்டியில், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நடாத்திய கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிறிலங்கா இராணுவத்தினால் தாக்கப்பட்டமையை, அவர்கள் முதலில் அமெரிக்கத் தூதரகத்திடம் முறையிட்டார்கள், பின்னர் சிறிலங்கா காவல்துறை அதிகாரிக்கு முறையிட்டார்கள். ஆனால் ஒரு அடையாளத்திற்காகவாவது, மக்களைத் திரட்டி தமது எதிர்ப்பினைக் காட்ட முற்படவில்லை. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி, அதற்கான வெளியொன்று அங்கு இல்லை என அவர்கள் காரணம் கற்பிக்க முடியும். ஆனால், இத்தனை அடக்குமுறைகளுக்கும் மத்தியிலும் மக்கள் திரண்டு வந்து ஆர்ப்பாட்டம் செய்த நிகழ்வுகள் சில அங்கு அண்மையில் நடைபெற்றுள்ளன. தேர்தலில் வாக்குகளை பெறுவதுடன் மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்பு அறுந்து விடுவதனால், குறைந்தபட்சம் அதற்கான முயற்சிகள்கூட மேற்கொள்ளப்படவில்லை.

**இவர்களால் வழங்கப்படும் தத்துவ விளக்கங்கள், மேற்கோள் காட்டல்கள், கட்டுடைப்புகள் எல்லாமே எதிர்ப்பரசியலை தகர்த்தெறிய வைப்பதை நோக்காக கொண்டவை.**

கடந்த இருவாரங்களில், மக்கள் போராட்டம் தொடர்பான இரண்டு விரிவுரைகளுக்கு செல்லும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ஒன்று அருந்ததி றோய் அவர்களது 'இந்திய அரசின் மக்கள் மீதான போர்' என்ற தலைப்பிலான உரை. மற்றயது, BBC Radio 4 இன் ஏற்பாட்டில் நடந்த 'சுதந்திரத்தை பாதுகாத்தல்' என்ற கருத்தரங்கு. இங்கு பர்மிய ஜனநாயகக் கட்சியின் தலைவி ஆங் சான் சூசி அவர்களது உரையடங்கிய காணொளியை பர்மிய அதிகாரிகளுக்கு தெரியாமல், அங்கிருந்து கடத்தி வந்து ஒளிபரப்பினார்கள். கேள்வி நேரத்தின்போது, அவர் செய்மதி தொலைபேசி இணைப்பினூடாக பதில்களை வழங்கினார்.

இரண்டு உரைகளும் வெவ்வேறு புவியியல் தளத்தில் கவனம் செலுத்துபவையாக அமைந்திருந்தாலும், அடக்குமுறைகளை எதிர்கொள்ளுதல் என்ற விடயத்தில் ஒத்த கருத்துடையதாக அமைந்திருந்தன.

இலங்கைத்தீவு விடயமாக கருத்துச் சொன்ன அருந்ததி றோய், அங்கு நடந்தது ஒரு இனப்படுகொலை எனக்குறிப்பிட்டதுடன், அங்கு அதிகாரத்திற்கு எதிரான எதிர்ப்பியக்கம் முறியடிக்கப்பட்டுவிட்டது என்பதனை நாம் கவனிக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். (விடுதலைப் புலிகளை என்று குறிப்பிடாவிட்டாலும்) தமிழ் மக்களின் எதிர்ப்பியக்கம் ஏன் எவ்வாறு தோற்கடிக்கப்பட்டது என்பதனை நாம் மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார். இங்கு எதிர்ப்பரசியல் என்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியிருந்தமை கவனிக்கத்தக்கது. அதிகாரத்துடன் சமரசம் செய்வதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆங் சான் சூசி இன் நிலைப்பாடும் இத்தகையதே. 1990ம் ஆண்டு, பர்மிய பொதுத்தேர்தலில் அவரது கட்சி பெருவெற்றி அடைந்ததைத் தொடர்ந்து அவர் மீது விதிக்கப்பட்ட வீட்டுக் காவல் 2010ம் ஆண்டு நவம்பரில் விலக்கப்பட்டது. இடையில் சிலகாலம் இது தளர்த்தப்பட்டிருந்தாலும் ஏறத்தாள பதினைந்து வருடங்கள் அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவரது National League for Democracy Party உறுப்பினர்கள் பலர் இன்னமும் சிறையில் வாடுகிறார்கள். இருப்பினும் அதிகாரத்திற்கு எதிரான அவரது செயற்பாடுகள் ஓய்ந்து விடவில்லை.

இந்த இரண்டு பெண்களிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது.

## ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Sharon | 020 8672 9353 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Prime Foods | 020 8682 3777 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| Spice way | 020 8685 1122 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Ruby Food Store | 020 8813 9663 |
| Ruby restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

britishtamilsathletics

# 3 ANNUAL
## British Tamils Athletics Meet
# GRAND FINAL

MAIN SPONSOR

LYCATEL

3வது வருடமாக நடைபெறும் மாபெரும் பிரித்தானிய தமிழர் மெய்வல்லுனர் போட்டி

**Sunday 17 July 2011**
at
## LEA VALLEY ATHLETICS CENTRE
**61 Meridian Way, London N9 0AR**
**From 9.00am**
**800m, 1500m, Long Jump, High Jump, Triple Jump**
**Finals will be held on Sunday 10 July 2011 from 10am**

# SWIMMING

**Saturday 16th July 2011 from 04:00 PM**
**SOUTHGATE LEISURE CENTER**
**Fusion, Winchmore Hill Road,**
**Southgate, London, N14 6AD**

Car Park: Free
Children Under 5 Free
Children Under 12 - £2
Adult - £5

- அணிவகுப்பு
- பாரம்பரிய நிகழ்வுகள்
- அனைத்து வகையான தடகள நிகழ்வு
- சிறுவர்களுக்கான மெய்வல்லுனர் போட்டி

SOUTH EAST LONDON
## Blue House
**QUALIFYING MEET**
Sunday 26 June 2011
From 10.00am
**LADYWELL ARENA**
Silvermere Road
Catford, SE6 4QX

**SWIMMING**
Saturday 25 June 2011
From 2.30pm
**LEWISHAM LEISURE CENTRE**
Lewisham High Street
Lewisham SE13 6NJ

**Contacts:**
Manager
Woolwich
London, SE18 7BZ
**M: 07546771278, 07403573695**
F: 020 8150 5667

NORTH WEST LONDON
## Green House
**QUALIFYING MEET**
Athletics
Saturday 25 June 2011
From 9.00 am
**PERIVALE PARK ATHLETICS TRACK**
Stockdove Way, Perivale,
Greenford UB6 8TJ

**SWIMMING**
Sunday 03 July 2011
From 04:00 PM
NORTHHOLT LEISURE CENTER
Eastcote Lane North, Northholt, UB5 4AB

**Contacts:**
Manager
4 Clarendon Road, Watford, WD24 6RW
**M: 07963261266, 07709655651**
F: 020 8150 5667

OUTER LONDON
## Orange House
**QUALIFYING MEET**
**COVENTRY**
Sunday 19 June 2011
From 10am
**LYNGHALL SCHOOL**
BLACKBERRY LANE
COVENTRY

**MILTON KEYNES**
Sunday 26 June 2011
From 10am

**SWIMMING**
Sunday 3 July 2011
**MILTON KEYNES**
From

**Contacts**
Manager

SOUTH WEST LONDON
## Red House
**QUALIFYING MEET**
Sunday 3 July 2011
From 1.00pm
**TOOTING BEC ATHLETICS TRACK**
Tooting Bec Road, London
SW17 3NP

**SWIMMING**
Saturday 25 June 2011
**MERTON PARK POOLS**
London Road, Morden
Surrey, SM4 5HE

**Contacts**
Manager
407 London Road
Mitcham, Surrey
CR4 4BG
F: 020 8150 5667

NORTH EAST LONDON
## Yellow House
**QUALIFYING MEET**
**Saturday 25 June 2011**
From 9.00am
**LEA VALLEY ATHLETICS CENTRE**
61 Meridian Way
London N9 0AR

**SWIMMING**
**Saturday 02 July 2011**
From 4.00pm
**SOUTHGATE LEISURE CENTRE**
Fusion
Winchmore Hill Road
Southgate, London, N14 6AD

**Contacts :**
Manager
251B Fore Street
Edmonton, London, N14 6AD
**M: 07425812152, 07956446195, 07737157428**
F: 020 8150 5667
E: yellow@btsc.org.uk



Organised By:

British Tamils Sports Council

BTSC Registered in England 7114337

More Information:
**www.btsc.org.uk**
E.Mail : info@btsc.org.uk

**Tel: 020 3137 1213**
**Fax : 020 8150 5667**

# குரலிழந்த தமிழ் மக்கள் நிலத்தையும் இழக்கிறார்கள்



ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் தமிழக சட்டசபைத் தீர்மானங்கள் என்பனவற்றிற்கு எதிராக கண்டனங்களை வெளியிடத் தொடங்கியுள்ளது சிங்களதேசம்.

சனல்-4 தெலைக்காட்சியின் மீது வழக்குத் தொடரப்போவதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்த அதேவேளை, தமிழக முதல்வர் மேற்கொண்ட தீர்மானம் பேச்சுவார்த்தையை, நாட்டின் அபிவிருத்தியை இந்திய முதலீடுகளை பாதிப்பதாக, முஸ்லீம் காங்கிரஸ் எம்.பி எச்.எம்.எம்.ஹறீஸ் கூறுகிறார்.

அதிகாரத்தில் அமர்ந்துவிட்டால் அதனை தக்கவைப்பதற்கு, எப்படியெல்லாம் நடந்து கொள்ளவேண்டுமென்பதைத்தெரிந்துகொள்ள இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

பேச்சுவார்த்தைகள், காலத்தை இழுத்தடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் தந்திரோபாய உத்திகள் என்பதை ஹரீஸ் உணர்ந்து கொள்வார்.

அதே வேளை திருமலையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரச்சார மேடையில் 'எம்முடன் பேச்சுவார்த்தை ஒன்றினை நடாத்தி, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் ஊடாக, அனைத்துலகின் அழுத்தங்களிலிருந்து விடுபட முடியும்' என மகிந்தருக்கு இரா.சம்பந்தன் அவர்கள் ஆலோசனை வழங்கியிருந்தார். படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரம் மக்களைக் கோயில் கணக்கில் போடச் சொல்கிறாரா சம்பந்தன்.

ஆகவே சம்பந்தன் நல்லவர், ஏனைய சில கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே பிழையானவர்களென்று கோத்தபாயா கூறுவதில் சில உண்மைகள் இருப்பதுபோலுள்ளது. அதாவது கூட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவிக்க மகிந்த சகோதரர்கள் முயற்சிப்பார்களென்பதை உணர்ந்துகொள்வது கடினமான விவகாரமல்ல.

அத்தோடு தம்மோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவாறு, பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றினை அமைப்பது, சந்தேகத்தை தோற்றுவிப்பதாக சுரெஷ் பிரேமச்சந்திரன் எச்சரிப்பது குறிப்பிடத்தக்கது.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றும் எட்டப்பட மாட்டாதெனவும, இந்தியாவின் அழுத்தத்தாலேயே அரசுடன் பேசுகிறோமெனக் கூறுவதாலும், கூட்டமைப்பு எதனை வெளிப்படுத்த முனைகிறது என்பது தான் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பலத்த சந்தேகம்.

குண்டுதுளைக்காத காரை வழங்கிய சந்திரிக்காவை நம்பியது போன்று, மகிந்தரையும் நம்ப ஆரம்பித்துவிட்டாரோ சம்பந்தர் என்கிற கேள்வியில் இடமுண்டு.

நில ஆக்கிரமிப்பில் தீவிரமாக ஈடுபடும் பேரினவாத அரசுக்கெதிராக, மக்களை அணிதிரட்ட வேண்டிய கூட்டமைப்பு, மகிந்தரின் காலத்தை இழுத்தடிக்கும் பேச்சுவார்த்தை என்ற வலைக்குள் விழுந்துவிட்டது போல் தெரிகிறது.

தமிழர் பிரச்சினைக்கு தகுந்த அரசியல் தீர்வு காண்பது இலங்கை அரசின் பொறுப்பு என்றும் அதில் இந்தியா தலையிடாது என தெளிவாக சிவசங்கர் மேனன் கூறியிருந்தும், இந்தியாவின் நிர்ப்பந்தத்தால் பேசுகிறோமென கூட்டமைப்பு கூறுவது வேடிக்கையாகவிருக்கிறது.

அதேவேளை தமிழ்மக்களின் அரசியலையும், அதற்கான போராட்டத்தையும் கூட்டமைப்பின் கைகளில் ஒப்படையுங்களென்று, புலம்பெயர் மக்களைப்பார்த்து அறிவுரை சொல்லும் ஆய்வாளரொருவர் இந்தியாவின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுவதை ஏற்றுக்கொள்ளும் கருத்தியலை கொண்டவரென்று நம்பலாம்.

சிங்கள தேசத்துடன் உரசல் இன்றி, அணைத்துச் செல்லும் பாதையில் இருந்து தவறிச் செல்லக்கூடாதென பி.இராமன் சொல்லும் செய்திக்கும், இவருக்கும் அடிப்படையில் அதிக வேறுபாடு இல்லை.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஜெயபுரம் கிராமத்தின் வீதியொன்றிற்கு 'மகிந்த இராஜபக்சே மாவத்தை' எனப் பெயர் சூட்டப்பட்ட விவகாரத்தை, இவர்கள் செய்தித் தாள்களில் படிப்பதில்லை.

மண்டைதீவிலுள்ள 150 குடும்பங்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டதோடு 40 ஏக்கர் நிலம் கடற்படையினரால் உயர்பாதுகாப்பு வலையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 18 கிராம சேவையாளர் பிரிவுகளை இணைத்து, தனியான பிரதேச சபையொன்றை அமைக்குமாறும், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுவதை தடுப்பதற்கும், கிரான் சமூக பொருண்மிய அபிவிருத்திக் கழகத்தினால் அண்மையில் பெரும் ஆர்ப்பாட்டமொன்று நிகழ்ந்தது.

இத்தகைய இன ஒடுக்கு முறைக்கு எதிராகன போராட்டங்களை மக்கள் பயன்படுத்தும் வகையில் எழுத்து மூலம் விழிப்புணர்வை உருவாக்க வேண்டிய மார்க்சிய எழுத்தாளர்கள், உரிமைப் போராட்டத்தை கூட்டமைப்பிடம் உயில் எழுதிக் கொடுங்கள். இந்தியாவோடு இரண்டறக் கலந்து கொள்ளுங்களென்று பிதற்றக்கூடாது.

2006 ஆம் ஆண்டு சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் சம்பூர் மீது மேற்கொண்ட படையெடுப்பினால், சம்பூர் மேற்கு கூனித்தீவு மற்றும் நவரெட்ணபுரம் பகுதிகளிலிருந்து 5961 மக்கள் விரட்டப்பட்டனர்.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

கூட்டமைப்பு, அரசுடன் இன்னும் பேசிக் கொண்டிருக்கும் போது, அந்த பூர்வீக தமிழ் குடிகள், அகதி முகாம்களில் தான் வாழ்கின்றார்கள்.

எத்தனையோ சர்வதேச அழுத்தங்கள், எந்த வடிவத்தில் வந்தாலும் இன அழிப்பு நடவடிக்கைகளை சிங்கள தேசம் கைவிடவில்லை.

தமிழ்மக்களின் காணிகளை, பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து, அதிலிருந்து கிடைக்கும் நிதியில் இதுவரை பெற்ற கடன்களுக்கான தவணைப்பணத்தை வட்டியோடு செலுத்த இலங்கை அரசு முற்படுகிறது.

அடுத்த 10 வருடங்களுக்கு பல்வேறு நாடுகளுக்கும் நிதி நிறுவனங்களிற்கும் தவணைப் பணமாக 8 பில்லியன் அமெரிக்க டொலர்களை அரசு செலுத்த வேண்டும்.

இதில் வட்டி மட்டும் 2.5 பில்லியன் டொலர்களாகும்.

இந்த வருடம் ஜப்பானிற்கு 310 மில்லியனும், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு 155 மில்லியன் டொலர்களையும் சிங்கள தேசம் செலுத்த வேண்டும்.

வெளிநாட்டு நேரடி முதலீடுகள், எதிர்பார்த்ததை விட குறைவாக இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் கவலையடைகிறது.

இவைதவிர கடந்த வருடம் மட்டும், மொத்த கடன் தவணைப்பணமாக ·840 மில்லியனை அரசு வழங்கியிருக்கிறது.

மேற்குலகோடு ஏற்பட்டுள்ள முறுகலால், ஜீ.எஸ்.பீ பிளஸ் வரிச்சலுகையை இழந்துள்ள சிங்கள தேசம், தனது மேற்குலகிற்கான 61 விழுக்காடு ஏற்றுமதியை 2015இல் 50விழுக்காடாக குறைக்கப்போவதாக வாய்ச்சவடாலும் விடுகிறது.

ஆகவே புலம்பெயர் சமூகத்தை விளங்கிக் கொள்வதற்கு முன்பாக நாட்டு நடப்புக்களை புரிந்து கொள்வது பொருத்தமானதாகவிருக்கும்.

**பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றும் எட்டப்பட மாட்டாதெனவும், இந்தியாவின் அழுத்தத் தாலேயே அரசுடன் பேசுகிறோ மெனக் கூறுவதாலும், கூட்டமைப்பு எதனை வெளிப்படுத்த முனைகிறது என்பது தான் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பலத்த சந்தேகம்.**

மாதகலில் உள்ள திருவடிநிலைப் பகுதியில் கடற்படைத் தளமொன்றை அமைப்பதற்காக, அப்பிரதேசத்தை நிரந்தர உயர் பாதுகாப்பு வலயமெனப் பிரகடனப் படுத்தப்போகிறது சிங்களம்.

புத்தர் ஞானம் பெற்ற அரசமரத்தின் இலைகளோடு வந்திறங்கிய சங்கமித்த· என்பவர், இங்கு தான் காலடி வைத்தாராம்.

பாலி மொழியில் 'கொலபட்டுண' என்ற இடமே திருவடி நிலை என்று பௌத்த சிங்கள பேரினவாதம் அடம்பிடிக்கிறது.

வர்த்தமானி மூலம் அதனைப் புனித நகராக்கி, பின் நிரந்தர பாதுகாப்பு வலயமாக மாற்றுவதே சிங்களத்தின் ஏற்பாடு.

இந்நிலையில் தமிழர் நிலமென்று எஞ்சியிருக்கப்போவது, மாநகர சபை நகர சபை பிரதேச சபை மற்றும் கிராம சபைகளுக்குரிய வரையறுக்கப்பட்ட நிலப்பிரதேசங்கள் மட்டுமே.

அவைகூட படிக்படியாகப் பறிக்கப்படும் என்பதை கூட்டமைப்பு நன்குணரும்.

நிலம் பறிபோகும் மிக ஆபத்தான சூழலில், அதைத் தடுத்து நிறுத்த தாயகத்திலுள்ள தமிழர் அரசியல் தலைமையால் முடியுமா என்கிற கேள்வி எழுகிறது.

சர்வதேச அழுத்தத்தை இலங்கை மீது திருப்புவதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பங்களிப்பினை தாயக மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதனை இன்னும் சில பிரக்கிருதிகள் உணர மறுக்கின்றனர்.

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET 020 8216 2520 | CROYDON 020 8150 9950 | CITY OF LONDON 020 7 183 2696 | CAMBS 01354 707 911

BBK PARTNERSHIP

www.bbkca.com


Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS

R3

# கிரிபத்தும் சனல் 4 ம் சில ரெஸ்டோரன்டுகளும்



தம்மகொட ஜெயபாலன்
*(யாழில்)*

சுமார் எட்டு இலட்சம் பார்வையாளர் பார்த்த சனல் 4 இன் இலங்கைக் கொலைக்களம் காணொளி உலகின் என்னென்ன மாற்றங்களை ஏற்படுத்தியதோ தெரியவில்லை. இலண்டனில் சில உணவு விடுதிகள் பெரிய மாற்றத்தை அது ஏற்படுத்தியிருக்கிறது.

இவைதொடர்பாக உணவு விடுதிகளின் உரிமையாளர்கள் சிலர் என்னிடம் கருத்துத் தெரிவித்தனர். ஈழத்தமிழர்களால் நடாத்தப்படுகின்ற பல உணவு விடுதிகள் தென்னிந்திய இலங்கை உணவுகளை சுவைக்க வாருங்கள் என்பது மாதிரி 'Srilankan and South Indian Restaurant என்று முகப்பு தட்டியில் எழுதியிருக்கிறார்கள். தென்னிந்திய உணவு வகைகள் என்னும் போது தோசை, இட்லி, வடை என்பன கட்டாயம் இருக்கும். சிறிலங்காவின் உணவு வகைகள் என்றால் சிறிலங்காவிற்கான ஸ்பெசல் உணவு வகைகள் இருக்கும்.

ஒரு வெள்ளைகாரர் சிறிலங்காவுக்குப் போய் கிரிபத் (பாற்சோறு) சாப்பிட்ட ருசியில் கறோவில் ஒரு சிறிலங்கா ரெஸ்ரூரண்டிற்கு போய் கிரிபத் கேட்டிருக்கிறார். ரெஸ்ரூரண்ட் உரிமையாளருக்கு கிரிபத் என்றால் என்னவென்றே தெரியவில்லை. கீரி என்பது தான் கிரி என்கிறார் என புரிந்து கொண்ட அவர் 'ஐயா நாங்கள் கீரி சமைப்பதில்லை' என்றிருக்கிறார். வெள்ளைக்காரரும் விடாமல் 'ஐயோ நான் சிறிலங்காவில் கிரிபத்தை சாப்பிட்டிருக்கிறேன்' என்றிருக்கிறார்.

ஈழத் தமிழருக்கு இப்போது தெளிவாக விளங்கிவிட்டது. கீரி சரியாக உடும்பு போல தானே இருக்கும். உடும்புக் கறியைச் சாப்பிட்டு வந்து தான் கீரிக்கறியை கேட்கிறார் என்று நினைத்துவிட்டு 'ஓ ஓ நீங்கள் சொல்வது சரி. உடும்புக்கறி நல்ல ருசி. நானும் இலங்கையை விட்டு வெளியேறிய பிறகு இன்னமும் உடும்புக்கறி சாப்பிடவில்லை. இங்கே எங்கே ஐயா அந்த உடும்பைப் பிடிக்கலாம்.' என்று அப்பாவியாகக் கேட்டிருக்கிறார்.

இதைக்கேட்ட வெள்ளைக்காரர் தன் தலையில் அடி அடியென்று அடித்து 'ஐயோ அது இறைச்சிக் கறியல்ல, அது ஒரு வகை Pudding' என்று விளங்கப்படுத்தி விட்டு ரெஸ்ரூரண்ட் உரிமையாளரை ஏசியும் இருக்கிறார். 'நீ சிறிலங்கன் ரெஸ்ரூரண்ட் வைத்திருந்தால் சிறிலங்கன் சாப்பாட்டு வகையும் உனக்கு தெரிந்திருக்க வேண்டும். தெரியாவிட்டால் சிறிலங்கன் ரெஸ்ரூரண்ட் என்ற பெயரை உடனே அழித்து விடு. நான் இங்கு பல சிறிலங்கன் ரெஸ்ரூரண்ட்களை பாத்திருக்கிறேன். சிறிலங்கன் உணவு எதுவும் அந்த மெனுவில் இல்லை. ஏன் இப்படி இருக்கிறீர்கள்? என்று முகத்தில் காறித் துப்பாத குறையாக ரெஸ்ரூரண்ட்டின் கண்ணாடிக் கதவை அடித்துச் சாத்திவிட்டு போனார்.

அப்போது அந்த உரிமையாளர் நினைத்துவிட்டார் சிறிலங்கன் ரெஸ்ரூரண்ட் என்ற பெயரை மாற்ற வேண்டும் என்று. அப்படி மாற்றவேண்டிய நிலைமை வெகுசீக்கிரத்தில் வந்தது. சனல் 4 இல் இலங்கை கொலைக்களம் என்ற காணொளி மூலமாக.


இந்த உரிமையாளர் அடிப்படையிலேயே ஈழப் பற்றாளர். இவரது உணவு விடுதிக்கு வெள்ளியும் சனியும் நிரம்ப வெள்ளைக்காரர்கள் உணவு உண்ண வருவார்கள். இவரும் சுவாரசியமாக அவர்களுடன் கலந்துரையாடுவார். எப்போதும் கலந்துரையாடும் போது ஈழப்பிரச்சினையை மெல்ல மெல்ல சொல்லுவார். வெள்ளைக்காரரும் வேதனைப்பட்டுக் கொண்டு கதைகள் கேட்பார்கள். இவருக்கு நல்லதொரு சந்தர்ப்பமாக சனல் 4 இன் இலங்கைக் கொலைக்களம் என்ற காணொளி ஒளிபரப்பாகும் செய்தி கிடைத்தது. ஒரு வாரத்திற்கு முன்பிருந்து தனது உணவு விடுதிக்கு வரும் வெள்ளைக்காரர்களுக்கு இச்செய்தியை சொல்லி கட்டாயம் இதைப் பாருங்கள் என்றும் வற்புறுத்தினார்.

செவ்வாய்க்கிழமை (14.06.2011) காணொளி காண்பிக்கப்பட்ட பிறகு வெள்ளிக்கிழமை (17.06.2011) வெள்ளைக்காரரின் கருத்துக்களை அறிய ஆவலாக இருந்தார். சொல்லி வைத்தாற்போல பல வெள்ளைக்காரர் இவரின் உணவு விடுதியில் கால் வைக்கவில்லை. அடுத்தநாள் சனி பிறகு வந்த ஞாயிறும் ஒருநாளும் பல வெள்ளைக்காரர் இவரின் உணவு விடுதிக்கும் வரவில்லை. இவருக்கு காரணம் என்னவென்று புரியவில்லை.

போன செவ்வாய்கிழமை (21.06.2011) இவரின் வாடிக்கையாளரான வெள்ளைக்காரர் ஒருவர் பக்கத்தில் இத்தாலி ரெஸ்ரூரண்டிற்குள் நுழைவதைக் கண்டார். அவர் சாப்பிட்டு வரும் வரை வெளியில் காவல் நின்று வந்தவுடன் கேட்டார் 'ஏன் ஐயா எங்கள் ரெஸ்ரூரண்டுக்கு வரவில்லை? சட்டென வெள்ளைக்காரரின் முகத்தில் கோபம் சிவப்பாக ஏறியது. 'என்ன ரெஸ்ரூரண்ட் வைத்திருக்கிறாய் நீ. சிறிலங்கன் ரெஸ்ரூரண்ட்.... சனல் 4 இல் இலங்கைக் கொலைக்களம் காணொளிப் பார்த்தபின் சிறிலங்கன் ரெஸ்ரூரண்ட்டுக்குள் நுழைவார்களா? சிறிலங்கா என்ற சொல்லே எனக்கே அதிக ஆத்திரத்தை தருகிறது. என்ன கேள்வி கேட்கிறாய் நீ? உனது வைனை குடித்தால் தமிழரின் இரத்தத்தை குடிப்பது போல் இருக்கிறது. உனது இறைச்சியை தின்டால் அது தமிழரின் தசைத்துண்டு போல் இருக்கிறது. ஒரு கொடுங்கோலனின் நாடு அது. அந்த சிறிலங்கன் ரெஸ்ரூரண்டுக்குள் எவன் நுழைவான். மனிதர்களைப் பிடித்துதின்கின்ற மிருகங்கள் தான் அதற்குள் நுழையும். என் முன்னாலே நிற்காதே. ஓடிவிடு. என்று திட்டித்தீர்த்துவிட்டு போய்விட்டாராம்.

ஆக வியாபாரத்திற்கு மட்டுமல்லாது இரத்தக் கறைபடிந்த Srilankan என்ற பெயரையும் பாவிக்காது இப்போது எல்லோருக்கும் பரீட்சயமான Tamil என்று பெயர் பலகையில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். இது தமிழ் மக்களுக்கும் தமிழுக்கும் கௌரவமும் கூட.

SRI KOLKATTA KALI MATHA ASTROLOGER



Andaman, Nicobar (India)
FAMUS ASTROLOGER
PANDITH
G.V. RAMAN BANDARI
உலக மாந்திரீக சக்தி



The Pundit can read the Past, Present and Future by hand Prediction, Name Date of Birth, Horoscope relating to love education, money and Are you Suffering with financial Matters Job, Family Problems, Love, Education, Marriage problems, Health, Children Problems, Depression, Enemy Problems, Evil Spirit problems. The Holy spirit will guide you to meet and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealousy and black magic permanently with superior strength & holy given power to protect you and your family from evil things.

100% guarantee Removal of Evil Spirits & Black Magic of all Religion & Communities by Performing Special type of Pooja's & Prayers

Address : OFF LICENCE CONVINENCE STORE
EELAM ENTERPRISES.164 B, MITCHAM ROAD, TOOTING.
LONDON. SW17 9NJ, OPP St BONIEFACE CHURCH
(11 AM TO 8PM. 7 DAYS WEAK)

MOBILE : 07438188 6069 | 079613787375
(ALL TYPES OF BLACK MAGIC REMOVE IMMEDIATELY)

GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்







எலி
கண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
07983 589 993
07723 467 012

# நிலமும் புலமும்



வ.கணேஸ்
*(ஒருபேப்பருக்காக)*

14.06.2011 அன்று சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய இலங்கையின் கொலைக்களம் கொடிய காட்சிகளை உள்ளடக்கியதாக இருந்தாலும் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இதே மாதிரி கொடிய காட்சிகளை நேரில் பார்த்தவர்கள் நிறையப்பேர் உள்ளனர். ஆனாலும் இதைப்பார்வையிட்ட மேற்குலக மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சனல்-4 இன் செய்திப்பிரிவின் தலைவர் கூறியிருந்தார் இதைப்பார்ப்பவர்களின் மனங்களில் வருடக்கணக்கில் நிலைத்து நிற்க கூடுமென்று. அவருடைய இந்தக் கருத்தை கேட்டவர்களே ஆயிரக்கணக்கில் இந்த ஆவணப்படத்தை பார்ப்பதைத் தவிர்த்திருப்பார்கள். தங்கள் தங்கள் மனங்களை தாங்களாகவே நோகடிக்க யார்தான் விரும்புவார்கள். சனல்-4 காட்டிய காட்சிகளை விடவும் நாளாந்தம் நடந்தவைகளை புலிகளின் ஊடகப்பரிவு இறுதிவரை நிறையவே சில தொலைக் காட்சிகளுக்கு இங்கே அனுப்பிவைத்திருக்கின்றனர். அந்தக்கொடூர காட்சிகளை நாம் மீட்டுப்பார்ப்போமேயானால் சனல்-4 காட்டியது சொர்ப்பம் தான் என்பது புலப்படும்.

ஐரோப்பிய நாடுகளில் ஒருவர் ஒரு கத்திக்குத்தில் இறந்துவிட்டால்கூட அந்த இறந்த உடலை தொலைக்காட்சியில் காட்ட மாட்டார்கள். அண்மையில்கூட பாகிஸ்தான் இராணுவத்தினரிடம் ஒரு இளைஞன் தன்னை சுடவேண்டாம் என்று கெஞ்சி கூத்தாடுகிறான். மீறியும் அந்த இராணுவம் அவனை சுட்டுக்கொன்றது. இதைக் கூடுதலாக எல்லாத் தொலைக்காட்சிகளும் காட்டியது. ஆனால் அவனை சுடும்வரையான காட்சிகளை காட்டிவிட்டு சுடுவதை காட்டாமல் எதிரே நின்ற இராணுவத்தால் சுடப்பட்டார் என்று சொல்லி முடித்துவிட்டார்கள்.

**இங்கே சட்டமில்லை சடலத்தைக் காட்டக்கூடாதென்று. ஆனாலும் தங்களால் சிலரது இளகிய மனங்கள் புண்படக்கூடாதென்று ஒரு தார்மீக எண்ணத்தோடு இவைகளைக் காட்டுவதை தவிர்க்கிறார்கள்.**

அப்படி இருக்க சனல்-4 பல கஸ்ரங்களுக்கு மத்தியில் பலரை அணுகி தொகையாக பணத்தை செலவு செய்து இவ்வளவை ஏனும் தொகுத்து வன்னியில் மக்கள் பட்ட துன்பங்களை ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை போல் சிங்கள அதிகார மையம் தமிழர் மேல் செய்த செய்கின்ற கொடுமைகளின் இன்னொரு சாட்சிக்கோப்பாக எங்களிடமும் உலக நாடுகளிடமும் ஐ.நா. மன்றத்திடமும் மேலும் பல தொண்டர் அமைப்புக்களிடமும் இந்தக் சாட்சித்தொகுப்பை சனல்-4 கொடுத்திருக்கிறது. இந்த இரண்டு முக்கியமான ஆதாரங்களையும் வைத்து உலகம் ஈழத்தில் எஞ்சிய தமிழர்களுக்கு என்ன நீதியை வளங்கப்போகின்றது. இதுதான் எம்முன் நிற்கும் இரண்டு கேள்விகளும். ஆனாலும் வன்னியில் பாதிக்கப்பட்ட அந்த மக்களிடம் இன்னொரு கேள்வியும் எழத்தான் செய்யும்.

அது புலம்பெயர் தமிழர்களை நோக்கியதும் மற்றும் ஈழத்தில்கடந்த ஒன்றரை தசாப்பத்துக்கும்மேலாகபோர்ச் சூழல் அற்று வாழும் அந்த உறவுகளை நோக்கியதுமாக இருக்கின்றது. அதாவது சனல்-4 காட்டிய கொடூர காட்சிகளைவிடவும் வன்னியில் இருந்து அவ்வப்போது நாங்கள் உங்களுக்கு அனுப்பிவைத்தவை ஆயிரம் மடங்கு அதிகமானவை. ஆனாலும் இன்று இரண்டாண்டுகள் கடந்தும் எங்களை வைத்து அரசியல் செய்யவும் எங்களை ஒரு பேச்சுப்பொருளாகவும் பாவிக்கின்றீர்களே தவிர உங்களால் எங்களுக்கு ஒரு ஆக்கபூர்வமான சிறு உதவிகளேனும் செய்ததுண்டா? அல்லது சனல்-4 லின் ஆவணக்கோப்பை பார்த்தபின்னராவது செய்ய வேண்டுமென்று நினைப்பு வந்ததுண்டா? இது தான் அந்த மக்களுடைய இன்றைய கேள்வி.

1983 காலப்பகுதியில் கிழக்கு மாவட்டங்களில் இருந்தும் தென்னிலங்கைப்பகுதிகளில் இருந்தும் மொத்தமாக பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வன்னிக்குள் இடம்பெயர்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரைகூட அகதி என்று அழைக்காமல் அன்பாக ஒரு நேரமேனும் பட்டினி போடாது பொதுக்கட்டடங்கள் நிரம்பி வழிய எஞ்சியவர்களை வீடுகளுக்குள் தங்க வைத்து தாழ்வாரங்களில் படுத்து உறங்கியவர்கள் தான் இந்த வன்னி மக்கள். மக்களுக்கு சமைத்த உணவு வளங்க வீடுகளுக்கு போய் அரிசி கேட்டால் அறைக்கதவை திறந்துவிட்டார்கள் அள்ளிப்போவென்று. மரக்கறி தோட்டங்களுக்குப் போனால் வேண்டியவற்றை பறித்துப் பேவென்றார்கள். தேங்காய் கேட்டார் தேவையானதை ஏறிப்பறித்துக்கொள் என்றார்கள். ஆனால் அன்று தாங்கள் செய்தவைகளை நினைத்து இன்று வருந்தும் அளவுக்கு காட்சிகள் நடக்கின்றன.

வெளிநாடுகளில் உள்ள பல அமைப்புக்கள் விளையாட்டு விழா, இசைநிகழ்ச்சி, ஒன்றுகூடல்கள் என்றெல்லாம் செய்து பணம் சேர்த்து மீண்டும் மீண்டும் தங்கள் தங்கள் ஊர்களிலுள்ள கோவில்களுக்கும், விளையாட்டுக் கழகங்களும்கும் அனுப்பிவைக்கிறார்களே தவிர எல்லாவற்றையும் இழந்து இன்று பட்ட மரங்களாக நீல நிற தார்ப்பாக்களின் கீழ் குந்தியிருக்கும் அந்த உதவி செய்த மக்களுக்கு நன்றிதானும் திருப்பி செய்வோமென்று யாரும் நினைப்பதில்லை. நில புலத்தோடு வசதியாக வாழ்ந்த அந்த மக்கள் இன்று அடிக்கொரு ஆமியின் கீழ் அடிமையாகிவிட்டார்கள்.

**இன்று குறிப்பாக யாழ்.மக்களிடம் விடுதலை உணர்வு அற்றுப்போய்க்கொண்டிருக்கின்றது. அதனால்தான் வெற்றிலை சினனத்திலும் சிலரால் வெல்ல முடிகின்றது.**

அத்தோடு ஒரு அமைப்புக்கூட வீட்டுக்கு பத்துரூபாய் சேர்த்து உருக்குலைந்த அந்த வன்னி மக்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் வரவில்லை. மாறாக ரஜனி, விஜய் படங்களுக்கு பாலாபிசேகம் செய்யும் அளவிற்கு பகுத்தறிவு அந்த மக்களிடம் பன்மடங்கு வளர்ந்துவிட்டதா என்று எண்ணத்தோன்றுகிறது.

வன்னியிலிருந்து வவுனியாவிற்குள் இடம்பெயர்ந்து வந்தவர்களில் வசதி படைத்தவர்களும் வெளிநாடுகளில் இருக்கின்றவர்களின் இரத்த உறவுகளும் வவுனியாவில் தங்கிவிட்டார்கள். ஆனால் சொந்த இடங்களுக்குகோ அல்லது ஆமி கைகாட்டிய இடங்களில் திரும்பிப்போய் குடியேறியவர்கள் ஏழை எளிய மக்கள்தான் அதிகமானோர். அதனால்தான் அன்று மாங்குளத்தில் ராஜபக்சே பேசும்போது சொன்னார் வெளிநாட்டில் உள்ளவர்கள் உங்களுக்கு ஒரு டொலர் கூட தரமாட்டார்கள் மாறாக உங்களை வைத்து அரசியல் செய்வார்கள் என்று.

இவரது கூற்றை வைத்து G.T.V. இரண்டு நாட்களாக செய்திவீச்சில் ஆய்வு செய்து உண்மையை ஓரம்கட்டி தெளிவற்ற ஆய்வொன்றை தயாரித்திருந்தார்கள். நானொன்றும் அடக்குமுறையாளருக்கு அடிக்கழுவும் எண்ணத்தோடு இதை எழுதவில்லை. மாறாக மகிந்தரின் இக்கூற்றை புலம்பெயர் தமிழர்களுக்கும் இன்று விடுதலை உணர்வை கொஞ்சம் கொஞ்சமாக துறந்துவரும் ஈழத்து உறவுகளின் காதுகளில் உறைக்கும்படி இந்த ஆய்வை G.T.V. மேற்கொண்டிருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் உறவுகள் இன்றி வசதியற்ற அந்த வன்னி மக்களுக்கு மகிந்த அரசினால் வளங்கப்படும் புளுத்த அசிரியானாலும் அது அவர்களுக்குப் பொன்னாகத்தான் தெரியும். ஆக இங்குள்ள தமிழ் ஊடகங்களுக்கும் தமிழ் அமைப்புகளுக்கும் புலம்பெயர் தமிழர்களுக்கு ஈழத்தில் இருக்கும் தமிழ் உறவுகளையும் நாங்கள்தான் அரவணைக்க வேண்டுமென்ற விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவேண்டும்.

**சுடுகவி...**
**சுடுகவி... சுடுகவி...**

பியர் கான்கள் – சிலரை
சுகர் காரனாக்க
பசுமதி அரிசியோ – பலரை
சப்பாத்தியாக்குது...

Challenger Services
Group Holiday and Tour Services
Tours for 2011/2012
- Feb 2012 - Egypt – Cairo/Luxor/Aswan 9th to 18th February (£879.00)
- March 2012 - Bangkok, Chaing Mai, Malaysia & Bali (£1999.00)
- April 2012 - Bangalore - Mysore- & Tamil Nadu Tour
- May 8th 2012 Walsingam (£14.00)
- June 2012 - China 18th - 26th June (£999.00)
- July 2011 - Lourdes 21st - 25th (£230.00)
- Sep Lourdes 3rd Sep to 6th Sep By Air £330.00
- September 2011: North India 17th - 30th (£1290.00) Varnasi
- November: Cambodia, Vietnam & Singapore 10 Days £1776.00

Late booking may increase the cost of the trip due to the varying value of Sterling (£)
For further information on any of these scheduled trips please contact
A.E.Joseph - Pilgrimage Tours
62 Canadian Avenue, Catford, London SE6 3BP. Email: aejoseph90@hotmail.com
Tel/Fax: +44 (0) 20 8697 1608 | Mobile: 07940782282

OFF-LICENSE SHOP FOR SALE
Epsom, Ewell, Surrey இல் A24 க்கு
அருகாமையில் கடை விற்பனைக்குண்டு.
- Weekly Turnover - 6500 to 7000
- Rent 14,000 per Annum.
- Rates £60 month
- Oyster Agent
- ATM Income of £4000 a year
Contact: Nesan
- Lease for 25 Years, Price £47,000
Tel: 07816859744

திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் பலாலி வீதியில்
சம்பத் வங்கிக்கு (Sampath Bank) அருகில் பெற்றோல்
நிலையத்திற்கு முன்பாக மடத்தடி ஒழுங்கையில்
(கராஜ்(Garage) ஒழுங்கையில்) 2-2/3
பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு
யாழ்ப்பாணத்தில் காணி உடன் விற்பனைக்கு உள்ளது!!
தொடர்புகளுக்கு:
0044 7958 676 694 / 0094 777 268 668

RAJ SCIENCE TUITION
LIMITED SEATS ONLY AVAILABLE
ENROLL NOW
Contact:
07903501336
07794424147
Science subjects ONLY from Grade 8 to GCSE
WE OFFER
- Exam Preparation
- Supplementary Lessons
- Model Question Paper
Tutor Profile : Master in Physiotherapy (MPT) with 12 years' experience and currently working in King's Hospital.
3 YEARS TUTORING EXPERIENCE IN SCIENCE SUBJECTS.

Meera Arnold & Co
for all your accounting needs...
pay roll
Accountancy
Auditing
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

# குழப்பமே, உன் பெயர்தான் நாடு கடந்த அரசாங்கமா?

சுகி
*(ஒரு பேப்பருக்காக)*

ஒரு பேப்பரின் 142 வது இதழில் 'ஒரு வருட நிறைவு காணும் நாடு கடந்த அரசின் மீதான ஓர் பார்வை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில், தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு உறுப்பினர்களின் பின்னாலும் ஆயிரக்கணக்கில் அவர்களுக்கென வாக்களித்த மக்கள் இருப்பதை மறுத்துவிட முடியாது என குறிப்பிட்டிருந்தேன். அப்போது, நா.க. அரசாங்கமானது, தனிமனிதன் ஒருவருக்கு அதிகப்படியானதும், அளவிற்கு மீறியதுமான சக்தியை கொடுக்குமானால் அது ஜனநாயகத்தின் உயிர்ப்பை பாதிக்கும் எனக் காரணங்காட்டி அதனை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட உறுப்பினர்களில் கணிசமான தொகையினர் மறுத்தமை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன.

யாப்பில் மாற்றம் வேண்டி நின்ற மேற்படி உறுப்பினர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, யாப்பினை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட மறுத்தமைக்காக அவர்களை நாடு கடந்த அரசாங்கத்தின் உறுப்புரிமையிலிருந்து விலக்கிவிட்டதாக நா.க.அ 26.03.2011 அறிவித்தது. இவ்வாறு விலக்கப்பட்ட உறுப்பினர்கள் இணைந்து நாடுகடந்த அரசின் ஜனநாய அணி என்ற பெயரில் இயங்கி வருக்கிறார்கள். அவர்கன் தமது மூன்றாவது அமர்வை 03.06.2011 பாரிசில் உள்ள நந்தேர் நகரில் தொடர்ந்து மூன்று நாட்கள் நடாத்தினார்கள்.

நாடு கடந்த அரசாங்கம் தொடங்கி ஒரு வருடம் நிறைவடைந்த நிலையில், அதிலிருந்து விலக்கப்பட்ட, மற்றும்தாமாக விலகிக் கொண்ட உறுப்பினர்களின் இடத்தை நிரப்புவதற்கு, தற்போது 'முன்வந்துள்ளார்கள். அவர்களது இணையதளத்தில் இது பற்றி வெளியிட்ட செய்தியில் 29 (சரியான தொகை இதை விட அதிகம்) வெற்றிடங்கள் உள்ளதாகவும், அதை நிரப்புவதற்கு முன்பு தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்படாதவர்களில் அடுத்த நிலையில் உள்ளவர்களை நியமிப்பதற்கும், பிரதமர் உருத்திரகுமாரன் போன்று போட்டியின்றி நியமிக்கப்பட்டவர்களில் யாராவது விலக்கப்பட்டிருப்பின் அவர்களது வெற்றிடங்களை நிரப்புவதற்குச் சம்பந்தப்பட்ட தொகுதிகளுக்கு வேட்பு மனு கோரப்படும் எனவும் அங்கு போட்டியிருப்பின் மீள்தேர்தல் நடாத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவித்தலில் யாப்பினை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர் தாமாக விலகியவர்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இந்தச் சந்தடியில் ஒருவருடத்திற்கு மேலாக மின்னஞ்சலுக்கு மேல் மின்னஞ்சல் போட்டும் பதிலே இல்லாமல், தேர்தலில் நடைபெற்றதாக கருதப்படும் சீர்கேட்டினால் முடிவுகள் அறிவிக்கப்படாத இடங்களிலும் மீளத் தேர்தல்கள் நடாத்தப்படும் என எதிர்பார்க்கலாம். அவ்வாறாயின் லண்டன் மாநகருக்கு வெளிமாவட்டங்களுக்கான பிரிவில் போட்டியிட்டவர்களுக்கும் இப்போதுதான் விடை கிடைக்கவுள்ளது. இப்பிரதேசத்தில் மூன்று உறுப்பினர் பதவிகளுக்கு, பினவரும் ஐந்து பேர் போட்டியிட்டார்கள்:

திரு. வன்னியசிங்கம் குணசீலன், திரு. நவரத்தினம் பரமகுமாரன், திரு. லோகேஸ்வரன் சிவசுப்பிரமணியம், திரு.சின்னத்துரை சிறீரஞ்சன், திரு. ஆறுமுகம் விவேகானந்தராசா.

வடகிழக்கு லண்டனில் ஒன்பது பேர் போட்டியிட்டு, முதல் ஐந்து பேருக்கு உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது. இங்கு சசிதர் மகேஸ்வரன் யாப்பில் கையெழுத்திடாமையால் உறுப்புரிமையை இழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**இனி அரசவையில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லாமல் எல்லாமே ஏகமனதாய் நிறைவேற்றுப்படும். ஆனால் நிறைவேற்றியவற்றை, நடைமுறைப்படுத்துவதற்கு மக்களின் பலம் வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டால் சரி.**

செல்வி. ஆர்த்தி ஆறுமுகம் (4154 வாக்குகள்)
திரு. சசிதர் மகேஸ்வரன் (3796)
திரு. சண்முகநாதன் கவிராஜ் (3758)
திரு. செல்வராசா செல்லத்துரை (2796)
டாக்டர். கரன் முருகவேல் (2641)
திரு. மணிவண்ணன் பத்மநாபன் (2608)
திருமதி. வாசுகி முருகதாஸ் (2006) (நா.க.அ உள்துறை அமைச்சின் பிரித்தானிய செயலாளர்)
திரு. ஆறுமுகம் கந்தையா மனோகரன் (1956)
திரு. செந்திநாதன் சுந்தரம்பிள்ளை (990)

அதே போல தென்மேற்கு லண்டனில் ஒன்பது பேர்கள் போட்டியிட்டு ஐந்து பதவி வழங்கப்பட்ட இருந்தது. ஆனால் தேர்தலின் இறுதிப்பகுதி வாக்குப்பெட்டி எண்ணும்போது அதில் உள்ள சீர்கேட்டினால் மீள் தேர்தல் வைப்பதாக இருந்தது. ஆனால் தேர்தல் செலவையும், நேரத்தையும் கவனத்தில் எடுத்து, உறுப்பினர்கள் தமக்கிடையே ஒரு உடன்பாட்டுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இங்கு அதிகபடியான வாக்குக்களைப் பெற்ற திரு. டேவிட் ஜோசப், டாக்டர். நமசிவாயம் சத்தியமூர்த்தி ஆகிய இருவரும் தாமாகவே, விலகிக்கொண்டனர். இவர்களோடு ஐந்து இடங்களுக்கு வெளியே நின்ற திரு. அப்பாதுரை வைரவமூர்த்தியும், திரு. வடிவேலு சுரேன்திரனும் விலகிக் கொண்டார்கள். மிகுதியாக இருந்த ஐவரும் நா.க.அரசின் உறுப்பினராகத் தெரிவாகினர். அதில் திரு. பரமசிவன் கார்த்திகேசன், திருமதி. வாசுகி சோமஸ்கந்தா ஆகிய இரு உறுப்பினர்களும் யாப்பின் மீது கையெழுத்திடாமையால் உறுப்புரிமையை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு உறுப்பினரான திரு. ஜெயசங்கர் முருகையா, ஒருவருடகாலம் உறுப்பினர் பதவியை வகித்தபின், குறைவான மக்கள் வாக்குகளுடன் தாம் தெரிவு செய்யப்பட்டிருப்பதால், தொடர்ந்தும் பதவி வகிப்பது மனச்சாட்சிக்கு உறுத்தலாக உள்ளதாக மே 9ம் திகதி ஒரு பகிரங்கக் கடிதத்தினை வெளியிட்டுவிட்டு விலகிக்கொண்டார். இது பற்றி நா.க.அ ஒரு அறிக்கையோ, எதிர்வினையோ வெளியிடவில்லை.

இங்கு தெரிவு செய்யப்பட்ட மற்றய உறுப்பினர்களான திரு.உத்திராபதிசேகர் (துணைப் பிரதமர்), திரு. தணிகாசலம் தயாபரன் (அரசியல், வெளிவிவகார அமைச்சர்) ஆகியோர் மாத்திரம் பதவியில் உள்ளனர். இங்கு தேர்தல் நடைபெறுமோ அல்லது முன்னர் தாமாக விலகிக் கொண்டவர்களை மீள இணைத்து கொள்வார்களோ என்பது பற்றி இங்கு தேர்தல் ஆணையாளரகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கே தெரியவில்லை. சர்ச்சைக்குரிய யாப்பில் இதுவிடயமாக எதுவித தகவலும் காணப்படவில்லை.

தென் கிழக்கு லண்டனில் மூன்றுபேர் போட்டியிட்டு ஒருவர் விலகியதால் திரு. நிக்கலஸ் மனோரஞ்சன், திரு. ஜனார்தனன் புலேந்திரன் ஆகிய இருவரும் போட்டியின்றி தெரிவாகினர். இவர்கள் யாப்பினை ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டதால் பதவியில் தொடர்வார்கள்.

வடமேற்கு லண்டனில் ஐந்து உறுப்பினர்களின் இடத்திற்கு பதினொரு பேர் போட்டியிட்டார்கள். அங்கு பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

1. திரு. சே. ஜெயானந்தமூர்த்தி - (8357)
2. திரு. டிலக்சன் மொரிஸ் (6434)
3. திருமதி. பாலாம்பிகை முருகதாஸ் (5879)
4. திருமதி. லலிதசொரூபினி பிரதீபராஜ் (5521)
5. செல்வி. ஜெயவாணி அச்சுதன் - (5446)

இவர்களில் திரு. ஜெயானந்தமூர்த்தி, செல்வி. ஜெயவாணி அச்சுதன் ஆகியோர் யாப்பினை ஏற்றுக் கொள்ளாதமையால் பதவி விலக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திருமதி. லலிதசொரூபினி பிரதீபராஜ் யாப்பினை ஏற்றுக் கொண்டு கையொப்பமிட்ட பின்னர், தாமாக விலகிக் கொண்டார். ஏனைய இருவரும் நாடுகடந்த அரசாங்கத்தின் அமைச்சர்களாக உள்ளனர். ஆகவே தற்சமயம் மூன்று பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

இங்கு போட்டியிட்ட ஏனையவர்கள் வாக்குகளின் அடிப்படையில்:

6. திருமதி. சுகிர்தகலா கோபி இரத்தினம்(4959)
7. டொக்டர். சுகந்தமாலா ராதாகிருஸ்ணன் (3988)
8. திரு. நிமலன் சீவரத்தினம் (3675)
9. திரு. சொக்கலிங்கம் யோகலிங்கம் (2739)
10. திரு. சிவபூசம் சுகுகுமார் (1753)
11. திரு. சிவசம்பு சிவராசா (1741)

இவர்களில் அடுத்த நிலையிலுள்ள மூவர் தெரிவு செய்யப்படவுள்ளதாக திரு. உருத்திரகுமாரனால் நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் எந்த அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என அவர்களிடம் கேட்டபோது, அதனை விளக்க அவர்களால் முடியவில்லை.

**மக்களால் அதிக வாக்குகள் வழங்கி தெரிவானவர்கள் விலக்கப்பட்டு, குறைந்த வாக்குகளைப் பெற்றவர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது எந்த வகையான ஜனநாயகம் எனத் தெரியவில்லை.**

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் உள்ளது போன்று, கடந்த தேர்தல் பட்டியலில் இருந்து வெற்றிடங்களை நிரப்புவது, சர்வதேச சனநாயகக் கோட்பாடுகளுக்கு உட்பட்டது ஆகும் என நா.க.அரசின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நா.க.அரசின் தேர்தல் சர்வதேச கோட்பாடுகளில் சொல்லப்படும் விகிதாசாரப் பிரதிதித்துவ முறையில் நடைபெறவில்லை. இங்கு எவரும் கட்சியின் அடிப்படையில் போட்டியிடவில்லை, இங்கு விருப்பு வாக்கு வழங்கும் முறையும் இடம் பெறவில்லை. ஒவ்வொரு வேட்பாளரும் சுயாதீனமான முறையில் போட்டியிட்டனர், அதிகப்படியான வாக்குகளை பெற்றவர்கள் First past the post voting முறையில் தெரிவானார்கள். அப்படியிருக்க விகிதாசார பிரதிநிதித்துவ முறை பற்றி குறிப்பிடுவது குழப்பகரமானது.

இவ்விடயத்தில் மக்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்ற பெயர் மட்டும்தான் உள்ளது. தேர்தலில் மக்களால் அதிக வாக்குகள் வழங்கி தெரிவானவர்கள் விலக்கப்பட்டு, குறைந்த வாக்குகளைப்பெற்றவர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது எந்த வகையான ஜனநாயகம் எனத் தெரியவில்லை.

நா.க.அ ஆரம்பித்து ஆண்டு ஒன்று கழிந்த பிறகும் முதல் கட்டமாக இயற்றிய யாப்புப் பற்றிய விளக்கங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மக்களிடம் முன்வைக்கப்படவில்லை. அதன் ஆங்கிலப் பிரதி எங்குமே காணப்படவில்லை. நா.க.அ கொஞ்சம் கொஞ்சமாக ஊடகங்களிலும், மக்களின் மனதிலும் பேசாப் பொருளாக ஆகிவரும் நிலையில் அதன் இருப்பை காட்டுவதற்கென இடையிடையே அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. அத்தோடு மூன்றாம் அமர்வுக்கு காணப்படும் ஆள்பற்றாக் குறைக்கு, விமர்சனமில்லாமல் ஏற்றுக் கொள்பவர்களே தேவைப்படுகிறார்கள் போல் தெரிகிறது.

இனி அரசவையில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லாமல் எல்லாமே ஏகமனதாய் நிறைவேற்றப்படும். ஆனால் நிறைவேற்றியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மக்களின் பலம் வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டால் சரி.

BAR - RESTAURANT - BANQUETING
FUSHIA
3 Brighton Road, South Croydon, CR2 6EA
www.fushiauk.com
Tel: 020 8680 8833

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை
Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilankaó
யாழ், வன்னி, வவுனியா, மன்னார, மட்டகளப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை!
உங்கள் பொருட்களை இங்கு வந்து பொதி செய்து கொள்ளலாம். உங்கள் இல்லம் வந்து பெற்று அனுப்பும் சேவையும் உண்டு.
தொடர்புகளுக்கு : சிவம் (Sivam)
G14, Big Yellow,
1-3 Wyvern Industriial Estates,
Beverely Way, New Malden, Surrey KT3 4PH
Tel: 02086465222 Mob: 07939550397
Email: info@permainternational.co.uk
Web: www.permainternational.co.uk

# Why did the Indian Delegates Go Home Empty Handed?



By Dr Kumar David

The umpteenth Indian delegation came to Colombo and having wasted fuel for aircraft and charges for 5-star hotels, duly went back empty handed and funny as a comic strip! President Rajapakse handed them a flat 'Nyet' and for once in a lifetime, I must admit, he spoke the truth. "If I make any devolutionary concessions to the Tamils, 13A Plus, Minus, Divided or Subtracted, it will be curtains for me." That much is absolutely true; it has been so starkly obvious to anyone who had brains enough to see (so that excludes Delhi), so why on earth it came as a surprise beats me. The government's parliamentary group met the evening before the esteemed visitors arrived and decided; 'Let's tell them the truth straight from the shoulder and upfront; let's tell them, if we do it we are dead meat.'

There are two ways of understanding history. Theory 1, 'Individuals, personal deals and tricks come first, and as for the facts, who cares for objective material reality'; and the other theory is that 'objective circumstances are determinate and the role of the individual is to dance on this stage'. Fools who thought they could do deals with Rajapakse before the war and have agreed goodies duly stamped and delivered after finishing off the Tigers, are aficionados of the first theory. The protagonists of the second hypothesis, folks like me, who, though they disliked the LTTE, had not the slightest doubt that if the Tigers were wiped out, thereafter the Tamils in Lanka would get nothing. During the final two years of the war, though driving myself hoarse I won few adherents to my appeal that a political solution must be in place first, then do as you will with the sole bargaining chip that the Tamils had, the armed power of the LTTE. Remember Machiavelli? "Armed prophets have conquered and unarmed ones have come to grief."

## Why Rajapakse can't do it ?

Delhi, Sri Lanka's liberal democracy, and the international community have appealed time and again to give the Tamils some autonomy and recognize their rights as a community – too late, too dumb, and too hypocritical having first helped the regime wreck mayhem! The Lankan Left, except for the toadies in government, despises this "chauvinist regime", its hangers-on and its applauders. India, the US and the EU have advocated devolution, self-administration, and a negotiated settlement with non-LTTE Tamil parties, enough to fill a library shelf, but what?

The underlying assumption is that the government, if it so wishes, can do it. What if this assumption is incorrect? What if the balance of power between constituent parties and elements of government, and the mood of the Sinhala-Buddhist mass on which the regime leans for its survival, are such that the regime would court disaster if it made concessions to Tamils? What if objectively, the forces of chauvinism are so strong that in the unlikely event GoSL undergoes a moral epiphany and embarks on a deal with the Tamils, its stability would be shattered? Rajapakse, his brothers and his close advisors are right in thinking along these lines. Having cashed in on and ridden upon the backs of the chauvinists for all this while, if he betrays them now - well we know what happens when extremists think leaders are too soft on minorities; vide Gandhi and Lincoln.

Local society has added its voice to an international chorus demanding GoSL changes track and compromises. Friday Forum, Christian Churches, the National Peace Foundation, the Centre for Policy Alternatives, to mention only better-known organisations in Sri Lanka, have called for change. GoSL was unmovable both before and now two years after the end of the war. How much longer will it take for the penny to drop, for conscientious liberals, Delhi and foreigners to see that the regime isn't going to do anything of the sort? How long before these worthies glimpse that the Rajapakse regime just ain't gonna do it even if the worthies scream themselves hoarse? In this respect Jayalalitha seems more a realist with feet planted on terra firma.

> Folks like me, who, though they disliked the LTTE, had not the slightest doubt that if the Tigers were wiped out, thereafter the Tamils in Lanka would get nothing

The Rajapakse regime will not grant substantial devolution to the Tamils nor "solve the national question". More important, and this is the crucial point, the reason is not because the leadership is plain cussed and chauvinist (it is, but that's not the point), the basic reason is that it cannot make concessions and continue to survive in power. The Bandaranaike-Chelvanayagam Pact on regional councils was torn up in 1958 and the Dudley Senanayake-Chelvanyagam deal buckled in the mid-1960s not because the two premiers were spineless (which they were) but because racist sentiment whipped up on the streets, in society, and in the temple, was too powerful for the government of the day to withstand. It is the malady facing this regime; damned if it does, damned if it doesn't. Fate is not kind to leaders who sign contracts with Mephistopheles or dance with the devil; GoSL is a prisoner of its past.

> How long before these worthies glimpse that the Rajapakse regime just ain't gonna do it even if the worthies scream themselves hoarse?

## The Rajpakse regime's core constituency: Petty-Bourgeoisie

In countries at the stage of development corresponding to Lanka, the petty-bourgeoisie, that is the petty-bourgeois class, is the most numerous and of course the Sinhalese portion is the largest among ethnic groups. As a ballpark figure we could say the Sinhalese are 75% of the total population and the Sinhalese petty-bourgeoisie about two-thirds thereof, that is say half the population. There is some confusion in the careless use of the categories middle-class and petty-bourgeoisie interchangeably; there is overlap but the two should more appropriately be used to denote differences. Strictly speaking the middle-class belongs in the modern economy; good examples would be those young fellows in starched white shirts in private sector companies, professionals, civil servants and corporate managers. The petty-bourgeoisie is more numerous and dominated by the rural mass which is not wage labour in a capitalist production process, but self-employed on the land. The petty-bourgeoisie, neither bourgeois nor working class, and not positioned in the modern capitalist economy, includes the self-employed, the informal economy, small traders and the influential clergy in yellow and the native physician and school teacher in white.

## Closing the loop

The previous description of the government's core constituency should make it clear why it will not, more important why it cannot, agree to any degree of devolution or solve the Tamil question however much jet fuel Mr Manhohan Singh expends and however many delegations he dispatches to the island nation.

The loyalty of the village mass can, and will split when the urban areas turn against the government; and this seems to be happening right now in the universities, business classes and even sections of the working class.

The Ceylon Tamils always detested Rajapakse and the Muslims and Upcountry Tamils, though in cabinet, will desert when times change. Though village society will divide as the government's popularity declines, the loyalty of the hard-core Sinhala-Buddhist petty-bourgeoisie is predicated entirely on whether the government retains an uncompromising attitude to the Tamils. Therefore the odds are, GoSL will remain obdurate; if not ministers like Wimal Weerawansa will be on hunger strike whipping up the mobs, minister Champika Ranatunga's party will walk out, some Mahanayakes may call on the faithful to rise up, and so on. Rajapakse cannot stand against such forces because this is his very heartland.

I feel confident in forecasting that the Tamil problem will not be resolved for so long as this government remains in power. Perhaps it may run its full six-year term, perhaps it will become unstable before that (take no notice of the two-thirds in parliament, those who have been bought will just as quickly desert if the ship begins to list), and perhaps there will be a change of government.

After that a fresh and more hopeful attempt can be made to sort out devolution for the Tamils. Till then it is more constructive to aim at another set of targets; political education, raising public consciousness against narrow nationalism, exposing the primitiveness of chauvinist ideologies and rejecting the ethno-centric state. Its high time democrats, the left and the liberals in Lanka understand that toughness not appeasement is the need of the hour. Also, they should have zero confidence in Delhi, who knows what it will do.

*(edited for space)*

***(Courtesy: South Asia Analysis )***



# Ground prepared for Mahinda Rajapaksa's tryst with destiny



By P C Vinoj Kumar
THE WEEKEND LEADER

The long awaited moment of justice is at hand. It may take a year or two, or even a decade or more, but the arm of justice has just stretched out, and it will hunt the man, even if he takes shelter under the wings of regional powers or invokes the mantra of patriotism to mobilise the masses in the streets of Colombo.

It is too late to change the script. The plot has thickened, and the stage set for a happy ending. The villain will be held accountable for his war crimes and crimes against humanity.

No power on earth can save the man, the man accused of killing thousands of innocent civilians in the name of a war that was fought with the most unfair means, and without witnesses.

The ball has been set rolling to secure justice – justice for the innocent blood spilled and limbs severed, for the thousands of orphaned children, whose cries were hushed up by a conspiracy of silence of the pens.

No longer will the blackout work. The issue has gone beyond the subcontinent, beyond the scope of those who manipulate news in India, and beyond regional geopolitics.

Even if China or India or any other power may use its influence to stop the wheels of justice from rolling forward, move it would, slowly or in spurts, till it achieves its intended purpose.

Empires have fallen. Mighty men thought to be invincible are crumbling before people's power. These are mere reminders that justice would finally catch up, keeping its time with destiny, a time pre-appointed for everyone.

Listen, Mahinda Rajapaksa. The Damocles' sword is now over your head. The countdown has begun. Justice cannot be subverted in the streets of Colombo, by mobilising your thugs and goondas, to whom you may be a hero.

The three-member United Nations Expert Committee that investigated all those allegations that the world has been hearing about your banana republic has submitted its report, which understandably is not to your liking. The Committee has advised the UN Secretary- General to set up an independent mechanism to monitor the Sri Lankan government's investigation into the various allegations – of civilian killings, disappearances etc – related to the final days of the war with the LTTE (Liberation Tigers of Tamil Eelam) in 2009.

Knowing what kind of an investigation your banana republic is capable of conducting, the panel has also suggested the Secretary General to "conduct investigations independently into the alleged violations."

The game is up, Rajapaksa. It took nearly two years for the ghosts of Mullivaikal to make their presence known. They will continue to haunt you till they receive justice.

The moment you dread deep down in your heart is drawing nearer. You gave it away when you said you were prepared to go to the gallows to save your motherland on hearing about the UN report. Smart man you are; you can see the writing on the wall?

# கிறீன் மெமோறியல் வைத்தியசாலை மீள் கட்டுமானம்






கிறீன் மெமோறியல் வைத்தியசாலை மானிப்பாயில் அமைந்துள்ளது. இதுவே தென் ஆசியாவில் ஆரம்பிக்கப்பட்ட முதல் போதனா வைத்தியசாலை என்னும் பெருமையுடையது. அமெரிக்க மிஷனரிமாரால் யாழ்ப்பாண மக்களுக்கு வைத்திய சேவை அளிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட இவ்வைத்தியசாலை யாழ்ப்பாணத்தையும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மக்களுக்கும் சுகாதார சேவை அளிப்பதில் மிகவும் முக்கியம் வாழ்ந்ததாகத் திகழ்ந்தது.


யாழ்ப்பாண நகரத்தில் இருந்த அரசினர் வைத்தியசாலையை பெரிய ஆஸ்பத்திரி என்றும் மானிப்பாயில் இருந்த கிறீன் மெமோறியல் வைத்தியசாலையை சின்ன ஆஸ்பத்திரி எனவும் அழைப்பது வழக்கமாக இருந்தது. நடந்த போரின் காரணமாக இவ்வைத்தியசாலையின் நிர்வாகம் சீர்குலைக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ் ஒரு களஞ்சியசாலையாக உபயோகிக்கப்பட்டு வந்தது.

2004 ஆம் ஆண்டளவில் இவ்வைத்தியசாலை மூடப்பட்டு அதன்பின் நடந்த குண்டுவீச்சுக்களினால் சேதம் ஏற்பட்டு இவ்வைத்தியசாலை முற்றாக மூடப்பட்டு இருந்தது. சிலருடைய முயற்சியின் பலனாக இவ்வைத்தியசாலை கட்டங்கட்டமாக புனரமைக்கப்பட்டு இப்போது சிலபகுதிகள் உபயோகத்திற்கு வந்துள்ளன. இந்த வைத்தியசாலையைப் புனரமைப்பதற்காக ஐக்கிய இராச்சியத்தில் வாழும் மானிப்பாயைச் சேர்ந்த சில வைத்தியர்களும் ஒன்று சேர்ந்து "ஃபிறெண்ட்ஸ் ஒஃப் மானிப்பாய்" என்னும் அறக்கட்டளை ஒன்றினை ஏற்படுத்தி செயப்பட்டு வருகிறார்கள். இந்த வைத்தியசாலையின் புனரமைப்புக்காக நிதி சேர்க்கும் வைபவம் ஒன்று எதிர்வரும் யூலை மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த வைபவத்தில் மானிப்பாயை மூதாதையரின் பூமியாகக் கொண்டவரும் கிரிக்கெட் வீரருமான ரஸல் ஆர்னொல்ட் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். மானிப்பாய் வைத்தியசாலையின் மீள்கட்டுமானப்பணிக்கு உதவி செய்யவிரும்புவோர் இப்வைபவத்திற்கு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் விபரங்களை கீழே காணலாம்.




# KIDS பேப்பர்




By: RAGAVEENA.S




By: SHRINITHIKUMAR

## TONGUE TWISTER

**Black bug bit a big black bear. But where is the big black bear that the big black bug bit?**

**Betty bought butter but the butter was bitter, so Betty bought better butter to make the bitter butter better.**

**Peter Piper picked a peck of pickled pepper**

**Six slippery snails, slid slowly seaward.**

**Penny's pretty pink piggy bank**

**Jolly juggling jesters jauntily juggled jingling jacks.**

**Kindly kittens knitting mittens keep kazooing in the king's kitchen.**

**No nose knows like a gnome's nose knows.**

**The blue bluebird blinks.**

**RED BULB BLUE BULB**
**RED BULB BLUE BULB**

## RIDDLES

What building has the most stories? **Library**

Why are Teddy Bears never hungry? **Because they are always stuffed**

What can you catch but can't throw? **A cold**

What belongs to you but others use it more than you do? **your name**

What can travel around the world while staying in a corner? **a stamp**

You can hold it without using your hands or arms. What is it? **your breath**

What is it that leaps and runs and has no feet? **a ball**

What two keys cannot open any doors? **A donkey and a monkey**

What city has no people? **Electricity**

What do you get when you cross SpongeBob with Albert Einstein? **Spongebob smartypants**



By: Shrinithikumar



By: Abittha





By: Asokan



By: Ragaveena




By: Lakshvinie



By: Ashuvinie



By: Vigaashan



By: Asokan



By: Ragaveena

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.


The winner will be published in the next issue.

***Last issue winner is*** ***Lakshvinie***

**Dear Kids...**

Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it (with your photo) to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!

start



finish

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | R | S | M | R | D | V | F | T | N |
| G | E | Q | Y | Z | A | I | U | W | S |
| T | O | H | I | B | M | A | M | M | A |
| A | P | P | A | N | A | J | E | U | O |
| N | P | T | H | A | M | P | I | P | C |
| K | A | X | T | U | I | K | A | R | S |
| A | T | O | P | C | X | T | U | K | L |
| I | T | M | R | D | V | F | T | N | G |
| U | I | F | U | N | B | R | A | I | N |
| W | S | O | H | I | Q | Y | Z | A | I |

**Hidden Words:**
**Subject: Relation the house in Tamil**
AMMA, APPA, THAMPI, TANKAI, PATTI, MAMI



அன்றைய நாட்களில் நீங்கள் தாயகத்தில் சுவைத்த அதே சுவையை
இங்கு உங்கள் நாவில் தரமாகவும் சுவையாகவும் மீட்டுகிறோம்...
Tolworth இல் தற்போது புதிதாக உதயமாகியுள்ளது!
New Dosa Express
1st Sri Lankan & South Indian Take Away
OPENING SPECIAL OFFER
SPECIAL THALEY
(Only Friday)
£3.99
*While offer last
Sweets Available
3 வடை £ 1.00 மட்டுமே!
Buy any 3 Kottu Get 1 Veg Kothu Free
Free Delivery
0208 337 6593
078 2812 4661, 074 0491 7111
No. 34, Tolworth Rise South Surbiton KT5 9NN
Out Door Catering
Birthday
Wedding
Other orders welcome
Minimum order £ 15 within 3 miles
Payment by: Cash / Credit / Debit Card
HALAL
Veg. & non Veg.
நாவில் சுவையூறும் விதம்
விதமான உணவு வகைகளை
பெற்றுக்கொள்ள நீங்கள் உடனே
நாடவேண்டிய இடம்




12 நாள் சுற்றுலா
மார்கழி திருவெம்பாவை தேர்த்திருவிழா
மற்றும் அறுபடை வீடு தரிசனம்
£999 மட்டுமே
நினைக்க முக்தி திருவண்ணாமலை, தரிசிக்க முக்தி சிதம்பரம், பிறக்க முக்தி திருவாரூர், இறக்க முக்தி காசி இடங்களுக்குச் சென்று வர எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அவ்வாறானதொரு வாய்ப்பை இச்சுற்றுலா மூலம் ஒழுங்கு செய்துள்ளோம். அறுபடை வீடும் சிவ ஸ்தலங்களையும் முறையாக தரிசனம் செய்ய 14 நாட்கள் கொண்ட ஒரு ஆன்மீகச் சுற்றுலா.
• திருத்தணி • பழமுதிர்சோலை • தஞ்சாவூர் • திருப்பதி
• ராமேஸ்வரம் • சுவாமிமலை • மதுரை மீனாட்சி • திருச்செந்தூர் • பழநி
• பிள்ளையார்பட்டி • திருப்பரங்குன்றம் • கன்னியாகுமரி
June 22ம் திகதி புறப்பட்டு July 09ம் திகதி திரும்பும் சுற்றுலாவில் கலந்து கொள்ளுங்கள்.
ஆலப்புழை செல்பவர்களுக்கு அறுபடை வீடு தரிசனம் இலவசம்
ஆலப்புழை படகு சவாரி
கன்னியாகுமரி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, மதுரை, பழனி, திருப்பரங்குன்றம், திருச்சி, Chennai (Shopping)
£999 மட்டுமே
41 வருட அனுபவம்
A/c வாகனம், A/c தங்குமிட வசதி, சுத்தமான சைவ உணவு மற்றும் குடிநீர், எல்லாவகையான வசதிகளும் செய்து தரப்படும்.
மார்கழி மாத சுற்றுலாவுக்கு பதிவு செய்யப்படுகிறது.
உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
முருகன் TRAVELS
அழையுங்கள் 020 7043 4319



சுவை ததும்பும் குளிர் பானங்கள்
Niru BRAND
தாகம் தீர்த்திட
Tamarind
Fruito
Nelli
orange C
Pineapple
Green Berry
Nelli Amla
orange C
Mango
Fruito
Tangy Orange
உங்களுக்காக மேலும் இரு தனித்துவமான சுவையுடைய Tamarind மற்றும் Pineapple பானங்களை அறிமுகப்படுத்துகின்றோம்.
உங்கள் தமிழ்க் கடைகளில் கிடைக்கின்றது...

# பொருளாதாரத் தடை

பாகம் 95

தமிழக சட்டசபையில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க மத்திய அரசைக் கோரும் தீர்மானமும், அதையடுத்து இந்திய அதிகாரிகளின் இலங்கைப் பயணமும், சனல் 4 இல் வன்னிப் படுகொலைகள் பற்றிய காணொளியும் சமீப காலங்களில் ஈழத்தமிழர்களுக்கு சற்று ஆறுதலூட்டும் முக்கிய நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன. ஏதோ எங்களையும் உலகம் கவனிக்கிறது அனுதாபத்தோடும் ஆதரவோடும் பார்க்கிறது என்று சற்று மனமாறக்கூடியதாக எம்மைச் சார்ந்த நிகழ்வுகள் நகர்கின்றன.

இதற்கிடையில் தமிழக முதல்வரிடம் இந்தியப்பிரதமர், இலங்கை ஜனாதிபதி நாங்கள் கூறுவது எதையும் காதில்போட்டுக் கொள்கிறாரில்லை நாங்களென்ன செய்ய முடியுமென்று கையை விரித்துவிட்டதாக ஒரு செய்தியையும் வாசிக்கக்கூடியதாகவிருந்தது.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? இந்தியாவோ முழு உலகோ என்னதான் வற்புறுத்தி ஈழத்தமிழர்களுக்கு அதிகாரத்தில் பங்கு கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டாலும் இலங்கையரசு தனது பௌத்த சிங்கள லங்கா என்னும் பெரும்பான்மையின ஆதிக்கக் கோட்பாட்டை விடப்போவதில்லை. இலங்கை சிங்களவருக்கு மட்டுமே சொந்தம் என்னும் அடிப்படைக் கருத்துருவை (கொண்செப்ற்) மாற்றாது அல்லது மாற்ற முடியாது இருக்கும் இலங்கயரசிடம் போய் இந்தியா அர்த்தமில்லாமல் கெஞ்சுவது போலத் தெரிகிறது. மேற்சொன்ன கருத்துருவில் மாற்றத்தைக் கொண்டுவராமல் எதுவுமே ஆகப் போவதில்லை.

ஒரு பெரியகோட்டை அதில் எதுவித மாற்றத்தையும் செய்யாமல் சிறியகோடாக மாற்றவேண்டுமென்றால் அந்தக் கோட்டுக்குப் பக்கத்தில் அதைவிடப் பெரிய கோடொன்றைப் போட்டு விடுவதைத் தவிர வேறு வழியேயில்லை. அரசியல் ராஜதந்திரத்திலும் இது பொருந்தும். அந்த வகையில், இந்தியா தமிழினத்தின் மீதான தனது அக்கறையைக் காட்ட வேண்டுமென்றால் பாக்கு நீரிணையின் இருபுறத்திலுமுள்ள தமிழர் தேசியத்தை ஒன்றுபடுத்தி ஒருபெரிய கோடாக மாற்றும் ராஜதந்திர நடவடிக்கையில் இறங்கியேயாகவேண்டும். அது கச்சதீவைத் திரும்பப் பெற்றுத் தமிழகத்திடம் ஒப்படைப்பதிலிருந்து திருகோணமலை பலாலி போன்ற படைத்தளங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருவது வரை, அதற்கும் மேலாய் மன்னார்ப் பிரதேசத்துடன் இராமேஸ்வரம் பிரதேசத்தைப் பாதையால் இணைப்பது வரை பல வழிகளிலும் முயற்சிக்கப்படலாம்.

ஆனால் அதற்குப் பதிலாக இந்தியாவின் முயற்சிகள், ஈழத்தமிழர்களைப் பலிக்கடாக்களாக்கி, சிங்கள மேலாண்மைவாதத்திற்குப் பலியாக்கி, பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு அடிமைகளாக்கி, தமிழக மக்களையும் ஏமாற்றி, கையாலாகாத ராஜதந்திரத்தை இலங்கையுடன் பேணும் இந்திய நடுவண்ணரசின் இயலாமையில் போய் முடிந்துவிடுமோ என்று தான் அஞ்ச வேண்டியுள்ளது.

கலைஞரின் சொந்தங்களும் சுற்றங்களும் ஈழத்தமிழர்களின் துயர்துடைக்கப் போகிறோமென்று பாசாங்கு செய்தவாறு இலங்கை வந்து ஜனாதிபதியையும் சந்தித்துத் துதிபாடிச் சென்றனர். அப்போதெல்லாம் அந்தக் குழுவினரின் உள்நோக்கம் இலங்கையில் முதலீடுகளைச் செய்வதும் புனரமைப்புப் பணிகளில் ஒப்பந்தங்களை (கண்டிராக்ற்) பெற்று பணம் சம்பாதிப்பதுமாகத்தான் இருந்தது. இலங்கையரசும் இவர்களின் உள்நோக்கங்களைப் புரிந்துகொண்டு இனப்பிரச்சனையிலிருந்து இவர்களைத்திசைதிருப்பிவிட்டது. தற்போது அதிமுக அரசாங்கம் வந்து இவர்களின் திட்டங்களுக்கு ஆப்பு வைக்கும் நோக்கில் மத்திய அரசிடம் இலங்கையுடனான பொருளாதாரத் தடையை வேண்டி நிற்கிறது.

இலங்கையுடனான எவ்வித அபிவிருத்தி முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்காமையே பொருளாதாரத் தடையின் முக்கிய நோக்கம். இதன் மூலம் ஏற்கனவே இலங்கையுடன் ஒப்பந்தங்களைச் செய்தவர்கள் அவற்றை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டிவரலாம்.

அதனால் பாதிக்கப்படப் போகிறவர்கள் தமிழகத்தின் முந்தைய அரசினால் இலங்கைக்குப் பணம்பண்ண ஏவிவிடப்பட்ட கலைஞரின் சுற்றங்களே. அதிமுக வினருக்கு இதனால் எதுவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. ஸ்பெக்ரம் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் தற்போது மத்திய சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கலைஞரின் மகளும் இலங்கைக்கு இத்தகைய பொருளாதார நலன்களை வேவுபார்ப்பதற்காக வந்து ஜனாதிபதியையும் சந்தித்துத் துதிபாடிச் சென்றமை இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

## அலசுவாரம்

அலசுபவர் : மட்டக்கிளப்பான்

மொத்தத்தில் எல்லோருமே தமிழ் மக்களின் நீண்டகால நன்மைகளைக் கருத்திற்கொண்டு செயற்படுகிறார்களா அல்லது குறுகியகால கட்சியரசியலில் ஆளையாள் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்களா என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வது கடினமாகவேயிருக்கிறது.


நாளைக்கே அதிமுக ஆதரவுச் சக்திகளையும் சட்டசபை உறுப்பினர்களையும் இலங்கையரசு அழைத்து அவர்களுக்கும் புனரமைப்புப் பணிகளில் ஒப்பந்தங்களைச் செய்ய வாய்ப்பளித்தால் இந்தப் பொருளாதாரத் தடை புஸ்வாணமாகிவிடக்கூடும்.

பொருளாதாரத் தடைத் தீர்மானத்திற்குப் பிறகு உடனடியாக இலங்கை வந்த சிவசங்கர் மேனன் தமிழக முதலமைச்சரையும் சந்தித்து ஒருவாறு சமாதானம் செய்துவிட்டுப் போயிருக்கிறார். ஏற்கனவே இலங்கையில் செயல்ப்படும் இந்திய முதலீட்டாளர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் காப்பாற்றும் நோக்கிலமைந்த ஒரு சந்திப்பாக இதனைக் கொள்ளமுடிமேயன்றி இனப்பிரச்சனைத் தீர்வுக்கான சந்திப்பாக இதனைக் கொள்ளமுடியாது.

இலங்கையுடனான கப்பல் போக்குவரத்து தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையில் மத்திய அமைச்சரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. விரைவில் அது இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்குமிடையிலும் தொடக்கப் படவிருக்கிறதாம். அதேவேளை தமிழக முதலமைச்சரோ தம்மால் முன்மொழியப்பட்ட பொருளாதாரத் தடைப் பிரேரணையைக் காரணங்காட்டி இந்தக் கப்பற் போக்குவரத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கோரியதோ? அந்த வைபவத்தில் தமது கட்சி உறுப்பினர்களையும் பங்குபற்றவிடாமல் செய்திருக்கிறார். திமுக காலத்தில் மத்திய அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல் சேவையின் முதலீட்டாளர்கள் டெல்லி அரசினதும், திமுக வினதும் ஆதரவாளர்களாகவே இருந்திருப்பர். புதிய அரசு வந்ததும் இந்த முதலீட்டாளர்களைப் புறந்தள்ள கப்பற் சேவையைத் தற்காலிகமாக நிறுத்தி புதிய டென்ரர்களைக் கோருவதே ஒரேவழி.

ஆக எங்கும் எதிலும் பிஸினஸ்ஸே நோக்காயிருக்கிறது. இன்றைய நிலையில் இந்திய முதலாளிவர்க்கத்திற்கு இலங்கை முதலீட்டிற்குரிய வோர் முக்கிய கேந்திரம். புனரமைப்புப்பணிகள் அனேகம் நடைபெறவேண்டியிருப்பதால் மிக அருகிலுள்ள தமது கட்டுமானச்சக்தியையும் ஏனைய வளங்களையும் இலங்கைக்கு நகர்த்திப் பணம் சம்பாதிக்க இன்றைய சூழ்நிலை அவர்களுக்கு மிக ஏற்றதாயிருக்கிறது. இந்த நிலையில் தமிழக அரசினால் முன் மொழியப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை எந்த அளவுக்கு இந்திய முதலாளி வர்க்கம் வரவேற்குமென்பது தெரியவில்லை. ஒருவேளை பொருளாதாரத் தடைத் தீர்மானத்தை மத்திய அரசு கருத்திற்கொண்டு அதை நடை முறைப்படுத்த வெளிக்கிட்டாலும் அதனை இந்திய முதலாளி வர்க்கம் ஆமோதிக்கப் போவதில்லை. அதனால் பாதக விளைவுகளை அடையப்போவது இந்திய முதலீட்டாளர்களே.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)



## இளந்தளிர்-2011




## நூல் வெளியீட்டு விழா



டாக்டர் சிவ தியாகராஜா அவர்களின் 'மருத்துவக் களஞ்சியம்' எனும் தமிழ் நூல் வெளியீட்டுவிழா கடந்த 18-06-2011 சனிக்கிழமை ரூற்றிங் 'சிவயோகம்' கலா மண்டபத்தில் நடைபெற்றது.

நம்மைப் பாதிக்கும் பெரும்பாலான நோய்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் அவற்றில் பலவற்றைத் தடுக்கும் முறைகளையும் இந்நூல் தெளிவாக எடுத்துரைக்கிறது.

## கும்பாபிஷேக நிகழ்வுகள்



இலண்டன்-லூயிஷம் சிவன் கோவிலின் மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்

**COMPUTER REPAIRS**

உங்கள் கொம்பியூட்டர்

- Slow வாக வேலை செய்கிறதா?
- அடிக்கடி இறுகிப் போய் நிற்கிறதா?
- வைரஸ் ஏதும் பூந்திட்டுதா?
- Error மெசேஜ் வருகிறதா?
- Internet க்கு போனா அறுபத்தி எட்டு windows திறக்கிறதா?

எல்லாம் சரி செய்யலாம்

அழையுங்கள் NO FIX - NO FEE

020 7043 4318

**DATA RECOVERY**

உங்கள் கொம்பியூட்டர்

- Hard disk இறுகிப் போய்விட்டதா?
- மிக முக்கியமான data மாட்டிக் கொண்டதா?
- பிள்ளைகளின் முக்கியமான படங்கள் அழிந்து போய் விட்டதா?

பிரச்சனைக்கு முடிவு கட்ட

அழையுங்கள் NO FIX - NO FEE

020 7043 4318

**A & K Motors** 106 Hill Road, Mitcham, CR4 2HR

- Vehicle Recovery Services 24h/7 Days
- MOT, Repairs & service ALL makes & Models
- Japanese & European Car Specialists In Dingnostic Tests. Engine Tuning-Gear Boxes



Tel/Fax:- 0208 6484910
kulan:- 07903 742 518
Ananthan:- 07985 588 565
Jegan:- 07545 143692

## அருந்தி றோய் அவர்களுடனான கலந்துரையாடல்








பிரபல எழுத்தாளரும் மனிதவுரிமை செயற்பாட்டாளருமான அருந்ததி றோய் அவர்களுடனான சந்திப்பு ஒன்று ஜூன் 11ம் திகதி சனிக்கிழமை சவுத்தோல் பகுதியில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய அருந்ததி றோய், சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான போர் ஒரு இனவழிப்பு நடவடிக்கை எனக் குறிப்பிட்டார்.

இதனை உதாரணமாகக் கொண்டு மக்களின் எதிர்ப்பினை முறியடிப்பதற்கு இந்தியா உட்பட சில நாடுகள் முயன்று வருவதாக அவர் குற்றம் சாட்டினார்

சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் செயற்பாட்டாளர்களின் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார். தமிழ் கார்டியன் பத்திரிகையை சேர்ந்த மதுரா இராசரத்தினம் நிகழ்ச்சியினை நெறிப்படுத்தினார்.

## சிறப்பு நிகழ்வுகள்

கடந்த 11-06-11 அன்று Oasis Acadamy ,Shirley Road Croydon, CR4 2HDஇல் இயங்கி வரும் தெற்கு இலண்டன் தமிழ் பாட சாலையின் பெற்றோர்களுக்கான 'வலுவானதும் ஆரோக்கியமானதும்' எனும் கருப்பொருளில் வகுப்புக்கள் நடைபெற்று தேர்ச்சி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து 'மாணவர் கல்வியில் பெற்றோர்களின் அணுகுமுறை' எனும் பொருளில் விவாதமும் மற்றும் வில்லுப்பாட்டு பிள்ளைகளுக்கான பேச்சுப் போட்டிகளும் இனிதே இடம்பெற்றன. நிகழ்வுகல் பல்வேறு பட்ட திறமைகளை மாணவர்கள் வெளிக்காட்டியிருந்தனர்.

*- தகவல்: பாடசாலை நிர்வாகம்*

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**JUNE 26 SUNDAY**

*வல்வை கோடை விழா*

மண்ணின் மைந்தர்கள் ஞாபகார்த்த வல்லை நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தக் கோடைவிழா நிகழ்வுகளும் வல்லை புளூஸ் விளையாட்டுக் கழகத்தின் பொன்விழாவும்.

நேரம்: காலை 09:00 முதல் மாலை 08:00 மணி வரை

இடம்: Richardson Evans Playing Field,
Roehampton Vale, SW15 3PQ

தொடர்புகளுக்கு: www.vvtuk.com

**JULY 09 SATURDAY**

*மெய்வல்லுனர் போட்டிகள்*

தெற்கு இலண்டன் பாடசாலையின் 28வது 'காந்தி', 'வள்ளுவர்', 'இளங்கோ' ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெறவிருக்கும் மாணவ மாணவியருக்கான வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டு விழா.

அனுமதி: இலவசம்

இடம்: OASIS ACADAMY ,SHIRLEY ROAD
CROYDON, CR4 2HD.

தொடர்புகளுக்கு: www.caea.co.uk

**JULY 17 SUNDAY**

*தமிழர் மெய்வல்லுனர் போட்டி*

மூன்றாவது வருடமாக நடைபெறும் மாபெரும் தமிழர் மெய்வல்லுனர் போட்டி

நேரம்: காலை 09:00 மணி முதல்

இடம்: LEA VALLEY ATHLETICS CENTER
61 Meridian Way, London N9 0AR

தொடர்புகளுக்கு: 020 3137 1213

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகளின் விபரங்களை பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

ஒரு பேப்பர்


# Study with the fastest growing Business School in Europe

London School of Business & Finance

London • Birmingham • Manchester • Worldwide

LSBFஇன் பயிற்சித்திட்டங்கள் யாவும் தொழில் சம்பந்தமானதும், தொழில்சார்ந்ததுமாக இருப்பதுடன் உங்களது தொழிலில் முன்னேற்றம் அடைவதற்கான தகுதி கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஜூலை, அக்டோபர், ஜனவரி, ஏப்ரல் ஆகிய எமது நான்கு ஆரம்ப திகதிகளில் சேருவதற்கு மிகவும் குறைந்த வெற்றிடங்கள் இன்னும் உள்ளன.**

* லண்டனின் மையப் பகுதியில் ஆற்றல் வாய்ந்த, உயர் நோக்கங்கள் உள்ள 150 நாடுகளிலிருந்து வந்துள்ள மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெறுங்கள்.

**குறைந்த வெற்றிடங்களே உள்ளன. முந்துங்கள்!**



**LSBF Business School Programmes**

- Master in Business Administration (MBA)
- Master in International Business (MIB)
- MSc Finance
- MSc Marketing
- LLM in International Business Law
- Bachelor in International Business (BIB)
- Bachelor in Business Administration
- Bachelor in Accounting & Financial Studies
- LLB Law
- School of English

Tel. +44 (0) 207 100 1808
www.lsbf.org.uk

உங்களுடைய பட்டப்படிப்பினைத் தேர்வு செய்வது பற்றி தனிப்பட்ட முறையில் யாரிடமாவும் கலந்தாலோசிக்க வேண்டுமானால் Andrew Rowe உடன் எனும் arowe@lsbf.org.uk மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது 020 7287 7040 என்ற தொலைபேசி எண்ணில் பன்மொழி ஆலோசகர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

# காட்சியாலும் சாட்சியாலும் கலக்கம் அடைந்துள்ள சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு : அறிக்கையும் - எதிர்வினையும்.

பரா பிரபா
(ஒரு பேப்பருக்காக)

பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சி கடந்த 14ஆம் நாள் (14-06-2011) வெளியிட்டிருந்த 'இலங்கையின் கொலைக்களம்' என்ற காணொளிக் காட்சி, சிறீலங்கா அரசாங்கமும், அதன் படைகளும் புரிந்த இன அழிப்பின், போர்க்குற்றத்தின் சாட்சியாக அமைந்திருந்தது. இதனால் மிகுந்த கலக்கமும், கோபமும் அடைந்துள்ள சிறீலங்கா அரசாங்கமும் அதன் பாதுகாப்பு அமைச்சும் எவ்வாறு சனல்-4 மீது சேறு வாரிப்பூசலாம் என ஆற அமர இருந்து சிந்தித்து ஆறு நாட்களின் பின்னர் (20-06-2011) மிக நீண்ட பத்தி ஒன்றை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

இந்தப் பத்தியை வரிக்கு வரி தமிழாக்கம் செய்யும் அளவிற்கு அதில் ஒன்றும் முக்கியத்துவம் இல்லை. இருந்தாலும் சிறீலங்கா அரசாங்கமும், அதன் அச்சு இயந்திரமும் எவ்வாறு அச்சம் அடைந்துள்ளன என்பதை தமிழ் மக்கள், குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அதில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் பற்றி இங்கே சுருக்கமாக ஆராய்ந்து எதிர்வினை கூறுகின்றோம்.

முதலில் இந்தப் பத்திக்கு சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு வடிவமைத்து வெளியிட்டுள்ள படம் இரத்தத்தில் சனல்-4 தொலைக்காட்சியின் குறியீட்டுப்படம் (Logo) இருப்பதாகக் காண்பிக்கின்றது. ஈழத்தின்? கடற்கரைகள் தமிழர் இரத்தில் தோய்ந்து இருக்கின்றது, கடல் நீலம் இரத்த வெள்ளமாக மாறி விட்டது என்பதை எடுத்துக்காட்ட சனல்-4 பிரித்தானியாவின் முன்னணி பத்திரிகைகளில் வெளியிட்ட விளம்பரத்திற்கு எதிரொலியாகவே இதனை சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு வடிவமைத்திருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு வலையமைப்புடன் நெருங்கிய உறவை சனல்-4 பேணி வருவதாக் குற்றம்சாட்டும் சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு, சனல்-4 இதுவரை 4 காணொளிகளையும், 30 பத்திகளையும் தமக்கு எதிராக வெளியிட்டிருப்பதாகக் கூறுகின்றது.

தமது படைகள் வன்னியில் மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொண்டதாகவும், இறுதிப் போரின்போது விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதற்கு அமைவாகவே சனல்-4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் மூவர் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை வந்தனர் எனவும் இதில் கூறப்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் சிறீலங்கா அரசாங்கத்தினால் 2009 மே மாதம் நாடு கடத்தப்பட்டிருந்தமை உங்களுக்கு நினைவிருக்கலாம். நாடு கடத்தப்பட்ட பின்னரும் தமது அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டிருந்த தடுப்பு முகாம்கள், ஜேர்மனியின் நாசி முகாம்கள் போன்று இருப்பதாக தவறான செய்தியை சனல்-4 வெளியிட்டதாக இந்தப் பத்தி குற்றம் சாட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதியாக இருந்த சூசை மற்றும் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வன் ஆகியோரின் மனைவி, பிள்ளைகள் போன்ற பலரைக் கைது செய்த போதிலும், அவர்களை நன்றாகப் பராமரித்திருப்பதாகத் தெரிவிக்கும் பாதுகாப்பு அமைச்சு, அத்துடன் நிறுத்திவிடாது தமது படையினர் பொதுமக்களிற்கு உதவி புரிவதாகக் கூறும் சில நிழற்படங்களையும் வெளியிட்டுள்ளது. ஆனால் இந்தப் படங்களில் இருப்பவர்கள் இப்பொழுது எங்கே என்பதைக் கூற மறுத்திருக்கின்றது. தமிழ்ச்செல்வனின் மனைவி பிள்ளைகளை இரண்டு வருடங்களாகக் கடும் காவலில் வைத்திருந்த சிறீலங்கா அரசாங்கம், அண்மையில் கடுமையான கட்டுப்பாட்டுப் பிணையில் மட்டும் விடுதலை செய்திருப்பதையும், சூசையின் மனைவி, பிள்ளைகள் இதுவரை எங்கு என்று தெரியாமல் உறவினர்கள் தேடி அலைவதையும் சொல்ல மறுத்திருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பெற்றோரையும் தாம் நன்றாகக் கவனித்ததாகவும், மக்கள் கோபம் காரணமாக வயதான பெற்றோர் மீதும் தமது கோபத்தைக் காண்பிக்க முயற்சித்த காரணத்தினாலேயே அவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றிப் பராமரித்ததாகவும் கூறும் சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு, தமிழீழத் தேசியத் தலைவரின் பெற்றோரை அடையாளம் கண்டு இழுத்துச் சென்று பனாகொட வதை முகாமில் தடுத்து வைத்து துன்புறுத்தியதையும், மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் படையினரது கொடுமை தாங்க முடியாமல் தடுப்பில் சாவடைந்தது பற்றியும் விவரிக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 11,600 பேர் மட்டுமே தம்மிடம் சரணடைந்தாக, அல்லது கைது செய்யப்பட்டதாகக் கூறும் பாதுகாப்பு அமைச்சு, அவர்களில் 6,130 பேர் விடுதலை செய்யப்பட்டதாகப் பெருமிதம் பேசுகின்றது. ஆரம்பத்தில் (200?) விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் 16,500 பேர் தமது தடுப்பில் இருப்பதாகக் கூறி, பின்னர் அந்தத் தொகையை 11,600ஆக கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்திருப்பதை தமிழ் மக்களும் மறந்து விட்டார்கள், உலக நாடுகளும் மறந்து விட்டன என சிறீலங்கா அரசாங்கம் எண்ணுகின்றது. அதுசரி, தற்பொழுது தடுப்பில் இருப்பவர்கள் பற்றிய விபரங்களை வெளியிட மறுப்பதுடன், பெயர் பட்டியல் வெளியிடுவதாகக் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பல தடவை வவுனியாவிற்கு அழைத்துச் சென்று ஏமாற்றியதும், தடுப்பில் உள்ளவர்களை விடுதலை செய்ய பின்னிற்பது பற்றியும் இதில் ஒன்றும் கூறப்படவில்லையே. ஏன்?

## இசைப்பிரியா

1982ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த இசைப்பிரியா விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்றிருப்பதாகவும், அவருக்கு லெப்ரினன்ட் கேணல் தரம் வழங்கப்பட்டிருந்ததாக கூறும் பாதுகாப்பு அமைச்சு இசைப்பிரியா விடுதலைப் புலிகளின் சீருடையில் இருக்கும் படத்தை வெளியிட்டு, அவர் போரில் ஈடுபட்டதற்கு இந்தச் சீருடைப்படமே சாட்சி என மற்றொரு கண்டு பிடிப்பையும் வெளியிட்டிருக்கின்றது.

இதில் முக்கிய விடயம் என்னவெனில், இசைப்பிரியா அப்பாவிப் பொதுமகள் என சனல்-4 எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கவில்லை என்பதும், அவர் விடுதலைப் புலிகளின் தொடர்பாடல் பிரிவைச் சேர்ந்தவர் எனக் கூறியிருப்பதும், தவிர, உடல்நிலை காரணமாக அவர் போருக்கு செல்வதில்லை என சனல்-4 கூறியதை சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு மீளவும் தெரிவித்திருப்பதும் ஆகும்.

இருப்பினும் இவர் தம்முடனான போரின் போதே கொல்லப்பட்டார் என சிறீலங்கா படைகள் கூறுகின்றன. அப்படியாயின் கொல்லப்பட்ட பின்னரும், கொல்லப்பட முன்னரும் தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர் என சனல்-4 முன்வைக்கும் குற்றச்சாட்டை சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சும், அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளுகின்றதா? இசைப்பிரியாவும், அவரது தோழியும் படுகொலை செய்யப்பட்ட ஆதார நிழற்படத்தை சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சே இந்தப் பத்தியிலும் இணைத்துள்ளது.

## கேணல் ரமேஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் அவர்கள் கொல்லப்பட்ட நிழற்படத்தை அவரது மனைவி ஈழம் டெய்லி.கொம்மிற்கு அடையாளம் காட்டியிருந்ததுடன், நிழற்படத்தில் இருப்பவர் தனது கணவர் எனவும், அவர் கொல்லப்பட்டமை போர்க்குற்றம் என்பதால் எங்கு வந்தும் சாட்சி கூற தயார் எனவும் தெரிவித்திருந்தார்.

இதனை உறுதிப்படுத்திய சனல்-4 தொலைக்காட்சி, கேணல் ரமேஸ் கைது செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட காணொளி மற்றும் நிழற்படங்களையும், கொல்லப்பட்டவுடன் எடுக்கப்பட்ட நிழற்படங்களையும் வெளியிட்டு வெளிநாட்டிலுள்ள அவரது மனைவி ரமேசின் உடலத்தை அடையாளம் காட்டியிருப்பதாக 'இலங்கையின் கொலைக்களம்' ஆவணத் தொகுப்பில் கூறியிருந்தது.

தாம் இழைத்த போர்க்குற்றம் பற்றி வலுவான சாட்சியாக இது அமையும் என அச்சமடைந்துள்ள சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு, கேணல் ரமேஸ் பங்குகொண்ட, மற்றும் வழி நடத்திய தாக்குதல்கள் எனக்கூறி ஒரு பட்டியலையே வெளியிட்டுள்ளது. ஆனால் கைதியாக இருந்த ஒருவரை அடித்து, வதைத்து கொல்வதற்கு பன்னாட்டு சட்டத்தில் இடமில்லை என்ற சனல்-4 தொலைக்காட்சியின் வாதத்திற்கு பதில் இறுக்க முடியாமல் திணறி இருக்கின்றது பாதுகாப்பு அமைச்சு.

## தமிழ்வாணி குமார்

பிரித்தானியாவில் இருந்து சென்று வன்னியில் இறுதிப்போர்வரை அவலப்பட்ட மக்களிற்கான மருத்துவ உதவி புரிந்திருந்த பிரித்தானியப்பிரஜையான தமிழ்வாணி குமார், தடுப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்ட நிலையில் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரக அதிகாரிகளால் மீட்கப்பட்டு லண்டன் திரும்பியிருந்தார்.

தமிழ்வாணியை தமிழ் இளையோர் அமைப்பின் பிரதிநிதி என முத்திரை குத்தும் சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகத்தின் அழைப்பில், விடுதலைப் புலிகளுக்கு பணியாற்றவே தமிழ்வாணி வன்னி சென்றதாக சாட்சியம் எதுவும் இன்றி எழுந்தமானமாகக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றது.

## 'இலங்கையின் கொலைக்களம்'

வன்னியில் காயமுடைந்த டிக்கள் படும் அவலங்களைக் காணொளிக் காட்சியாகவும், சாட்சியாகவும் வெளியிட்ட பின்னரும், இறுதிப் போரில் காயமடைந்த மக்கள் மிகவும் குறைந்த தொகையினர் என சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது. வன்னியில் அவலப்படும் மக்களிற்கு உணவு, மருத்துவ உதவி வழங்க தம்மை அனுமதிக்கவில்லை என அனைத்துலக, செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றியும், செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்களுக்கும் அச்சுறுத்தும் வகையில் தமது படைகள் எறிகணைத் தாக்குதல் நடத்தியது பற்றி இந்தப் பத்தியில் சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு எதுவும் கூறவில்லை.

வன்னியில் இடம்பெற்ற போருக்கும், போரில் பாதிக்கப்பட்டோருக்கான உதவிக்கும், அந்த உதவி மறுப்புக்கும் சாட்சியாக இருந்த ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி கோர்டன் வைஸ் சனல்-4 வின் இந்தக் காணொளிப் பதிவில் கூறும் சாட்சிகள் பற்றி ஏன் சிறீலங்காவின் அரச இயந்திரம் வாய் திறக்கவில்லை என்பதற்கு இதில் விளக்கம் தரப்படவில்லை.

'இலங்கையின் கொலைக்களம்' காணொளியில் உள்ள எல்லாவற்றை வரிக்குவரி விளக்கிய சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சு, போர்க்குற்றத்திற்கான மற்றொரு முக்கிய சாட்சியான அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் பற்றி இதில் கூறப்பட்டுள்ளமை பற்றி ஒன்றுமே தெரிவிக்கவில்லை.

பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சி பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது என்பதை நிறுவப்பாடுபட்ட சிறீலங்கா அரசாங்கம், தனது எதிர் வாதத்தில் சான்றுகளை சமர்ப்பிக்காது விட்டதன் மூலம், தான் பொய்யெனக் கூற வந்தது, பொய்யாக மூக்குடைபட்டு நிற்கின்றது.

தமிழினப் படுகொலைக்கு நினைவேந்தல்



மெழுகுதிரி ஏந்த மெரினாவிற்கு
குடும்பத்துடன் வாரீர்



ஐ.நா.வுக்கான
சித்திரவதைக்குள்ளானவர்களின்
ஆதரவுக்கான சர்வதேச தினம்

சூன் 26, ஞாயிறு, மாலை 5.00. கண்ணகி சிலை அருகில், சென்னை
மே பதினேழு இயக்கம்

## ஓடி ஓடி விளையாடு



விளையாட்டுக்களில் பல வகையான விளையாட்டுக்கள் உலக அரங்கில் கூடுதலான மக்களை பைத்தியமாக இயங்க வைத்தாலும் அதிக மக்களின் கவனத்தை ஈர்ப்பது உதைபந்தாட்டமும், துடுப்பந்தாட்டமும்(கிரிக்கெட்) தான் என்பதில் வேறு அபிப்பிராயம் இருக்க முடியாது. கிரிக்கெட்டிலும் உதைபந்தாட்டத்திலும் உலக சம்பியன் பட்டத்தை சம்பாதிப்பதில் உலக நாடுகள் போட்டோ போட்டி போட்டாலும், குறிப்பட்ட சில நாடுகளின் ஆதிக்கத்திலேயே இந்தச் சம்பியன் மட்டம் கைமாறுவது யாபேரும் அறிந்த உண்மை.

இந்த விளையாட்டுக்களில் பங்குபெற்ற நாடுகள் சமீப காலமாக இவ்விளையாட்டுக்களின் மூலம் கூடுதலான இலாபத்தைப் பணமாகவும், வியாபாரமாகவும். அனுபவிப்பதிதை சாதாரண விளையாட்டுப் பிரியர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. கூடுதலாகச் சொல்லப்போனால் சூதாட்ட நிறுவனங்களும் இவ்விளையாட்டுக்களை தங்கள் இலாபத்துக்கு பணயம் வைப்பது இரகசியமல்ல. போட்டிகளின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கையூட்டு கொடுத்த சம்பவங்கள் கூட வெளிவராமல் இல்ல. இது எப்படியோ உலக அரங்கில் அதிக மக்களைக் கவரும் விளையாட்டுக்களை எப்படி எப்படிப் பிரயோசனப்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் கையாள்வதில் புத்திசாலிகள். தவறவில்லை.

இந்தவகையில், தமிழ் மக்கள் குறிப்பாக தாயகத்திலும் சரி புலம்பெயர்ந்த நாடுகளிலும் சரி அதிக அக்கறை செலுத்த தவறிவிட்டதாகவே எண்ணத்தோன்றுகிறது. இதற்கு காரணமாக 30 வருட கால யுத்தம் அதற்கு மேலான அரச அடக்கு முறை இலங்கையில் தாண்டவமாடியதை கூறமுடியும். ஏனெனில் ஒரு காலத்தில் யாழ் நகரில், பரி யோவான் கல்லூரிக்கும், யாழ் மத்திய கல்லூரிக்குமிடையே இடம்பெற்ற கோலாகலமான கிரிக்கட் போட்டிகள் கொணர்ந்த சனக் கூட்டத்தை இப்போதும் காணக்கிடைக்குமோ என்பது சந்தேகம் தான்.

சின்னஞ்சிறிய நாடுகளான இலங்கை பாக்கிஸ்தான், பங்களாதேஷ் உலக அளவில் பிரபல்யம் அடைவதற்கு கிரிக்கட் விளையாட்டுத்தான் கைகொடுத்துள்ளது. போட்டியிடும் கிரிக்கட் குழுக்களில், தமிழ் வீரர்கள் இடம்பிடிக்க முடியாமல் போவது துர் அதிஷ்டமே. தாயகத்திலும் சரி புலம்பெயர்ந்த நாடுகளிலும் சரி எமது பிள்ளைகளில் ஒரு வீரனையோ, உதைபந்தாட்ட வீரனையோ தட்டிக்கொடுத்து தரணியில் புகழ்பெறத் தவறிவிட்டோம். இக்கைங்கரியம், பெற்றோர்களின் ஊக்குவிப்பிலும் நிறைய உண்டு என்பது, சிறந்த கிரிக்கெட் வீரர்களின் பின்னணியில் இருந்த பெற்றோர்களின் கதைகள் நிரூபிக்கின்றன. உலக அரங்கில், தமிழ் இனம் உரிய இடத்தை அடைய வேண்டுமெனில் விளையாட்டுக்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய வேளை நெருங்கியுள்ளது. சவாலை எதிர் கொள்வோம்.

## தொட்டுத் தொட்டுச் சாப்பிடலாம்.

கணினியுகத்தில் வாழும் இன்றைய சமுதாயத்திற்கு எத்தனையோ புதுப்புது கண்டுபிடிப்புக்களை காணும் வாய்ப்பு கிட்டியுள்ளது. தொழில் நுட்பத்தில் அரசோச்சும் யப்பானை விட தைவான் முந்திவிடுமோ என்ற அச்சம் சமீபகால முன்னேற்றத்தினால் அதிர வைக்கிறது.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள உணவகம் எதுவாக இருந்தாலும் விரும்பும் உணவு வகைகளை மேசைக்குப் போனவுடனேயே அங்கு பிரசன்னமாகும் ஊழியரிடம் ஒப்புவிக்கும் வழக்கம் உண்டு அந்த வழக்கமெல்லாம் மலையேறிவிட்டதாக தைவான் நாட்டில் புதிதாக ஆரம்பித்திருக்கும் MOJO ICUISINE என்ற உணவகத்தினர் கூறுகின்றனர்.

உணவகத்துக்குள் நுழைந்தவுடனே அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் மேசைக்கு முன்னால் அமர்ந்தவுடன் மேசையின் விரிப்பைக் கூட கைகளால் தொட்டு விரும்பிய வடிவத்தில் மாற்றிக் கொள்ளலாம். தேவைப்படும் உணவு வகைகளை வாய் ஊற ஊற கைகளால் தொட்டுத் தொட்டே பதிவு செய்யலாம். உணவு இடைவேளையில் கணினி விளையாட்டுக்களைக் கூட விளையாடலாம்.

### தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

விரும்பிய உணவை வயிறார உண்டபின் பணத்தைச் செலுத்தக் கூட, காசாளரிடம் செல்லத் தேவை இராது. மேசையில் இருந்தபடியே பணத்தைச் செலுத்திவிட்டு பற்றுச்சீட்டைப் பெறவும் முடியுமென இந்த உணவகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய தொழில் நுட்பம் ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவுமானால் உணவக ஊழியர்களுக்கு அதோ கதி தான்.

## புகைபிடிப்பவர்கள் மெலிந்து காணப்படுவது ஏன்.

சாதாரணமாக புகைபிடிப்பவர்களை அவதானித்தால், கூடுதலானோர்கள் எடையில் குறைந்தவர்களாகவும், மெலிந்த தோற்றமுடையவர்களாகவும் இருப்பதைக் காணக்கூடும் இதற்கான காரணம் எதுவாக இருக்கக்கூடுமென ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் பல சோதனைகளுக்குப் பின்னர் இவர்களுடைய பழக்க வழக்கத்தை உன்னிப்பாக கண்காணித்தனர்.

பசி எடுக்கும் போதெல்லாம் உணவை உட்கொள்ளாமல் ஒரு தம் அடிப்பதையே அனேகர் கடைப்பிடிப்பதைக் கண்டு கொண்டனர். உடலில் பசி உண்டாகுவதை சமிக்ஞை செய்யும் மூளையின் ஒரு பகுதியை, புகைத்தல் மூலம் உட்கொள்ளும் நிக்கொட்டின்(NICOTINE) பசியை உண்டாக்கும் உணர்வை அடக்கிவிடுவது அவதானிககப்பட்டுள்ளது.

யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி MARINA PICCITTO என்பவரும் அவரது குழுவினரும் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பயனாக நிக்கொட்டின் கலந்த எந்தவகை மருந்தும் உடலில் சேர்க்கப்படும் போது பசி எடுக்கும் உணர்வினைக் குறைத்து விடுவதை ஆதாரபூர்வமாக அறிந்துள்ளனர்.

மூளையின் ஒரு பகுதியால் கட்டுப்படுத்தப்படும் பசி உணர்வை புகைத்தல் மூலம் உட்புகும் நிக்கொட்டின் இவ்வளவு தூரம் உடலின் எடையைக் குறைக்குமென்று ஆராய்ச்சியாளர்கள் இதுவரை நம்பவில்லை. ஆனால் எலிகள் மூலம் பரீட்சிக்கப்பட்ட பரிசோதனைகள் நம்ப முடியாத அளவிற்கு நிக்கொட்டின் கலந்த மாத்திரைகள் எடையைக் குறைத்துள்ளதாக அறிக்கையிட்டுள்ளனர்.

மெலிந்த உடல்வாகைக் கொண்ட புகைபிடிப்பவர்கள், புகைபிடித்தலை நிறுத்தியவுடன், அவர்களது எடை எதிர்பாராத வகையில் உயர்ந்துள்ளதாக பரீட்சைக்குட்டுத்தியவர்கள். மூலம் நிருபணமாகியதை இங்கே PICCIOTTO அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்.

புகைபிடிப்பதனால் உண்டாகும் புற்று நோய்கள் இருதயக் கோளாறுகள் போன்ற உயிர்கொல்லிகளைத் தடுக்க உலகம் பூராவும் எடுக்கும் நடவடிக்கைகள் எதற்கும் செவிசாய்க்காமல் தொடர்ந்தும் அடம்பிடிக்கும் புகைபிடிப்பவர்களை உற்றார், உறவினர், நண்பர்கள் விடாது முயற்சி எடுத்தால் அநியாயமாக அழிந்து போய்க்கொண்டிருக்கும் பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்ற முடியும். அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என மூன்னோர்கள் சொல்லி வைத்தது பொய்த்து விடுமா? முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

## மக்கள் களம்

### காடையர்களால் தாக்கப்பட்ட ராஜ்

'கருத்துக் கூறிய ஒரே காரணத்திற்காக' புலி ஆதரவுக் காடையர்களால் (22.06.2011) பிற்பகல் ராஜ் என்பவர் தாக்கப்பட்டுள்ளார்.

ஏழாம் திகதி ஜுன் மாதம் தீபம் தொலைக் காட்சியில் புலி இலச்சனை பொறிக்கப்பட்ட கொடியை எமது போராட்டங்களில் உபயோகப்படுத்துவதன் அரசியல் பின்விளைவுகள் குறித்த விவாதம் ஒன்றில் கலந்துகொண்டு தனது கருத்துக்களைத் தெரிவித்த ராஜ் என்பவரே ராம் என்ற புலி ஆதரவாளரும் செயற்பாட்டாளருமான ஒருவரால் தாக்கப்படுள்ளார்.

*- ராஜபச்சேட்டை காசு வேண்டிட்டு எழுதிய செய்தி*

யார் தாக்குதல் நடத்தினாலும் அது புலி ஆதரவாளர் என்பது சிலரின் குருட்டுத் தனமான மாற்றுக் கருத்தியல் என்ற மாயை வளர்க்கும் காட்டிக் கொடுப்பு அரசியல். தமிழீழ தேசியக் கொடியை தாழ்த்திப் பேசுறவனை அடிக்கிறது என்ன ஜெயிலில தூக்கி போட்டால் கூட அது பாவமில்லை. புலி ஆதரவாளர்கள் தான் இதைச் செய்ய வேண்டும் என்றில்லை.. இன உணர்வுள்ள எவனும் இதனைச் செய்யலாம்.

சிறீலங்கா சிங்களக் கொடியைப் பற்றி பேச மாட்டாங்கோ.. அதை தூக்கி போர்த்திக்கிட்டு கூத்தடிப்பாங்கோ.. அப்புறம் மாற்றுக் கருத்து என்று அதற்குள்ளால பூனைக்குட்டி வரப் போகுது என்றும் படங் காட்டுவாங்கோ. உண்மையில் தமிழர்களிடம் மாற்றுக் கருத்து என்ற ஒன்றே இல்லை. புலி காழ்புணர்ச்சிவாதம் மட்டுமே உண்டு. அது எமது இனத்தின் அழிவின் ஒரு காரணி. அதன் வால்கள்.. துணைகள்.. ஏன் எமது இனத்தை இன்னும் பிரதிநிதித்துவம் செய்வதாக கற்பனை செய்கிறார்களோ தெரியவில்லை. உருப்படியான எதிர்க் கட்சி அரசியலை ஜனநாயக வழியில் அங்கீகரிக்கும் தமிழீழ மக்கள்.. காழ்புணர்ச்சிகளை கொட்ட பயன்படும் மாற்றுக் கருத்துக்களை சகிக்க மாட்டார்கள் என்பதே இந்த தாக்குதல் சொல்லும் செய்தி. அந்த மக்களை காடைகள் என்பதிலும் அவர்களின் உணர்வுகளை தீபம் உட்பட அங்கு வந்து உட்காரும் முள்ளிவாய்க்காலின் பின்னால் முகம் காட்டும் மாற்றுக் கருத்து மாயாவிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். எனியாவது தம்மை திருத்திக் கொள்ள வேண்டும்.

இது குறித்து பிரித்தானிய காவல் துறைக்கு விளக்குவதோடு மக்களின் இன உணர்வை இழிவுபடுத்தி அவர்களை ஆத்திர மூட்டச் செய்யும் மாற்றுக் கருத்து மாயாவிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் அவர்களை ஒளித்திரையில் கூட்டி வந்து காட்டி மக்களை ஆத்திர மூட்டி வன்முறைக்கு தூண்டுவதை தடுக்கவும் வேண்டும்.

இந்த மாற்றுக் கருத்து மாயாவிகள் எவரும் மக்களால் நேர்மையான ஜனநாயக வழியில் தேர்வு செய்யப்பட்டவர்களோ..மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்டவர்களோ கிடையாது. MAN U கால்பந்தாட்ட கழகத்தை குறை சொல்லி அதன் ரசிகர்களிடம் வன்முறையை தூண்டி விடுவது போலவே.. இன உணர்வு சம்பந்தப்பட்ட தேசியக் கொடி விவகாரமும் ஆகும் என்பதை பிரித்தானிய பொலிஸாருக்கும் நீதித்துறைக்கும் சொல்ல வேண்டும்.

*- நெடுக்ஸ்*

ஒரு கருத்தை ஒருவர் சொன்னால் அதைக் கேட்க எந்த தமிழ் மகனுக்கும் உரிமையுண்டு. அந்த கருத்தை சொன்னவர் ஏன் ஒழிந்து ஓடவேண்டும். அப்படியாயின் அவரது கருத்து தப்பு என்றோ அல்லது அவர் சொன்ன கருத்துக்கள் அவரது இல்லை என்றுதான் அர்த்தம். அப்படியாயின் மக்களின் எதிர்ப்பைச் சந்தித்தே ஆகவேண்டும். இது இனி தொடரும் போல்தான் உள்ளது.

*- விசுகு*

பிரித்தானியாவில் தமிழீழ தேசியக் கொடிக்கு அங்கீகாரம் பெற பட்டபாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. தேசியக் கொடி என்பது அந்தந்த நாட்டு மக்களின் தேசத் தாயின் அடையாளம். அதனை எந்த நாட்டு மக்களும் இழிவு படுத்த அனுமதிக்க மாட்டார்கள். சிறீலங்கா தேசியக் கொடியை எரித்தற்காக சிறை சென்று உயிர்விட்ட தமிழர்களும் உண்டு.

தீபம் தொலைக்காட்சி (அது இப்போ இலவசமாக விடப்பட்டுள்ளது பார்க்க.) நிகழ்ச்சியை நானும் பார்த்தேன். பேச வரும் விடயத்தை விட்டு ஒரு மாற்றுக் கருத்து மாயாவி. தேசியக் கொடியை பிடிச்சதால தான்.. முள்ளிவாய்க்கால் அழிவே வந்தது. அது எமக்கு அவசியமா என்று வேறு கேட்குது. எனக்கே அந்த மாயாவியை செருப்பால அடிக்கனும் போல இருந்திச்சு. ஒரு அடிப்படை அரசியல் சர்வதேச ஆராய்தல் இன்றி வெறும் புலி காழ்ப்புணர்ச்சியோடு சிலர் பேசுவது எல்லாம் கருத்தாகாது. அப்படியான ஜென்மங்கள் ஒன்றில் மக்களை தொந்தரவு செய்யாமல் தானும் தன்ர குடும்பமும் என்று வாழனும். இல்ல மக்களின் கோபத்தை தூண்டி.. வேடிக்கை பார்க்க நினைத்தால் விளைவு இதாகத்தான் இருக்கும். குற்றம் செய்யுறவனை விட செய்யத் தூண்டுறவைக்கு தான் தண்டனை அதிகம்.

*- நெடுக்ஸ்*

ஒரு இனத்தின் தேசியக் கொடியை விமர்சித்து பேச இந்த ராஜ் யார்?

மற்ற இனத்தில், தேசியக் கொடியை விமர்சித்தால் உயிரோடு விட்டு வைப்பார்களா?

இவருக்கு விழுந்த இருப்புக் கம்பி அடியுடன்.... இனி மேல் தொலைக்காட்சியில் போய் குந்தியிருந்து, அலட்டுவதை நிறுத்த வேண்டும்.

*- தமிழ் சிறி*

ஆரம்பத்திலேயே களையெடுக்க வேண்டும். இரண்டு பேருக்கு இப்படி போட்டால் யாரும் வாய் திறக்கமாட்டினம். எங்கட பெடியங்கள் பேய்க் காய்கள்.

*- அர்யூன்*

மக்களே... இதில ஒரு விசயத்தை நீங்கள் கவனமாக பார்க்க வேண்டும்.

அடி வேண்டினது ரா...ஜ்.<br>
அடி குடுத்தது ரா...ம்.<br>
இதுக்கெல்லாம் காரணம் ரா....ஜபக்சே.<br>
(எப்பூபூபூபூபூபூபூபூடி).

*(நன்றி யாழ்)*

**ஐக்கிய இலங்கைக்குள் அதிகபட்ச அதிகாரப் பகிர்வையே எதிர்பார்க்கிறாம். கூறுகிறார் சம்பந்தன்.**

உலகம் தமிழருக்கு ஒரு நல்ல தீர்வு தந்தாலும் சம்பந்தனும் இந்தியாவும் அதை வேண்டாம் என்று தட்டி விடுவார்கள் என்பது நிதர்சனமான உண்மை.

*- புலவர்*

தன்னையே முன்னெடுத்துச் செல்ல முடியாத இவரா தமிழினத்தை முன்னெடுத்துச் செல்லப் போகின்றார்! தனி நாடு கேட்டால் தான், போலிஸ் அதிகாரத்திலாவது வந்து நிற்கும்! ஆரம்பக் கோரிக்கையே அதிகபட்ச அதிகாரப் பகிர்வு என்றால், பஞ்சாயத்துக்கு உரிய அதிகாரம் கூடக் கிடைக்காது!

*புங்கையூரன்*

இவர் கருணாநிதி நம்பர் 2..

*- பையன்26*

களிமண் மூளை சம்பந்தனுக்கு இன்னமும் அதிகபட்ச தீர்வு என்ன என்று சொல்லத் தெரியவில்லை? 'குறைந்த பட்சம் முழுமையான காணி, போலிஸ் அதிகாரம் இல்லாத தீர்வை ஒருபோதும் தமிழர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்' என்று சொல்ல வக்கில்லாத தேவாங்கு தான் சம்பந்தன். இந்தக் கோணங்கி அரசியல்வாதி திருகோணமலையில் பிறந்து, திருமலை வாழ் தமிழ் மக்களின் மானத்தை வேறு விற்றுவருகிறது.

தமிழர் பிரச்சினை பற்றி தெளிவில்லாத புறம் போக்கு தமிழ் அரசியல்வாதிகளால் ஒரு பயனும் இல்லை.

*- ஆராவமுதன்*

சம்பந்தன் போன்றவர்கள்.. எதையாவது பெற்றுக் கொடுத்தாலே அது பெரிய விசயம். நிச்சயமாக இவர்களால் எதுவும் முடியப் போறதில்லை. சம்பந்தன் போன்றவர்கள் புலம்பெயர் சமூக மக்களிடம் இருந்து தூர விலகிச் செல்வதாகவே தெரிகிறது. இது அவர்களுக்கும் மொத்த இனத்திற்கும் ஆபத்தானது.

*- நெடுக்ஸ்*

## Affordable IT Support services for Businesses and medium size Companies



உங்கள் கொம்பியூட்டர் பிரச்சனைகளை
நாங்கள் கவனித்துக் கொள்ள...
கவலைகளை மறந்து உங்கள்
வியாபாரத்தில் வெற்றியடையுங்கள்.

Do what you're best at = **Business**

We are best at = **IT support**

**Hassle free option**

**FREE Consultation**

Call us on

**020 7043 4318**

IT SUPPORT

let us look after it.

# சேயோனின் சித்துவிளையாட்டு



வணக்க அன்புடையீர்,

உங்கள் பத்திரிகையில் (மே 27-யூன் 10 வெளியீடு) திரு சேயோன் அவர்களுடைய 'சற்று மாறுதலுக்காக' பத்தி படித்தேன் மூளைச் சலவை செய்யும் திறன் கொண்ட வசீகர எழுத்துக்களால் அருவருப்புகளுக்கு தங்க முலாம் பூசி அருமையானவையாகச் சித்தரித்து மக்களுக்குத் திணிக்கக்கூடாது. வாசகர் கடிதமாக இந்த அசிங்கங்கள் பிரசுரிப்பதில் தப்பில்லை. பத்தி எழுத்தாக அவை வெளிவருவதில் ஆசிரியர் குழுமமும் உடந்தையாகவே அசிங்கங்களைத் திணிப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

ஐந்தாவது பத்தியில் திரு.எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் ஒருபோதும் தமிழ்த்தேசியத்தின் மீது அக்கறை கொண்டிருக்கவில்லை என்றும் தேசியத்தவைர் மீதான பேரபிமானம் காரணமாகவே தேசியத்தலைவருக்கு பணம் கொடுக்கப்பட்டதாகவும் எழுதியிருக்கிறார். 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் அரச ஆதரவுடன் இலங்கைத்தீவு தழுவி இனப்படுகொலையும் கலாச்சார படுகொலையும் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டது.

அப்போது மனம் பதைத்த எம்.ஜி.ஆர் அவர்கள் 'ஈழத்தமிழரின் இன்னல்களையிட்டு தமிழகம் கொந்தளிப்பு அடைந்திருக்கிறது. இங்கே தமிழ் மக்களின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. எவ்வளவு காலம் தமிழ் மக்கள் பொறுமையாக இருப்பார்களென்பதைச் சொல்லமுடியாது' என்ற தொனிப்பட தன் கைபட அன்றைய சிறீலங்காவின் ஜனாதிபதியும் தமிழ் மக்களின் அவலங்களுக்கு சூத்திரதாரியுமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு கடிதம் எழுதியிருந்தார். ஆழமான வலிமை மிகுந்த கடிதம் அது. ஈழத்தமிழர் துயரங்களைத் தமிழகம் பார்த்துக்கொண்டு சும்மாயிராது என்று ஜே.ஆரை எச்சரிக்கிறார்.

தமிழ் மக்களுடைய அவலங்களுக்கு சூத்திரதாரி ஜே.ஆர். தான் என்பதையும் தடுத்து நிறுத்தும் சக்திபடைத்த ஜே.ஆர். தடுத்து நிறுத்தாவிடின் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வருமென்பதையும் இடித்துரைக்கிறார். இந்தியாவின் அரசியலமைப்பை சேயோன் புரிந்துகொள்ள வேண்டும். நிதி, பாதுகாப்பு, வெளியுறவு போன்ற முக்கிய விடயங்களில் மாநில அரசுக்கு எவ்வித பாத்தியதையும் (Voice) இல்லை. தமது மாநில மக்களுக்கு மட்டும் தம்மைப்பற்றி பெருமைகள் பேசி அவை பீற்றிக்கொள்ளலாம். எம்.ஜி.ஆரின் செய்கைக்காக அப்போதைய இந்தியாவின் சர்வாதிகார, அடக்குமுறைப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கையின் உள்விவகாரங்களில் எம்.ஜி.ஆர். தலையிடுவதாகவும் அது இந்தியாவின் அயலுறவுகளைப் பாதிப்பதாகவும் கூறி எம்.ஜி.ஆர் அரசை டிஸ்மிஸ் செய்திருக்க முடியும். அந்த ஆபத்தையும் தெரிந்து கொண்டுதான் ஈழத்தமிழர் மீது கொண்டிருந்த வாஞ்சை காரணமாக எம்.ஜி.ஆர். தன்னைப் பிரச்சனைக்குள் ஆட்படுத்தி அந்த மடலை எழுதியிருந்தார்.

இந்தியாவின் பத்துவீத மக்கள் தொகையைக் கொண்ட மாநிலமான தமிழ்நாட்டை உதாசீனப்படுத்தி தான் ஆட்சி நடத்த முடியாது என்றுணர்ந்த இந்திரா அம்மையார் இலங்கைப் பிரச்சனையில் நேரடியாகத் தலையிட்டார்.

இந்தியாவுக்கு பிடிக்காத நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதுடன் அவற்றிற்கு இலங்கையில் இடம்கொடுத்தும் ஜே.ஆர். அரசை வழிக்கு கொண்டுவரவேண்டிய கட்டாயமும் இந்திரா அம்மையாருக்கு இருந்தது. ஜே.ஆர். அரசுக்கு தலையிடி கொடுக்கவும் ஈழத்தமிழருக்கு தற்காப்பு கொடுக்கவும் இந்தியாவுக்கு கைப்பாவையாக இருக்கவும் என ஆயுதக்குழுவை இந்திரா தெரிவு செய்தார்.அது தமிழீழ விடுதலைக் கழகம். உபயம் சந்திரகாஸன்.

அதேவேளை தலைவருக்கு தலையிடியாக இருக்கவென உதிரிக்குழுக்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் வழங்கினார். பிராந்திய வல்லாதிக்க சக்தியை மீறி தலைவர் தமிழ்மக்களுக்காக போராட்டத்தை எப்படிக் கொண்டு வந்திருக்கிறாரென்பதை மக்கள் அறிந்து கொள்வதற்காக இவற்றை விபரித்து இருக்கிறேன்.

எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழருக்கு தனிநாடுதான் தீர்வென்பதையும் அது தேசியத்தலைவரால் மட்டுமே முடியும் என்பதையும் ஆய்ந்துணர்ந்து மத்திய அரசைப்பற்றிக் கவலைப்படாமல் தலைவருடன் மட்டுமே நெருக்கமாக இருந்து கொண்டார், தலைவருக்கு எம்.ஜி.ஆர். பணம் கொடுத்ததன் நோக்கம் வேறு என்று பூடகமாகவே சேயோன் சொல்லி தவறான ஊகங்களுக்கு வழிவகுத்திருக்கிறார். எம்.ஜி.ஆர் உயிருடன் இருக்கும் வரை தலைவருக்கு பணம் கொடுத்ததை எந்தவொரு கட்டத்திலும் வெளிப்படுத்தவில்லை. சேயோன் புரிந்து கொள்ளட்டும்.

கருணாநிதி கல்லக்குடிக்காக போராடியதாகக் குறிப்பிட்டிருக்கிறார். நன்று ஐம்பத்தாறில் தமிழர் உரிமைக்காக தனியே போராடி காலிமுகத்திடலில் அடிவாங்கிய அமிர்தலிங்கம் அவர்கள் எழுபத்தெட்டில் மங்கையற்கரசிக்காக தமிழ் இனத்தையே விற்றார். அதை விடக்கேவலமாக தனக்காகவும் தனது குடும்பத்தினர்காகவும் கருணாநிதி தமிழ் இனத்தை அடகுவைப்பதை சேயோன் அறியாரோ?

ஈழத்தமிழனாக கருணாநிதி இந்தியப்படையின் வருகையைப் புறக்கணித்ததற்காக மெச்சுவதாக சேயோன் புளாங்கிதமடைந்து நீட்டி முழக்கி சிலாகித்திருக்கிறார். மீண்டும் சேயோன் இந்திய அரசியலமைப்பைப் புரிந்து கொள்ளாமல் கருணாநிதி போலவே தமிழ் நாட்டு சினிமாப்பாணியில் சொல்வதானால் சைக்கிள் கைப்பில் (gab) ஆட்டோ ஓட்டுகிறார். படையை வரவேற்கவேண்டியது மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுநர் மட்டுமே. தமிழ் நாடு அரசு என்ன செய்கிறது என்பதைப் பற்றி மத்திய அரசுக்கோ படையினருக்கோ கவலையில்லை.

**'ஈழத்தமிழரின் இன்னல்களையிட்டு தமிழகம் கொந்தளிப்பு அடைந்திருக்கிறது. இங்கே தமிழ் மக்களின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. எவ்வளவு காலம் தமிழ் மக்கள் பொறுமையாக இருப்பார்களென்பதைச் சொல்லமுடியாது'.**

ஈழத்தமிழரின் அவலமான நேரங்களில் மத்திய அரசில் சக்திமிக்க பங்காளியாக இருந்த கருணாநிதி கடிதம் மட்டுமே எழுதிக் கொண்டிருந்தார். எம்.ஜி.ஆர். உதவியின்றியே ஆட்சியிலிருந்த இந்திராவை மீறி எம்.ஜி.ஆர்.செயற்பட்டதை சேயோன் விளங்கிக்கொள்ளட்டும்.

மேலும் கருணாநிதி தமிழ்நாட்டுத் தமிழரின் தன்னிச்சையான எழுச்சிகளைத் திசைதிருப்ப ராஜினாமா மிரட்டல்களையும் காலை உணவிற்கும் மதிய உணவிற்கும் இடையில் உண்ணாவிரதம் இருந்ததையும் சேயோன் எப்படிச் சகிக்கிறார். அவற்றையெல்லாம் மறைத்து பூச்சாண்டி காட்டி ஏன் மக்களை சேயோன் ஏமாற்றவேண்டும்.

ஐந்து வருடங்கள் தமிழ் மக்கள் தண்டனையை அனுபவித்தாக வேண்டும் என்று எழுதியதன் மூலம் சேயோன் கருணாநிதியின் தோல்வியைத் தாங்கமுடியாத தன் சோகத்தை மறைமுகமாக வெளிப்படுத்தி இருக்கிறார். குழந்தைகள் பெற்றுக்கொண்ட பின் கல்யாணம் பண்ணிக்கொண்ட அரைநிர்வாண ஒழுக்ககேடான குஷ்புவும் இதே கருத்தையே சொல்லியிருந்தார்.


நாளாந்த நோவிற்கும், உளைவிற்கும் தகுந்த நிவாரணி!




'வேதா எயிட்' புராதன ஆயுர்வேத முறைகளின் படி உருவாக்கப்பட்ட நவீன மருத்துவம் ஆகும்.

இது இயற்கை மூலிகைகளிலிருந்து பெறப்பட்ட தூய்மையான மருந்து வகைகளை ஆதாரமாகக் கொண்ட வைத்திய முறையாகும். இதில் செயற்கை மருந்துகளோ நிறமூட்டும் பொருட்களோ சேர்க்கப்படவில்லை.

நாளாந்த உளைவிற்கும் நோவிற்கும் நிவாரணம் அளிக்கக்கூடிய இரண்டு விதமான மருந்துப் பொருட்களை எமது ஆய்வுக் கூடத்தில் நவீன ஆராய்ச்சிகளின் அடிப்படையில் தயாரித்துள்ளார்கள்.

இம் மருந்துகளை இணையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
www.veda-aid.com
மேலதிக விபரங்களுக்கு: info@veda-aid.com
Or Phone: 020 8977 3737
Veda Aid Limited. P. O. Box 293,
Hampton, TW12 9AN. UK

10% off Veda Aid Solutions for Oru readers
Quote code: ORU/10/VA11
Offer expires 31 Sept 2011

WARM
COOL




# விடுப்பு

பார்ப்பவர்: **இழுவைக்காரன்**

## தமிழ் நாய்களும் இனக்கொலையில்



யாழ் போதனா வைத்தியசாலை வளாகம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள தெருநாய்களில் கடுவன்நாய்களை மடக்கிப்பிடித்து மூன்று சிங்கள மிருக வைத்தியர்களின் உதவியுடன் அவைகளுக்கு காய் அடித்துவிட்டு நாய்களின் காதுகளில் னடிநே என்ற பட்டி ஒன்றைக்கட்டி விடுகிறார்கள், நிலைமை இவ்வாறிருக்க தெருக்களில் உள்ள பெட்டை நாய்கள் கடுவன் நாய்கள் உள்ள வீடுகளுக்குள் புகுந்து அந்த நாய்களையும் வீதிகளுக்கு இளுத்து வருகின்றன, ஆக தமிழ் நாய் இன விருத்திக்கும் ஆப்பு வந்தாச்சு,

## செருப்பு பிஞ்சது புத்தூர் சந்தியில் !



யாழ் புத்தூர் சந்தியில் நாள் தோறும் குடிபோதையில் நின்று பாடசாலை முடிந்துவரும் மாணவர்களை நாகாரீகமற்ற முறையில் நையாண்டி சேட்டைகள் செய்து வந்த இளைஞர் கூட்டம் ஒன்றுக்கு போன வாரம் மாணவி ஒருத்தி காலில் இருந்த செருப்பைக் கழற்றி மதவில் இருந்த மாப்பிளைகளுக்கு மளார் மளார் என்று அறைந்து விட்டாராம்,

## மோர்வினின் கையைத் தட்டிவிட்ட மகிந்த



ரஸ்யாவில் இருந்து நாடு திருப்பிய மகிந்தாவை வரவேற்க விமான நிலையம் சென்ற கூட்டத்தில் சண்டியன் மேர்வின் சில்வாவும் ஒருவர், மகிந்தா விமான நிலையத்தில் இங்கி நடந்து வரும் போது கை கூப்பி கும்பிட்டுவிட்டு மகிந்தாவின் அருகில் சென்று கையிலாகு கொடுக்க முற்பட்டார். அப்போது அவரின் கையைத் தட்டிவிட்டு மகிந்தா மற்றவர்களுக்கு கையசைத்தபடி நடந்துகொண்டேயிருந்தார். பாவம் மேர்வினும் அவர் பின்னால் போய் கொண்டே இருந்தார்,

## கண்ணகை அம்மனுக்கு பூத்தூவிய நாமல்



13,06,11 அன்று வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வைகாசிப் பொங்கல் நடைபெற்றது, இம்முறை என்றுமில்லாதவாறு பெரும் திரளான மக்கள் வந்திருந்தார்கள், சிங்களவர்களும் வந்திருந்தார்கள், அவர்களது கடைகளும் பஞ்சமிருக்கவில்லை. ஆனாலும் திடீரென இரண்டு கெலிகொப்ரர்கள் கோவிலை வட்டமிட ஆரம்பித்தது, பின்று ஒரு கெலிகொப்பாரில் இருந்து அம்மன் ஆலயத்தின் மேல் பூ சொரிந்தார்கள், அதை விசாரித்தபோது அது நாமலின் வேலை என்று தொரிய வந்தது, முன்னர் புலிகள் செய்யும் போது மக்கள் கை அசைத்து ஆரவாரப்படுவார்கள், இம்முறை பூ தூவும்போதுநந்திக்கடலையும்தாண்டி பெருங்கடலைப் பார்த்து பெருமூச்சுதான் விட்டார்கள் வன்னிமக்கள்,

## கருணாவும் பொங்கலில்



முன்னாள் விடுதலைப்போராளியும் இன்னாள்மகிந்தவின் எடுபிடியுமான கருணாவும் அவரோடு சில சகாக்களும் மூன்று பசிரோ வாகனங்களில் வந்து அம்மனை தரிசித்தார்கள், யாரும் அவரைக் கணக்கெடுக்கவில்லை, அருகே இரண்டுபெண்கள் நின்றிருந்தார்கள், அதிலொருவர் சிங்கள பெண், ஒருவர் தமிழ் பெண்,

## புலிகள் பாதுகார்த்த தேக்கு மரங்கள்



மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் சீச்சுக்குளத்திற்கும் முள்ளியவளைக்கும் இடையில் அண்ணவளாக நூறு ஏக்கர்களுக்கு மேலாக தேக்கு மர தோட்டம் உள்ளது. இவைகள் கிட்டத்தட்ட அறுபது வருடாக வளரும் பெரு மரங்களாகும், வன்னியில் புலிகளின் நிர்வாகம் வந்தபின் இவற்றை நேர்த்தியாக பார்த்தனர், ஆனால் இன்று அவைகளை அரிந்து எடுத்து கொழும்புக்கு போய் கொண்டிருக்கிறது, இரானுவத்தின் உதவியுடன் இதை தட்டிக்கேட்க முடியாத நிலை காரணம் வன்னியில் முற்றாக இராணுவ ஆட்சி நடைபெறுகிறது,

## மகிந்த சிந்தனை



வடக்கு கிழக்கில் டக்ளஸ் கருணா மற்றும் சிங்கள உளவாழிகளின் மூலமபகக் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட ஆண்களின் மனைவிமார் மற்றும் இறந்த விடுதலைப்புலி உறுப்பினார்களின் மனைவிமார் உட்பட சண்டையில் இறந்து போன வர்களின் அனைத்து விதவைப் பெண்களுக்கும் கருப்பையை கருத்தரிக்கும் ஒரு திட்டத்தை மகிந்த அறிமுகப்படுத்தியிருக்கிறார். இதை முதலில் இறந்த சிங்களவனின் பெண்டாட்டிகளுக்கு செய்வது தானே? ஏன் தமிழர்களின் இனவிருத்தியில் இவ்வளவு கரிசனை?

### சுடுகவி.. சுடுகவி...

சகல கஸ்ரங்களையும் களைந்து
பதவியும் பணமும் கொட்டோ கொட்டென்று
கொட்ட வைப்பேம் என்று விளம்பரம்
செய்யும் குருஜிமார்கள் ஏன்
தெருத்தெருவாய் துண்டு கொடுத்து
கஸ்ரப்படுகிறார்கள்....

# நெஞ்சை உறைய வைக்கும் சேனல் 4 காணொளி.. . இன்னுமா அமைதி?

எந்த ஒரு மனிதனையும் கலங்கடிக்கும் இந்த காணொளியைபார்த்த பிறகுமா இரத்தம் கொதிக்கவில்லை தமிழனுக்கு? ஈழ மக்கள் நம் இனம் நம் உறவு என்பதை மறந்து விட்டதா இந்த நாடு? இந்திய நாட்டின் ஒரு பகுதி என்பதால் தமிழகமும் இந்திய நாட்டின் தரித்திரம் பிடித்த அரசாங்கம் போலவே வாய்மூடி மௌனமாக இருக்கிறதா? அடுத்துக் கெடுக்கும் கேடு கெட்ட இந்த நாடு, ரத்த வெறி பிடித்த அரசாங்கம் தேவையா நமக்கு? எத்தனை சகோதரிகள், கர்பிணிகள், குடும்பத் தலைவர்கள், ஒன்றும் அறியா பிள்ளைகள் இந்த கொடூர கொலையில் மாண்டவர்கள்? ஓ தமிழகமே இந்த கண்ணீர், வலி, ரத்தம் உனக்கு புரியவில்லையா? இந்திய நாட்டில் பிறக்காத சோனியா தான் ஒருத்தி தாலியை அறுத்ததற்கு எத்தனை தமிழ் சகோதரிகளை வெள்ளைப் புடவை கட்ட வத்து விட்டாள் பார்த்தாயா? தன் மகள் தன் சகோதரியை ஒருவன் தவறாகப் பார்த்தால் கோபப்படும் தமிழக ஆண் மகனே ஈழத்தில் ஆயிரமாயிரம் இளம் பெண்கள் கற்பினை காக்க போரடியபோது மனைவியை அணைத்துக்கொண்டு வீட்டிலே தூங்கினாயா நீ? நீ இங்கே உன் பிள்ளைகளுக்கு சாக்லேட் வங்கிக் கொடுத்துக் கொண்டிருந்த பொழுது அங்கே எத்தனை தாய்மார்கள் தந்தைமார்கள் உயிருக்குப் போராடும் தன் பிள்ளைகளை மடியில் கிடத்திக் கொண்டு அழுதனர் என்று தெரியுமா உனக்கு? உனது சூடு சுரணை எல்லாம் மணி பர்ஸில் உறங்கும் போது உனக்கு எப்படி வரும் வீரம்? தூ... தமிழன் என்றால் சுரணை இல்லாத ஈனப் பிறவி என்று நாளை சரித்திரம் காறித் துப்பட்டும். யனெசநயட நாளைய ஈழ விடியலுக்கு விதையாக விழுபவர்கள் நாமாக இருக்கலாம். ஈழம் அழிவதானால் இலங்கையும் அழியட்டும்.

- அருண்குமார்

மன்னித்துவிடுங்கள் என் உறவுகளே...

ஆண்டொன்று ஓடிவிட்டது !பருவங்கள் மட்டுமே மாறின. பதவி, பவிசு, பட்டம், விழா, கொண்டாட்டம், இலவசம், பொய், துரோகம், பணம், மறதி, பழிவாங்கலில் எதுவுமே மாறவில்லை. மானுடம் மறந்ததற்கான ஆண்டுவிழா இன்று.

பச்சைத்துரோகத்தின் பரிசாய் புதையுண்ட பல லட்சம் உயிர்களை மறந்து போகவும் தலைப்பட்டோம். யார் சரி யார் தவறுக்கு அப்பாற்பட்டு அப்பாவியாய் அத்தனை உயிர்கள் போனது நிஜம். பச்சிளம் குழந்தைகள், முதியோர் என மொத்தமாய் செத்தவர்க்கு ஓர் அஞ்சலி சொல்லக்கூட மனமில்லை நம்மவர்க்கு.

ஒருபுறம் நினைத்தால் அவமானமாய் உணர்கிறேன். மறுபுறம் நான் மட்டுமே இப்படியிருக்கிறேன். என் உறவுகள் தமிழுக்காய் இன்னும் தலை நிமிர்ந்தேயிருகிறார்கள் என்ற பெருமிதம் சற்றே ஆறுதலாயிருக்கிற து.

நிர்க்கதியாய் நிற்பவனை ஆயுதம் ஏந்தி ஒரு கூட்டம் மிரட்டுகிறதென்றால் உண்மையில் ஆயுதம் இருப்பது யாரிடம்? பயந்தவன் தானே மிரட்டுவான். ஏதிலி யார்? வலையம் வலையம் என்று முதலைக் கண்ணீர் விட்டோம். மாயை கொண்டு கண்ணுக்குத் தெரியா இலவச, செய்தி இருட்டடிப்பு, போதையில் ஆழ்த்தும் தொலைக்காட்சிகள், மிரட்டல் என பல வலயங்களுக்குள் அகப்பட்டு உணராமல் இருக்கிறோமே! ஏதிலி யார்?

சென்ற வருடம் இருந்த பதட்டம், இயலாமை, எல்லாம் முடிந்த துக்கம் நெஞ்சை நிறைக்கிறது. நாகரீக உலகம் என்று மார்தட்டி நிற்கும் உலகலில், மறைந்தவனின் சமாதி கூட இடித்தொழிக்கப்ப டும் அவலம். க்ளோபல் வில்லேஜ் என்று பெருமை பொங்கும் உலகில் ஒரு மூதாட்டிக்கு அனுமதி மறுக்கும் மனிதநேயம்.

அதை வைத்து அரசியல் வியாபாரமாக்கும் அவலங்கள். இட்டது கையால் நீர் கொடுத்தமையால் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தவனின் பெருமையை எழுதிக் காசாக்கி உதவிக்கரம் நீட்டும் பொய்முகம். அடிமையாய் இருக்கும் நமக்கு அவர்களுக்கு ஆறுதல் சொல்ல தகுதியில்லை. அவர்க்ளுக்கு அது தேவையும் இல்லை. தமிழ் மாறினாலும், தமிழர் புத்தாண்டு மாறினாலும், தலைஎழுத்தே மாறினாலும் எறியப்படும் எலும்புத்துண்டு க்கு அடிமையாகி விட்டோம். மானத்துக்காய் உயிர்நீத்த அந்த தியாக உள்ளங்களுக்கு மானமற்ற ஒரு ஜீவனின் கண்ணீர் அஞ்சலி. மன்னித்துவிடுங் கள் என் உறவுகளே..

- பொட்டு அம்மான்.



# 'அவன் இவன்'- நான்

பாலாவின் 'அவன்-இவன்' திரைப்படம் வந்திருந்தது. ஓடிச் சென்று பார்த்தேன். பாலாவின் பாத்திரங்கள் மூர்க்கத் துடன் ஓடுகின்றன. நந்தாவில் சூர்யாவும் பிதாமகனில் விக்ரமும், நான் கடவுளில் ஆர்யாவும் ஒரு மூர்க்கமான ஓட்டத்தின் பிறகே எதிரியைச் சாய்க்கிறார்கள். தீயதை முடிக்கிறார்கள். எனவே நானும் ஓடிச் சென்று பாாத்தேன். காரணம் பாலாவின் திரைப்படம் என்பதால். மெதுவாக நட ந்து போய்ப் பார்த்திருக்கலாம் என்று திரைப்படம் முடிந்த பிறகு உணர்ந்தேன். ஏன் என்று சொல்கிறேன்.

ஒரு கோபக்காரனின் குமுறலாகவே பாலாவின் திரைப் படங்கள் பெரிதும் இருந்தன. கோபம் சும்மா குமுறி வந்த தல்ல. 'ஆறுவது சினம்' என்று ஔவையார் ஆத்தி சூடி யில் சொன்னார் அதாவது கோபத்தை ஆற்றி அடக்கு. ஆன ால் பாரதியார் புதிய ஆத்திசூடியில் 'ரௌத்திரம் பழகு' என்கிறார். அதாவது சிறுமை கண்ட போது கோபம் கொண்டு பொங்கி எழு என்றும் அதனை வியாக்கியானப் படுத்தலாம்.

பாலாவிடம் இருப்பது அந்தக்கோபமே தான். குமுறும் கோபத்தை பாலா சினிமாவில் திறம்பட பதிந்துவிடுகிறார். சேது நாயகனின் பிரச்சினை காதல் என்ற போதும் அவன் சமூக அநீதியில் குமுறும் கோபத்தைக் கொண்ட வனாக இருக்கிறான். நந்தாவின் உடலெங்கும் கோபம் ஊர்கிறது. தகப்பனைக் கொன்றதனால் தாய் நந்தாவை வெறுக்கிறார் என்பதும் ஒரு பிரச்சினையே. ஆயிலும் நந்தாவின் பேசு பொருள் சமூக அநீதி மீதான கோப மேயாகும்.

சுடலையில் பிறந்த சிவனின் மகனே பிதாமகன். ஆதலின ால் கோபத்தின் உக்கிரம் நரம்பெங்கும் பாய்ந்து உடலெ ங்கும் ஓடுகிறது பிதாமகனின் நாயகனில். அவ்வாறே நான் கடவுளிலும் கோபக்காரனே அதன் நாயகன். அவனது சடா முடியைப் போல அகங்காரம் சடைத்து விரிந்து கிடக் கிறது. நீதி மறுத்தவனை இந்தக்கோபக்காரனும் சங்ஹா ரம் செய்கிறான்.

யாவற்றிலும் நாயகர்கள் ஓடுகிறார்கள். வெறும் ஓட்டப் போட்டிக்கான ஓட்டமா அது? அல்ல . கொடுமைகள் நிகழும் இடம்தேடி ஓடுகிறார்கள் அட்டுழியத்தின் வாலைப் பிடித்துச் சுழட்டி அதன் தலையைக் தரையோடு சிதற வைக்க ஓடுகிறார்கள். அதே ஓட்டம் அவன் இவனிலும் நிகழ்கிறது. ஆனால் அப்படி ஓடத்தான் வேண்டுமோ என்ற கேள்வியை அவன் இவன் கேட்க வைக்கிறான்.

அவன் இவனின் களம் தமிழ்த் திரைக்கு மிகமிகப் புதிது சேது தவிர மற்றய திரைப்படங்களில் விளிம்பு நிலை மக் கள் விளிம்பைத் தொங்கிப்படித்தபடி நிற்பார்கள். இதி லும் அதுவே. ஒரு நிஜத்தை அதன் குரூரத்துடன் சித்த ரித்து விடுகிறார். ஆனால் அந்தக் குரூரம் எம் நெஞ்சைக் குத்திக் கிழிக்கவில்லை. உள்ளே குருதி என்று ஏதும் கசியவும் இல்லை.

நான் கடவுள் திரைப்படம் முடிந்த பிறகு பாலாவின் குரு பாலு மகேந்திராவும் இளையராஜாவும் பாலாவிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தனர். 'இப்படி அகங்காரமாக கோபக்காரனாக திரைப்படங்கள் எடுக்காமல் சற்று மௌனமையாகத் திரைப்படங்களை எடுக்கவும்' என்று.

மென்மைக்கு பாலா முயன்றிருக்கிறார். அவரது இயல் பான கோபக்காரனும் இடையில் குமுறிவிட்டான் எனவே பாலு மகேந்திரா சொன்னதும் பலிக்கவில்லை பாலா நினைத்ததும் நடக்கவில்லை. என் மனவருத்தம் அதுவே தான்.

படம் கதை என்று எதையும் சொல்லவில்லை. இடை வேளை வரை பல்வேறு சித்திரங்களைக் கீறிக்கொண்டே போகிறார் பாலா. அவையாவும் மிகச் சுவாரசியமாகவே இருந்தன. நான் நினைத்தேன் அவையாவும் ஒன்று சேர்ந்து ஒரு காவியத்தைச் சமைக்கப் போகிறது என்று. காவியம் தான் வேண்டாம். ஒரு கவிதைகூட வந்து விட வில்லை.

வலிந்து ஒரு கதையை இடைவேளையின் பிறகு திணித் துவிடுகிறார் பாலா. அந்தக் கதையால் நெஞ்சில் ஒருதுளி ஈரத்தைக்கூட சொட்டமுடியவில்லை. அதுபேசிய பொருள் ஒரு சமூக அநீதியே ஆயினும், அது வேண்டி நின்ற அழுத் தம் கொடுபடாமையினால் சிறுமை கண்ட போது பொங்கி எழமுடியாது போய்விடுகிறது பார்வையாளர்களால். அத னால் வேறொரு இக்கட்டும் நேர்ந்து விடுகிறது. அடா த்து புரிந்தவனை நோக்கிய நாயகர்களின் ஓட்டம் ஓட்டப் போட்டிக்கான ஓட்டமாகவே எம்மீது ஒட்டாமல் விட்டு விடுகிறது.

அவன் இவன் திரைப்படம் அனைவரும் காணவேண்டிய ஒரு சித்திரம். அத்திரைப்படத்தின் எல்லாச் சட்டகங்களும் மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. காட்சி அமைப்புக்களும் இசையும் நடிப்பும் நம்மைக் கட்டிப் போடுகின்றன.

மிகத்தேர்ந்த கலைஞனுக்குரிய நடிப்பை விஷால் அநா யாசமாக வெளிப்படுத்தி இருக்கிறார் அது எதிர் பாராத ஒன்று. ஆர்யாவின் நடிப்பு ஏலவே அறிந்த ஒன்று தான் விஷால் இவ்வளவு சிறந்த கலைஞனா? என்ற வியப்பி லிருந்து விடுபட முடியவில்லை.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

விஷால் நடிகர் சூர்யாவின் முன்னால் நவரசங்களை வெளிப்படுத்துகிற மாதிரியாக ஒரு காட்சி அமைந்த போது ஓர் அபூர்வமான கலைஞனால் தான் அது சாத்தியம் என நிரூபித்தார் என்பது ஒரு புறமிருக்கட்டும். நவரசங்களின் ஒன்றான கருணையை வெளிப்படுத்தும் போது நடிகர் சூர்யாவும் பார்வையாளர்களும் கண்கலங்கினர். அது நீண்டநேரம் தொடர்ந்தது. பாலா அக்காட்சியை ஏன் அவ் வளவு நேரம் நீட்டியிருக்க வேண்டும்?. அதனை நான் இவ் வாறு தான் வியாக்கியானம் செய்கிறேன். அது முள்ளி வாய்க்காலின் அவலத்தை தமிழ்நாட்டுத் தமிழர் எவ் வாறு எதிர்கொண்டனர் என்பதற்கான ஒரு கண்ணீர் சாட்சியாக பாலா அதனைக் காட்சிப்படுத்தியிருக்கிறார் போலும்.

அவ்வாறு இன்னொரு காட்சி வருகிறது. டியூட்டறி ஒன்றில் ஆசிரியர் கேள்வி கேட்கிறார். மகாத்மா காந் திக்கு அடுத்த அஹிம்சாவாதி யார்? இக்கேள்விக்கு இரண்டு விடைகளையும் கொடுக்கிறார் ஆசிரியர். 1. நெல் சன் மண்டேலா 2. மஹிந்த இராஜபக்சே. மாணவர்கள் சிறிது நேரம் திரு திருவென் முழிக்கின்றனர் சிறிது நேரத்தில் ஒரு மாணவன் எழுந்து நெல்சன் மண்டேலா என்று பதிலளிக்கிறார். ஆசிரியருக்கு ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது 'நன்றி யேசப்பா நன்றி சரியான பதிலைச் சொல்ல வைத்து விட்டாய்' என்று மேலே பார்த்து சிலுவைக் குறியிட்டார்.

இக்காட்சி உணர்த்திய விடயம் இந்திய அரசு மஹிந் தாவை போர்க்குற்றவாளியில் இருந்து நீக்குவதற்கு முயல்கிறது என்பதனை நக்கலாகவும் நையாண்டியா கவும் குறிப்பிட்டது. இதுவே தேர்ந்த கலைஞனுக்குரிய இய ல்பு. அதுவே பாலா!

குறைகள் சொன்ன போதிலும் அவன்-இவன் திரைப்படத் தை இன்னும் ஒருக்கால் பார் என்று மனம் தூண்டுகிறது. அது இயக்குனரான பாலாவின் வெற்றி என்றே சொல்லு வேன்.

# பொருளாதாரத் தடை

(18ம் பக்க தொடர்ச்சி)

பொருளாதாரத்தடையென்பதை ஒரு நாட்டிற்கெதிராக, அத்ற்கு உதவி ஒத்தாசைகளைச் செய்துவரும் நாடு அவ்வுதவிகளை நிறுத்திக்கொள்வ தென்பதாக மட்டும் கணிப்பிடலாகாது. பொருளாதாரத் தடையென்னும்போது அத்தடையைப் போடும் நாடும் அதனால் பாதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு பல நாட்டு உதவிகளும் கிடைக்கும் வாய்ப்பிருப்பதால் இந்தியா விதிக்கும் பொருளா தாரத் தடை பெரிய பாதகங்களை ஏற்படுத்துமா என்பது சந்தேகமே.

இலங்கை, இந்திய பொருளாதார வளர்ச்சியின் அல்லது வீழ்ச்சியின் தாக்கங் களை அனுபவிக்கும் ஓர் நாடாக இருந்தாலும் அதன் இன்றைய முன்முயற்சி கள் இந்தக் கட்டிலிருந்து விடுபட்டுச் சுயமானவோர் பொருளாதாரக் கட்டமைப்பினுள் தன்னை வளர்த்தெடுத்துக் கொள்ளும் முயற்சிகளாகவே காணப்படுகின்றன. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் என்றவோர் சர்வதேச வலைப்பின்னலால் பயனடையும் இலங்கையை மேற்குலகினதும் இந்தியாவினதும் ஆதிக்கத்துக்குள்ளிருந்து விடுவித்து இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தனது நிரந்தரமான நண்பனாக்கிக்கொள்ள வளர்ச்சிபெற்ற சீனா போட்டி போடுகிறது. இலங்கைமீது இந்தியாவால் கொண்டுவரப்படும் பொருளாதாரத் தடை சீனாவின் இந்த நோக்கத்திற்கு சிறந்த ஊன்றுகோலாக அமையும் வாய்ப்புகளே அதிகமுள்ளன. ஆனாலும் பக்கத்தில் இருபதுமைல் கடல் எல்லையுள் உள்ள இந்தியாவை குறிப்பாகத் தமிழகத்தைப் புற க்கணித்து இலங்கை சீனாவின் ஆதிக்கத்துக்குள் சென்றுவிடுவது அவ்வளவு இலேசுப்பட்ட காரியமுமில்லை.

இலங்கையிலுள்ள சிங்கள தேசியத்தைவிடவும் பெரிதான பாக்குநீரிணை யின் இருகரைகளிலுமுள்ள தமிழ்த் தேசியத்தின் ஆதிக்கம் அரசியல் ரீதியில் வளர்த்தெடுக்கப்படும்போது சீனா போன்ற நாடுகள் தமிழர்களை யும் திரும்பிப் பார்க்காமல் இருக்க முடியாது. ஆனால் அதனை எவ்வாறு வளர்த்தெடுப்பது என்பதே இன்றுள்ள கேள்வியாக இருக்கிறது. அறிஞர் அண்ணாவின் 'மத்தியிலே கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற கோஷம் அடங்கிப்போனதோடு தமிழர்தேசியம் உறக்க நிலைக்கு வந்தது. ஈழத்தமிழர்க ளின் போராட்டம் ஆயுதமுனையில் அடக்கப்பட்டதோடு அது மூர்ச்சையடை ந்து கிடக்கிறது. ஆனாலும் இன்னும் இறந்து போகவில்லை. அதன் மூர்ச் சையைத் தெளிவித்து மீண்டும் புத்துயிர்க்கப்பண்ண உருப்படியான ஆய்வு களில் அரசியல் அறிஞர்கள் ஈடுபடுவதும் காலத்துக்கேற்ற வகையில் தமி ழர்தேசியத்தைக் கட்டியெழுப்பும் பணிகளில் அரசியல் வாதிகளை ஈடுபட தூண்டுவதும் இன்றுள்ள முக்கிய தேவைகளாகும். வெறும் 'நாம் தமிழர்' என்ற உணர்வோடு செயலாற்றிக் கொண்டிருக்கும் தமிழக மக்களுக்கு அரசியல் விஞ்ஞான ரீதியாக தமிழர் தேசியத்தின் அவசியத்தைப் புரியவைப்பது அதன் முதல்படியாகிறது.

தொடருவம்...

# "5" கண்டிஷன்ஸ்..!

*இடம் : வைத்தியசாலை*

டாக்டரிடம் Patient-ன் மனைவி..

'டாக்டர்.. என் Husband எப்படி இருக்காரு..? '

'மேடம் ! உங்க Husband health கொஞ்சம் Critical-ஆ தான் இருக்கு !'

'என்ன டாக்டர் இப்படி சொல்றீங்க..? நான் உங்களை தான் தெய்வம் மாதிரி நம்பிட்டு இருக்கேன்..! '

'பயப்படாதீங்க மேடம்.. நான் சொல்ற மாதிரி செய்ங்க.. அவரு சீக்கி ரமே குணமாயிடுவாரு..! '

'சொல்லுங்க டாக்டர்.. என்ன செய்ய ணும்..? அவருக்காக நான் என் உயிரையும் குடுப்பேன்..! '

'ஓவரா உணர்ச்சிவசப்படாதீங்க. நான் சொல்றதை மட்டும் Follow பண்ணுங்க.அது போதும்.. '

' சரி.. சொல்லுங்க டாக்டர்.. '

'ம்ம்..

1. தினமும் அவருக்கு பிடிச்சமான உணவை சமைச்சி குடுங்க.
2. அவர்கிட்ட அன்பா இருங்க., எந்த விஷயத்துக்கும் சண்டை போடாதீங்க.
3. உங்க பிரச்னைகளை அவர்கிட்ட சொல்லி புலம்பாதீங்க.
4. சேலை வேணும்., நகை வேணும்னு அவரை டார்ச்சர் பண்ணாதீங்க..
5. முக்கியமா., மெகா சீரியல் பார்க்காதீங்க.

இதையெல்லாம் நீங்க கரெக்டா Follow பண்ணுங்க., ஒரு வருஷத்துல உங்க Husband நல்லாயிடுவாரு.. '

'சரிங்க டாக்டர்..! '

வீட்டுக்கு போற வழியில கணவன் தன் மனைவியிடம்...

'டாக்டர் என்ன சொன்னாரு..? '

'நீங்க பொழைக்கறதுக்கு வழியே இல்லன்னு சொல்லிட்டாருங்க..! '

' ?!!?!!?! '


MASS GLOBAL SHIPPING

MASS GLOBAL SHIPPING

Sea - Air - Road & Ticketing , Serving all the Sri Lankan Communities

MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK

Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

• Packers • Movers • Shippers

We Offer the Best Services than all the Other in the trade!



Special rates for Containers and Machinery

4 Collection Points : Harrow, Warford, Knightsbridege, Croydon

FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00

Wooden boxes from £9.00
Call 0208 3862314
Contact : Das - 07852266400
Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates

MASS GLOBAL SHIPPING
Warehouse, 657, Victoria Road Ruslip, HA40LN
E-Mail: info@massshipping.com,
Web : www.massshipping.com

*Condition Apply Warming
No hidden charges
No bnognus promotions



ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________

Address : ____________

Postcode: ____________

Telephone: ____________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்,

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Medical Professional, 5' 7", Christian, in UK since childhood, seeks matching groom. Ref : 3440

2. 26 வயது லண்டனில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3425

3. 49 வயது 5'6" லண்டனில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3432

4. 32 வயது 5'6" லண்டனில் MSc படித்துக் கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகள் லண்டனில் தேவை Ref: 3433

5. 32 வயது 5'6" லண்டனில் MSc படித்துக் கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகள் லண்டனில் தேவை Ref: 3433

6. Age 32 5'7", Living in London, Degree in bio medical, pharteutical company project manager and uk citizen, Ref: 575

7. 31 வயது லண்டனில் MBA பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3417

8. Age 28, Living in London, BFA, MSc degree holder and UK PR , looking for UK born or Euro bride. Ref: 3419

9. 45 வயது 5'8" பிரித்தானியாவில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3422

10. 38 வயது பிரித்தானியாவில் சொந்தமாக தொழில் புரியம் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3427

11. 26 வயது 5'7", லண்டனில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3428

12. 41 வயது பிரித்தானியாவில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3430

13. 29 வயது 6'1" லண்டனில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3437

14. வயது 45, 5'2" கொழும்பில் வசிக்கும் வங்கியில் வேலை பார்க்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3391

15. வயது 31, London இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3394

16. வயது 26, கொழும்பில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3395

17. Age 53, 5'4" , UK PR உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3396

18. வயது 27, 5'5", UK PR, BSc(Hons) மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3397

19. வயது 27, UK இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3398

20. வயது 35, UK PR, உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3400

21. வயது 31, Computer Engineer, India இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3401

22. வயது 25, Germany இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3403

23. வயது 44, 5'0", UK இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3405

24. வயது 32, UK இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3407

25. வயது 26, 5'8", IT Engineer, India இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3408

26. வயது 29, Electric Engineer, கொழும்பில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3409

27. வயது 27, 5'8", Civil Engineer, India இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3411

28. வயது 34, 5'10", Doha இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 3412

29. Age 29, 5'9", French Citizen, Graduated, looking for a matching bride. Ref: 3374

30. வயது 30, 5'6", இலங்கையில் வசிக்கும் A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 3386

31. வயது 35, 5'10", பிரான்சில் வசிக்கும் A/L படித்த மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3372

32. Age 31, 5'8", HSMP Visa in UK, Engineer, looking for a suitable bride. Ref: 3373

33. Age 30, 6', Student Visa in UK, Graduated, searching for a suitable woman. Ref: 3376

34. Age 30, 5'6", PSW Visa in UK, Engineer, looking for a suitable bride with PR or . Ref: 3352

35. Age40, 5'3", UK PR, A/L finished, looking for a suitable bride.Ref: 3368

36. Age 33, 5'7", Canadian PR, Computer Engineer, looking for a well-educated bride. Ref: 3367

37. Age 35, 5'5", British Citizen, Graduated, looking for a suitable bride. Ref: 3346

38. வயது 27, 5'8", Student Visa, Graduated, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகளை தேடுகின்றார். Ref: 3361

39. வயது 36, 5'6", A/L finished, இலங்கையில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றார்.Ref: 3355

40. Age29, 6'1", Student Visa, Graduated, looking for a matching bride with UK PR or Citizenshhip. Ref: 3349

41. Age 29, 5'8", HSMP Visa in UK, MSc qualified, looking for an educated bride. Ref: 3344

42. வயது 30, 5'9", MBA finished, PSW Visaஇல் இருக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3341

43. Age 37, 5'6", Graduate, Student Visa in UK, looking for a bride with UK Citizenship. Ref: 3339

44. Age 24, 5'4", Graduate, Student Visa in UK, seeking a suitable bride with UK Citizenship. Ref: 3338

45. வயது 35, 5'9", UK PR, Graduate, மணமகன் நன்கு படித்த துகுந்த மணமகளை தேடுகின்றார். Ref: 3337

46. வயது 28, 5'6", இலங்கையில் IT Companyஇல் வேலை செய்து கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3331

47. Age 33, 5'4", UK PR, looking for a Suitable bride. Ref: 3329

48. Age 30, 5'5", British Citizen, BSc in Computer Science, looking for a well educated bride. Ref: 3291

49. Age 29, 5'8", British Citizen, Financial Sector, seeking well educated girl. Ref: 3301

## மணமகன் தேவை

1. 32 வயது லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3413

2. 32 வயது சுவீடனில் வசிக்கும் மணமகள் தகுந்த மணமகனை பிரித்தானியாவில் தேருகின்றார். Ref: 3414

3. 24 வயது 5'2" யாழில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3416

4. 28 வயது 5'3" லண்டனில் வசிக்கும் விவாகரத்துப் பெற்ற குழந்தையுடன் வாழும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3418

5. 32 வயது லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3420

6. 30 வயது 5'6" லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3420

7. Age 30, 5'6", Doctor, British citizen, looking for a Doctor. Ref: 3423

8. 41 வயது கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3431

9. 46 வயது லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3425

10. 29 வயது கொழும்பில் வாழும் IT பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3434

11. 24 வயது 5'5" லண்டனில் வாழும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3436

12. வயது 25, 5'3", Student Visa London இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3392

13. வயது 31, 5'2", இலங்கையில் வசிக்கும் மணமகளுக்கு London PR உள்ள மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3402

14. வயது 29, 5'6", London இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3404

15. வயது 25, BSc, இலங்கையில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3406

16. வயது 24, 5'4", BSc London இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3410

17. வயது 32, London இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3413

18. வயது 32, Swiss இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3414

19. Age 30, 5'3", British Citizen, Chemical Engineer, looking for a professional groom. Ref: 3389

20. Age 29, 5'5", British Citizen, Doctor, looking for a well-educated groom. Ref: 3390

21. Age 28, 5'8", British Citizen Engineer, seeking suitable groom. Ref: 865

22. வயது 29, 5'4", Graduated, இலண்டனில் Student Visa,ல் வசிக்கும் மணமகள் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனை தேடுகின்றார். Ref: 3381

23. வயது 23, 5'2", இலங்கையில் வசிக்கும் A/L படித்த பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3378

24. Age 29, 5'2", A/L finished, Living in Sri Lanka, looking for a suitable groom with PR. Ref: 3377

25. Age 27, 5'5", British Citizen, working as a Commercial Financial Analyst, looking for a well-educated groom. Ref: 3371

26. Age 40, 5'2", British Citizen, Graduated, seeking for an educated groom in UK. Ref: 3362

27. Age 31, 5'6", British Citizen, Accountant, looking for a well-educated groom. Ref: 3365

28. Age 26, 5'8", British Citizen, Medical Sector, searching for a professional groom in UK. Ref: 3359

29. வயது 42, 5'6", Canadian PR, Medical Sector, நன்கு படித்த மணமகனை தேடுகின்றார். Ref: 3358

30. வயது 19, 5'2", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3348

31. வயது 34, 5'5", IT qualified, கனேடிய பிரஜாவுரிமை பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3342

32. வயது 30, 5'7", Engineer, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு நன்கு படித்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3340

33. Age 33, 5'2", Medical Sector, Living in Sri Lanka, looking for a matching groom. Ref: 3336

34. Age29, 5'6", A/L finished, living in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref: 3335

35. Age 33, 5'4", Living in SriLanka, Graduate, looking for an educated groom. Ref: 3345

36. Age 28, 5'5", British Citizen, Accountant, looking for a well educated groom. Ref: 3316

37. Age 33, 5'2", British Citizen, Doctor, looking for a well educated groom. Ref: 3307

38. Age 27, 5'3", British Citizen, Doctor, seeking matching and well educated groom. Ref: 3308

39. வயது 29 5'3", Tourist Visa in UK, A/L படித்த பெண்ணுக்கு இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3313

40. வயது 33, 5'6", இலங்கையில் Accountant ஆக வேலைசெய்யும் பெண்ணுக்கு நன்கு படித்த இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனை தேடுகின்றனர். Ref: 826

41. Age 41, 5'6", British Citizen, Pharmacist, seeking educated groom. Ref: 3290

42. வயது 25, 5", இலங்கையில் வசிக்கும் A/L படித்த பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 1222

43. Age 29, 5'3", Tourist Visa in UK, worked in a bank in Jaffna, looking for a matching groom with UK PR or Citizenship. Ref: 3314

44. வயது 41, 5'6", British Citizen, Pharmasist, நன்கு படித்த தகுந்த துணையை தேடுகின்றார். Ref: 3290

45. வயது 26, 5'6", Psygologist, கொழும்பில் வசிக்கும் பெண்ணுக்கு இலண்டனில் நன்கு படித்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3299

46. Age 32, 5'5", A/L finished, Student Visa in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref: 3302

47. வயது 34, 5'5", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3268

48. வயது 33, 5'2", A/L finished, இந்தியாவில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3278

49. Age 24, 5'6", BA finished, looking for a suitable groom with UK citizenship. Ref: 3277

50. Age 29, 5'4", Doctor, Australian Citizen, looking for a well educated groom. Ref: 3232

51. Age 28, 5'4", BSc degree holder, British Citizen, serching for a matching groom. Ref: 1596

52. வயது 25, 5'4", Accountant Student, இலண்டனில் Student Visa,ல் இருக்கும் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3260

53. வயது 26, 5'4", இலங்கையில், BA final year படித்துக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3257

54. Age 32, 5'4", Doctor, Stident visa in UK, looking for a matching groom in UK. Ref: 3243

55. வயது 32, 5'2", ஆசிரியையாக இலங்கையில் வேலை செய்யும் பெண்ணுக்கு இலண்டனில் தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 3240

56. Age 31, 5'4", Architect, British Citizen, looking for a well educated groom. Ref: 3227

57. வயது 29, 5'2", Account Student, பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 881

58. வயது 32, 5'4", Architect ஆக வேலை செய்யும் ஜேர்மனிய பிரஜாவுரிமை பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 589

59. 42 வயது, 5'2", ஆசிரியையாக இலங்கையில் பணிபுரியும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர் Ref: 2622

60. 26 வயது, 5'3", நோர்வேயில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2749

61. 25 வயது, 5'6", BA finished, British Citizen, நன்கு படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 2495

62. 29 years, 5'2", Accountant Student, French Citizen, looking for a educated groom. Ref: 881

63. 25 வயது, 5'6", கொழும்பில் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2273

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# சங்கக் கடை

புலம்பெயர் நாடுகளில் தமிழர்களின் ஈடுபாட்டுக்குரிய தொழிலாக பெற்றோல் கராஜ் என்கின்ற எரிபொருள் விற்பனை நிலையம் அமைந்திருந்தது. இரவு பகல் பாராத கடும் உழைப்புக்கு எம்மவர்களுக்கு அது கரம் கொடுத்தது. பெற்றோல் நிலையங்களுடைய தொகை குறைவடைய தனியார் கடைகள் என்கிற வியாபார நிலையங்களில் எம்மவர்களுடைய ஈடுபாடு அதிகரித்துள்ளது. கடைத் தொழில்கள் வியாபித்திருக்கிற நிலையில் அடுத்தவன் உழைக்கின்றான் தாமும் கடையைத் தொடங்குவோம் என்று ஆழம் தெரியாமல் காலை விட்டு அவதிப்படும் எம்மவர்களையும் பார்க்கின்றோம்.

பெட்டிக்கடை முதல் பெரிய கடை வரை தனியார் விற்பனை நிலையங்களாக இங்குள்ளது போல ஊரில் இருந்த நிலைகளை நினைவில் கொண்டு பார்ப்போமேயானால் சங்கக் கடைகள் அன்றும் இன்றும் ஊர்தோறும் சேவை புரிகின்ற கடைகளாக மிளிர்வதைப் பார்க்கின்றோம். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், பண்டகசாலை, நியாய விலைக்கடை அல்லது மக்கள் கடை என்ற பெயரில் ஊருக்கு ஊர் அன்று முதல் இன்று வரை சேவையில் ஈடுபடுகின்றன. ஆரம்பகாலத்து சங்கக் கடைகள் பண்டக சாலைகளாக அமைந்திருந்தது. மக்களால் மக்களுக்காக மக்கள் நடத்தும் வியாபார நிலையமான சங்கக்கடை, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஊருக்கூர் அமைந்திருக்கும் சங்கக் கடைகளின் பொறுப்பாளராக மனேஜர் என்ற முகாமையாளர் சிட்டை எழுதுபவராகவும் விற்பனைப் பொருட்களை பொறுப்பாளராகவும் கடைத்திறப்பைக் கொண்டு இருப்பார். கடையில் வியாபார பொருட்களை பொதியாகக் கட்டிக்கொடுப்பவருக்கு ஒரு சிற்றூழியர் இருப்பார். பெரிய சங்கக் கடைகளில் சிற்றூழியர் தொகை இரண்டாகவும் இருக்கும். முகாமையாளர்களைக் கண்காணிக்க தலைமையகத்தில் ஒரு பொது முகாமையாளர். கணக்குகளைப் பேண கணக்காளர். விற்பனைக்காசைப் பெற காசாளர். கொழும்புக்கு லொறிகளைக் கொண்டு போய் பொருள் கொள்வனவு செய்ய பார ஊர்திகள் கொள்வனவு ஊழியர்கள் என்ற கட்டமைப்பை சங்கக் கடைகள் கொண்டிருக்கும். இவர்களைக் கண்காணிக்க ஒரு இயக்குனர் சபை ஒரு தலைவரின் கீழ் இயங்கும். இயக்குனர்களை சங்க அங்கத்துவர்கள் வாக்கு மூலம் தெரிவு செய்வார்கள். 1970 முதல் சிறீமாவோ அரசாங்கம் நிலைத்த காலம் வரை அந்தந்தத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது தொகுதி அமைப்பாளர்களால் நியமிக்கப்பட்டவர்கள் இந்த பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பராமரித்தார்கள். இயக்குனர் சபையை அலங்கரித்தார்கள். சங்கக்கடைகளில் பகல் கொள்ளை ஊழல் மோசடி என்பன அடிமட்டம் முதல் தலைமை வரை அதிகம் காணப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. கிளை முகாமையாளர் ஊர்க்காரரின் உறவாளனாக அல்லது நண்பராகி இருப்பார். பிறகு தாறன் என்ற சொல்லுக்கு உரத்தையோ பொருட்களையோ கடனாகக் கொடுத்து உதவுவார். தன் தேவைக்கும் வீட்டுத் தேவைகளுக்கும் விருப்பப்படி பொருட்களைக் கொண்டு போவார்.

கணக்கெடுப்பு என்று வரும் போது அவர் பாடு திண்டாட்டமாகிவிடும். ஆயிரக்கணக்கான ரூபா பொருள்க் குறைவு கணக்கில் வரும். கிளை முகாமையாளர் தற்காலிகமாக நீக்கப்படுதல் பணம் கட்ட தவணை வழங்குதல் அவர் மனைவியின் தாலியை விற்றோ, கடன் பட்டோ குறைவுப்பணத்தைக் கட்டி தான் நீதிமன்றப்படி ஏறுவதை தவிர்த்தல் என்பன அன்றாடச் சங்கதிகள்.

பண்டகசாலை என்று இயங்கிய காலத்தில் சங்கக்கடையின் அன்றாட விற்பனைக்காசு கிளைத்தலைவரிடமே சேர்ப்பிக்கப்படும். எங்கள் ஊர் சங்கக்கடை பொறுப்பாளராக கிளைத் தலைவராக இருந்தவர் எம்பேரனார். அன்றைய விற்பனைப்பொருட்கள் பண்டகசாலை சிற்றூழியரான அம்மானின் மூலம் அன்றாடம் இரவு வீட்டுக்கு வரும். அரிக்கன்இலாம்போடு அம்மான் நடந்து வந்து காசைக் கணக்குப் படிதந்துவிட்டுப்போவார். வழிப்பறி, களவு என்ற பிரச்சினைகள் எழாத காலம் அது. பல தொடர் ஆசைகள் அதிகரித்த நிலையில்சிற்றூழியர்களாயிருந்த பலருடைய களவுகள் அம்பலமாயின. அம்மான் நல்லவர் அப்பாவி ஆனாலும் அரைறாத்தல் சீனிக்குப்பதிலாக ஒரு றாத்தலை தன் உறவினருக்கு அளந்து கொடுத்தார் கையும் களவுமாகப் பிடித்தேன் என்று முகாமையாளர் ஒரு நாள்முறைப்பாட்டோடு வந்தார். தவறுதலாக நடந்தது என்பது அம்மானின் வாக்கு மூலம். ஆனாலும் வேலை பறிபோனது. கணக்கெடுப்பென்று வரும்போது தப்பித்துக் கொள்வதற்காக வெற்றுப் பெட்டிகளை அடுக்கி வைத்து கணக்குக் காட்டுவதும் முகாமையாளரின் சூழ்ச்சியாயிருந்தது.

கூப்பன் கடையென்றும் சங்கக் கடைக்கு இன்னொருபெயர். அரசாங்கம்குறைந்த விலை அரிசி, கட்டுப்பாட்டு விலையில் தட்டுப்பாட்டுச் சாமான்கள் என்பனவற்றை வீட்டுக்கு வீடு வழங்க இந்த கூப்பன் கடைகள் பயன்படுத்தப்பட்டன. கூப்பன் அட்டைகள் ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்பட்டது. அந்தக்கூப்பன் அட்டையை அரிசிமுதல் பொருட்களைக் கொள்வனவு செய்ய குடும்பங்கள் பயன்பட்டன. ஒருவர் குண்டாகி இருந்தால் எந்தக்கடையில் உனக்குக்கூப்பன். என்ற கேலிப்பேச்சு அந்தக்காலத்தில் அதிகமாக பரவலாக எழுந்த ஒன்று.

**ஊரின் வாசம்**

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

தராசு அளவீட்டில் குறைந்து அளந்து முகாமையாளர் கொள்ளையடிக்கிறார் என்பது அடிக்கடி எழுப்பப்படும் மக்களின் முறைப்பாடு. கூப்பன் கடை அரிசி, உள்ளி, மிளகாய், சீரகம், பருப்பு, மண்ணெண்ணெய் என்று அவ்வப்போது கூப்பனுக்கு வரும் கட்டுப்பாட்டுப் பொருட்கள் அயலில் உள்ள தனியார் கடைக்கு எப்படியோ போய்ச் சேர்ந்துவிடும். கிளை முகாமையாளர் கல்வீடு கட்டி மோட்டார் சைக்கிளும் ஓடுபவராகவும் இருந்தால் எங்கு கொள்ளையடித்தார் என்ற குற்றச்சாட்டும் மக்களால் எழுப்பப்படும். இதை மெய்யென்று நம்பக்கூடிய அளவிற்கு சங்கக்கடை முகாமையாளர்கள் பலருடைய வாழ்க்கை வசதி அமைந்திருந்ததும் ஒரு காரணம். இயக்குனர்களைத் திருப்திப்படுத்தி தானும் உழைக்கக்கூடிய புது முகாமையாளர்களும் இருந்தார்கள். 'ஆற்றிலே போற தண்ணீர் அண்ணை குடி தம்பி குடி' என்ற நிலையில் கட்டுப்பாட்டுப் பொருட்களுக்காக தொடங்கப்பட்ட சங்கக் கடைகளில் ஊழல்கள் அதிகரித்திருந்தது. அரசியலில் ஆளையாள் சாடவும் இந்தச் சங்கக்கடை ஊழல் பெரிதும் உதவின.

**கணக்கெடுப்பு என்று வரும் போது அவர் பாடு திண்டாட்டமாகிவிடும். ஆயிரக்கணக்கான ரூபா பொருள்க் குறைவு கணக்கில் வரும்.**

கணக்கெடுப்பு வருமுன் தாம் கணக்கு விடுவதற்கு ஒரு வழியாக கடையில் களவு நடந்து விட்டதாக காட்டுவதாக சங்கக்கடை முகாமையாளர்கள் முனைப்பாய் இருந்தார்கள். சங்கக் கடை கூரை ஓடு பிரிக்கப்பட்டிருக்கும் ஆனால் உள்ளிருந்த சிலந்தி வலை ஒட்டடைகள் அப்படியே இருக்க களவு போய்விட்டதாக கிளை முகாமையாளர் முறைப்பாட்டைக் கொடுப்பார்.

நல்லூரில் சிறிமாவோ அரசாங்க காலத்தில் பல்நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தொடர் நியமனத் தலைவராக இருந்தவர் அருளம்பலம். கட்டையர் என்பது அவருக்குப் பட்டப்பெயர். காங்கிரஸ் கட்சியால் வென்று அரசாங்கக் கட்சிக்குத் தாவி, மாவட்ட அமைச்சராக முன்மொழிந்தவர். தமிழரசுக்கட்சி மகாநாட்டில் ஒரு கவியரங்கம் அதில் ஒரு கவிதை இப்படி அமைந்தது.

*'ஒட்டைப்பிரித்து அதன் கீழ் உள்ள ஒட்டடை விலகாமலே பெட்டகம் திறந்து பொதுப்பணம் திருடிய கட்டையர் தமிழருக்கு தலைவர் என்றால் நாவலர் பிறந்தென்ன நல்லூரான் இருந்தென்ன'* ஆலால சுந்தரத்தின் இந்தக் கவிதையால் கைதட்டலால் அரங்கமே அதிரும்.

குறைபாடுகளுக்கு மத்தியிலும் ஊர் மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை பெற இன்றும் விநியோக முறைகளை சீராக்கிக்கொள்ள இந்தச் சங்கக்கடை முறைகளே தேவையாக உள்ளது. அதன் சேவை இன்றும் தொடர்கின்றது.

## மக்கள் களம்

### தமிழக சட்டசபை தீர்மானத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்!

இலங்கை மீது இந்திய அரசு பொருளாதார தடை விதிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கடந்த வாரம் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

*- செய்தி*

கடைசியில், சோனக புத்தியை காட்டிப் போட்டாங்கள். சோனகனையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்று தலை குப்புற நின்றாலும்.... நாய் வாலை நிமிர்த்த முடியாது.

*- தமிழ் சிறி*

ஒவ்வொருமுறை வெண்ணை திரளும் போதும் தாழியை உடைப்பது இவர்கள் வழக்கம். இதுக்கு ஒரு முடிவு கட்டும்வரை இலங்கையில் எமக்கு தொடர்ந்து துன்பம்தான்.

*- பனங்காய்*

சிங்களவனுடன் கூட... ஒற்றுமையாக, இருக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும்.. இவங்கள், தகுந்த நேரம் பார்த்து.... குழி பறிப்பவர்கள்.

இதற்குத் தீர்வு என்றால்... எல்லாரையும், மூட்டை கட்டி சவூதி அரேபியாவுக்கு ஏற்றுமதி செய்ய வேணும். முடியிற காரியமா?

*- தமிழ் சிறி*

டெல்லியில் இருந்து வந்தவர்கள் இவர்களை சந்திக்கவில்லை. அதற்கும் 'கண்டித்து' அறிக்கை விடுவார்களோ தெரியவில்லை.

*- அகூதா*

இலங்கை இரண்டாக உடைந்தாலே தவிர இதுக்கு ஒரு முடிவு கட்டேல்லாது..

*- பனங்காய்*

பக்கத்து இலைக்கும்.... பாயாசம் கேக்கிறவனாலை, இலங்கை மூண்டாய் உடையும் போலை... கிடக்குது.

*-தமிழ் சிறி*

தமிழருக்கு தீர்வு சம்பந்தமாக பேசும் பொது முஸ்லிம்கள் தமக்கும் தனியலகு வேண்டும் என்று கேட்பார்கள். ஆனாலும் தமிழருக்கு ஆதரவாக என்றுமே இருந்ததுகிடையாது. ஒருபோதும் இவர்கள் ஒற்றுமையாய் தமிழர்களுடன் செயற்படப் போவதில்லை. இவர்களை சகோதரர்கள் என்பார் சிலர் ஆனால் அவர்கள் தாம் தமிழர் என சொல்வதைவிட தாங்கள் முஸ்லிம்கள் என்பதிலும், தாங்கள் ஏதோ மத்திய கிழக்கில்(அரபியாவில்)இருந்து வந்தவர்கள் போல் பேசுவார்கள். என்னை பொறுத்தவரை இவர்களை நம்புவதில் பயன் ஏதும் இல்லை.

*- தமிழ் அரசு*

இவர்கள் தமிழினக் கொலையில் சிங்களவனுக்கு நிகராக இயங்கியவர்கள். தமிழனின் முள்ளிவாய்க்கால் துயரில் ஆனந்தம் கொண்டாடியவர்கள். ஆனால் தமிழனுக்குத் தீர்வென்று வரும்போது தமக்கும் அது வேண்டும் என்று சாவீட்டில் சொத்துக்காக சண்டை போடும் கீழ்ச்சாதி மனிதர்கள். மேற்குலகம் இவர்களைத் தண்டிப்பதிலும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

*- ரகுநாதன்*

கொஞ்சம் பொறுங்கோ.

தற்செயலாக தமிழக சட்டசபைத் தீர்மானத்தின் மூலம் தமிழனுக்கு ஏதும் தீர்வு கிடைக்கும் நிலை வருமாயின், தங்களையும் அந்த பேச்சுவார்த்தைகளில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று தொப்பி மாற்றப்படும்.

*- தப்பிலி*

தமிழ் பேசுகிறவர்கள் என்ற பதத்தோடு மாத்திரம் இவர்கள் தங்கள் உரிமைகளை மற்றைய தமிழர்களோடும் பகிர்ந்து கொள்ளலாம்.

மற்றும் படி அவர்கள் எங்கும் வாழலாம். அவரவர் விருப்பம்.

சரி தனி அலகு கேட்டாலும் வட கிழக்கின் தமிழர் தாயகத்தோடு அது இருந்தால் சரி.. தங்களுக்கான சில சலுகைகளை எடுப்பதில் தவறில்லை.

எரித்திரிய விடுதலையின் போதும் உதுதான் நடந்ததாக எரித்திரிய நண்பர் சொல்வார். எரித்தியர் என்று சொல்ல விரும்புகிறவர்கள் தங்களோடு இருக்கலாம் என்று சொன்னபின். அநேகமான எரித்திரிய முஸ்லீம்கள் அங்கேயே தங்கி விட்டார்கள். பலர் எத்தியோப்பியா சென்று அல்லது போராட்டத்துக்கு எதிராக இயங்கி எத்தியோப்பியாவில் தங்கி விட்டார்கள்.

*- நேசன்*

முஸ்லீம்கள் தொடர்பில் வெளிப்படையாக இருப்பது கொஞ்சம் சிக்கலான விடயம். அவர்களின் உரிமைகளை தமிழ் மக்கள் நிச்சயம் சிங்களவர்கள் போல பறிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையை வளர்க்க வேண்டியது அவசியம். அதற்காக முஸ்லீம்களிடம் தமிழ் மக்கள் சோரம் போக முடியாது. அரவணைத்துச் செல்லலாம் அதற்காக மண்டியிட முடியாது.

என்னைப் பொறுத்தவரை முஸ்லீம்களின் விலாங்கு நிலை தன்மையே அவர்களுடனான கடந்த கால கசப்புக்களுக்கும் முக்கிய காரணம். இதனை தமிழர்களில் ஜனநாயகம் பேசுவோரும்.. மேற்குலக கொள்கை வகுப்பாளர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். மேற்குலகம் புலிகள் முஸ்லீம்களை விரட்டி அடித்தது பயங்கரவாதம் என்று கூறி வந்தது.. இப்போ தான் முஸ்லீம் நாடுகளில் எல்லாம் போய் அதன் தலைமைகளை விரட்டி வருகிறது. இதனை என்னவென்று மொழிவது..???!

சிங்களவர்களைப் பொறுத்தவரை அவர்கள் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை விட ஜிகாத் முஸ்லீம்களை மோசமாக பார்க்கிறார்கள். அதேபோன்று ஜே வி பி மீது சிங்கள ஆட்சியாளர்களுக்கு அதிக பயம் உண்டு. இவைதமிழர்களைப் பொறுத்தவரை சிறீலங்காவைப் பொறுத்தவரை அரசியல் செய்ய முக்கியமான விடயங்கள்.

*- நெடுக்கால போவான்*

முஸ்லிம்கள் பலம் எங்குள்ளதோ அங்கே போய் ஒட்டிக் கொள்வார்கள். சிறிலங்காவில் வாழுகின்ற முஸ்லிம்கள் தமிழர்களே முஸ்லிம் என்பது மதமே ஒழிய அது ஒரு இனம் அல்ல.(அவர்கள் ஓர் தனி இனமானல் அரபு மொழியில்தான் கதைக்க வேண்டும்) தமிழர்களின் உரிமை மீட்பு என்பது முஸ்லிம்களின் உரிமைமீட்புமாகும். ஆனால் கடந்த காலங்களில் தங்களை ஒரு வேறுபட்ட இனமாக காட்டிக் கொள்ளும் முஸ்லிம்களால் தமிழர்கள் பட்ட வேதனை சொல்லி மாளாது. தமிழருடன் சேர்ந்து இருந்தால் தமிழர் அனுபவிக்கும் உரிமைகள் கிடைக்கும் சிங்களவனுடன் சேர்ந்து இருந்தால் இறுதியில் எதுவும் மிஞ்சப் போவதில்லை. தமிழர்களின் துன்பங்களில் பங்கெடுக்காத முஸ்லிம்கள் தமிழர் தொடர்பான தீர்வு பற்றிக் கதைக்கும் பொழுது தங்களுக்கும் பங்கு வேணும் என்ற கேட்பது அப்பட்டமான சுயநலம்.

*- புலவர்*

முன்னரே அப்துல் அக்கீமு இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களை போல மட்டகளப்பு மற்றும் அம்பாரையை தனி அலகாக கேட்டவரோன்னொ..

இந்த மாதிரி சைடில் சிந்து பாடும் ஆக்களை பேச்சுவார்த்தையில் சேர்க்கலாம் தவறு இல்லை இவர்கள் வளைகுடா நாடுகளில் தங்கள் பங்குக்கு எதாவது அட்லீஸ்ட் ஒரு நாட்டின் ஆதரவையாவது பெற்று தர வேண்டும். சும்மா சைடில் ஆட்டோ ஓட்டபடாது..

*- புரட்சிகர தமிழ் தேநியன்*

### தமிழ்க் கூட்டமைப்புடனான பேச்சில் முஸ்லிம்களையும் சேர்க்க வேண்டும்: ஜப்பான் தூதுவரிடம் ஹக்கீம்.

தொப்பி மாற்றப்படுகிறது.

இவர்களுக்குத்தானே ஒரு பிரச்சனையுமில்லை. எந்தப் பிரச்னைக்கு தீர்வு வேண்டுமென்று கேட்கிறார்கள்?

*- தப்பிலி*

# தமிழ்ப் திரைபடங்களில் காதலும் சாதியும்.



அண்மைக்காலமாக சில திரைப்படங்கள் சாதி வெறி என்ற பெயரில் கண்டவற்றையும் மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றன அந்தவகையில் சாதி வெறி பிடித்த சிக்கலான சில படங்களைப்பற்றி இக்கட்டுரை ஆய்வுசெய்கிறது. இனி இப்படங்களை ஏன் ஆய்வு செய்ய வேண்டும்? என்பதை பார்க்கலாம்.

*காதல்*

காலங்காலமாக தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. உயர் சாதியினரின் தயவில்தான் இவர்கள் வாழ வேண்டும். அவர்களது உரிமை, ஆசாபாசங்கள், காதல் எல்லாமே உயர் சாதியினர்தான் நிர்ணயிக்க வேண்டும் என்பதுமேட்டிமை மனப்பாங்கு. ஒருதாழ்த்தப்பட்ட சாதியினன், ஒரு உயர் சாதியினனால் அழிக்கப்பட முடியும் அல்லது வாழவைக்கப்பட முடியும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாய் இப்படத்தைக் கூறலாம். இது காலங்காலமாக உயர் சாதியினரால் நம்பப்படும் ஒருகருத்து. மிகவும் சிறந்த திரைக்கதையுடன் வெளிவந்த இப்படம், பல விஷயங்களில் தமிழ்ப் படங்களுக்கு ஒரு முன்னோடியாகும். ஒரு உண்மை சம்பவத்தின் அடிப்படையில் இப்படம் எடுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இதைக் காரணமாக காட்டி இயக்குனர் பல விமர்சனங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

நடைமுறையில் இவ்வகை காதல்களுக்கு ஏற்படும் கதி வேறாயிருக்கிறது. காதலன் கொல்லப்படுவான் அல்லது இருவரும் கொல்லப்படுவார்கள். காதலி ஏமாற்றிவிட்டு செல்வாள். அதனால் காதலன் தற்கொலை செய்வான் அல்லது காலமெல்லாம் நடைபிணமாக வாழ்வான். காதலன் குடும்பமே தீக்கிரையாக்கப்படும் அல்லது ஊரை விட்டுத் துரத்தப்படும். சில சமயங்களில் அந்த சாதி குடியிருப்பே சிதைத்து நொறுக்கப்படும். இவைகள் சர்வ சாதாரணமாக தென் மாவட்டங்களில் நடந்தேறும் விஷயங்களாகும். யதார்த்தம் இவ்வாறிருக்க, அவனை (தாழ்த்தப்பட்ட சாதி பையனை) ஆதரித்து வளர்ப்பது போல் காண்பிப்பது, ஒரு திரைப்பட பாணியிலான தீர்வாகும். மேலும், மேட்டிமை மனப்பாங்குமாகும்.

காதலன் பாத்திரம் படம் முழுதும் ஒரு உள்ளடங்கிய மன நிலையிலேயே இருப்பதாக சித்தரிக்கப்படிருக்கும். அவன்படம்முழுதும்பயந்தவாறே, என்னை கைவிட்டுவிடமாட்டியே, என கேட்டபடியே இருப்பான். (தமிழ் திரைப்பட கதாநாயகன் பொதுவாக வீரம் செறிந்தவனாக இருப்பான். வசனங்களை பொழிவான். நகைச்சுவை மிகுந்தவனாக இருப்பான். ஆனால் இவனோ முற்றிலும் வேறுபட்ட பயந்தாங்கொள்ளி). காதலிக்கும் பையன்கள், அவர்களின் காதலிகள் முன்பு மிகுந்த தைரியம் உள்ளவர்களாய் இருப்பதுதான் யதார்த்தம். ஆனால், இப்படத்தின் காதலன் மிகவும் தைரியம் குறைந்தவனாக சித்தரிக்கப்பட்டுள்ளான். காதலர்களிடையே காணகிடைக்கும் போலியான வீர வசனங்கள்கூட இக்காதலனுக்குக் கிடையாது. தாழ்த்தப்பட்ட சாதி பையனுக்கு வீரம் இருக்காது என்பதுதான் இதன் உட்கருத்து. இது போன்று உயர் சாதிக்கு ஆதரவான நுண்ணிழை படம் முழுதும் பின்னப்பட்டிருக்கிறது.

படம்முழுதும் உயர் சாதியினருக்கு ஆதரவாக ஒருநுண்ணிழை பின்னப்பட்டிருப்பது, படத்தின் உச்சக் காட்சியில் உறுதி பெறும். காதல்தான் உலகை ஜெயிக்கும் என சர்ரியலிஸ்டுகள் கூறுவதாக படித்திருக்கிறேன். ஆனால் இங்கு காதலர்களால் சாதியைக்கூட ஜெயிக்க முடியாது என்பதுதான் உண்மையாகும்.

உடல் ரீதியாக எந்தவித பாதிப்பின்றி, அவள் திருப்பி அனுப்பப்படுவதாக காட்சியமைப்புகள் உள்ளன. இது, தாழ்த்தப்பட்ட சாதியின் ஆண், உயர் சாதி பெண்ணுடன் உடல் ரீதியாக உறவு வைத்துக் கொள்வது பற்றிய இயக்குனரின் பார்வையை நமக்கு உணர்த்துகிறது. அவளின் கற்பு, ஒரு உயர்சாதி ஆணுக்காக பாதுகாக்கப்படுகிறது.

*பருத்தி வீரன்*

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் அதிகமாக வாழும் ஒரு தென் தமிழக கிராமத்தினை கதை களமாகக் கொண்டது. உயர் சாதி ஆணுக்கும், தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்ணுக்கும் பிறந்த குழந்தைதான் கதையின் நாயகன். கிராமத்து சண்டியரான அவனுக்கும், உயர்சாதி உறவுப்பெண்ணுக்கும் உள்ள காதலை, மிக யதார்த்தமாய் சித்தரிக்கும் படம். இங்கு காதலர்களுக்கு எதிரியாக இருப்பது சாதியாகும். கிராமத்தில் சண்டியர்த்தனம் செய்து கொண்டு, தான்தோன்றித்தனமாக அலையும் நாயகனை, நாயகி தீவிரமாக காதலித்து, பின் அவனையும் காதலிக்க வைக்கின்றாள்.

சாதி வெறி பிடித்த நாயகியின் அப்பா, காதலை தீவிரமாக எதிர்க்கின்றார். அவர்கள் ஊரைவிட்டு ஒடிப்போகும் போது, ஒரு மண்டபத்தில் அவளை விட்டுவிட்டு, தன் குடும்பத்தினரை காப்பாற்ற செல்லும் போது, அவனின் பழைய லாரி டிரைவர் நண்பர்கள், அந்த இடத்தில், அவனுடன் பலமுறை விபச்சாரிகளை அனுபவித்தவர்கள், தவறுதலாக நாயகியை அவன்தான் விட்டுச் சென்றான் என எண்ணி, அவளை பாலியல் பலாத்காரம் செய்கின்றனர். திரும்பி வந்த நாயகனிடம், நீ செய்த பாவத்தையெல்லாம் என் மீது இறக்கி வைத்துவிட்டனர் எனக் கூறி உயிர்விடுகிறாள். ஊராரை, அவள் கற்புள்ளவள் என நம்பவைக்க, உயிரற்ற உடலை பல முறை வெட்டிக் கொல்வதாக நடிக்கிறான் நாயகன். அப்படி ஆக்ரோஷமாக வெட்டும்போதும், அவள் ஒரு சிறு முனகலுமின்றி இறக்கின்றாள். அதை அவளின் அப்பாவும், ஊராரும் அவன் தான் கொலைகாரன் என நம்பி, அவனை கொல்கின்றனர். பொய்யாய், அவள் கற்புள்ளவள் என நம்ப வைக்க இப்படி ஒரு தவறான காட்சியமைப்பு.

நாயகனின் தாய், பன்றி மேய்க்கும் தாழ்த்தப்பட்ட சாதி பெண். *அவளின் தாய் கதாபாத்திரம் சாராயம் காய்ச்சி* விற்பவளாக, ஏறக்குறைய வழக்கமான தமிழ் சினிமா ரவுடி போல் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவள் போட்டிக்கு சாரயம் விற்பவனை கொலை செய்வதாக காட்டப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களை மிக கேவலமாக சித்தரிக்கும் பாணியில்தான் இப்படமும் உள்ளது. மேலும், அரவாணிகளை இழிவுபடுத்தும் வகையில் சில காட்சிகள் உள்ளன. இவைகளை யதார்த்தம் எனக் கூறி தப்பித்துக் கொள்ள இயலாது. அப்படியெனில், படத்தின் இறுதிக் காட்சியும், முடிவும் யாதர்த்தமானதா எனில், இல்லை எனக் கூறலாம். அது சினிமாத்தனமான? அதிலும், இயக்குனரின் கோணத்தில்தான் முடிவு அமைக்கப்பட்டுள்ளது. உண்மையில் யதார்த்தம் என்ற ஒன்று, ஒரு கலைப் படைப்பில் சாத்தியமா? சாத்தியமில்லை என்பது தான் கட்டுரையாளரின் நிலைப்பாடு. இது குறித்த விவாதம், கட்டுரையின் மையக் கருத்துக்கு விலகியதாகையால், அதை விட்டுவிடுவோம்.

*- தொடரும்*

## திரை விமர்சனம்

# X-Men: First Class



1962, அமெரிக்காவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக் செயற்பட்டுக் கொண்டிருக்கும் செபாஸ்டியன் ஷோ என்பவனைக் கண்காணிக்கும் சிஐஏ அவனிற்கு துணையாக செயற்படும் சில மனிதர்கள் சிறப்பான ஆற்றல்களை தம்மில் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்கிறது. இவ்வகையான விசேட சக்தி கொண்ட மனிதர்கள் குறித்து விரிவாக அறிய் விரும்பும் சிஐஏ சார்ல்ஸ் சேவியர் எனும் விரிவுரையாளரை தொடர்பு கொள்கிறது?.

மார்வல் காமிக்ஸின் குறிப்பிடத்தக்க நாயகர்களில் X-Men களிற்கு முக்கியமான ஒரு இடம் உண்டு. 1963 களில் காமிக்ஸ் கதையொன்றில் அறிமுகமாக ஆரம்பித்த இந்நாயகர்களில் காணக்கிடைக்கும் X எனும் ஒரு குறிப்பிடத்தக்க மரபணு இவர்களை சாதாரணர்களிடமிருந்து வேறுபடுத்தி சிறப்பான ஆற்றல்களையும் சக்திகளையும் உடையவர்களாக சித்தரித்தது. பரிணாம வளர்ச்சியில் மனிதர்களை விட மேலான படியில் உள்ளவர்களே இந்நாயகர்கள். X-Men என இந்நாயகர்கள் அறியப்படும் முன்பாக அவர்களின் வரலாறு என்ன என்பதை சிறப்பாக திரைக்கு எடுத்து வருகிறது Matthew Vaughn இயக்கியிருக்கும் X-Men: First Class எனும் இத்திரைப்படம்.

1944களில் நாசிகளால் நிர்வகிக்கப்படும் யூத வதை முகாம் ஒன்றில் திரைப்படம் ஆரம்பிக்கும்போது இந்த யூத வதைமுகாம்களை விட்டால் ஹாலிவூட் பட்சிகளிற்கு வேறு வதைமுகாம்களே தெரியாதா எனும் எண்ணமே என் மனதில் எழுந்தது. ஆனால் அந்த ஆரம்பமே படத்தின் மிக முக்கியமான ஒரு பாத்திரமான எரிக் என்பவனிற்கு வஞ்சம் எனும் பாதையில் பயணத்தை ஆரம்பித்து வைக்கிறது.

இதே ஆண்டு காலப்பகுதியில் நீயூயார்க்கின் வசதிபடைத்த புறநகர்பகுதியொன்றின் பெருமாளிகையில், பிறரின் மனதில் உள்ளவற்றை படித்தறியும் திறமை கொண்ட சேவியர் எனும் சிறுவனிற்கும், எந்தவொரு மனிதப்பிறப்பை போலவும் தன்னை உருமாற்றிக் கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்ட ரேவென் எனும் சிறுமிக்கும் அறிமுகம் உருவாகிறது. பின், கதை 1962க்கு தாவுகிறது. ஒரு புறம் எரிக் தன் மனதில் எரியும் வஞ்சத்தை தணிக்க அதிரடிப் பயணத்தை மேற்கொள்ளுகிறான். சேவியர் பல்கலைக்கழக மாணவனாக தன் வாழ்க்கையை தொடர்கிறான். பின் மரபணு மாற்றங்கள் குறித்த விடயங்களில் தேர்ந்த விரிவுரையாளானாகிறான். படம் ஆரம்பித்த கணம் முதலே உருவாகும் விறுவிறுப்பு அதன் இறுதிவரை குறையாதபடியிருக்கும் சிறப்பான இயக்கம் படத்தின் முதல் பலம். மிகச்சிறப்பான நடிகர் தெரிவு அதன் இரண்டாம் பலம். அதிரடி ஆக்ஷன்களை மட்டும் நம்பியிராது ரசிக மனங்களை சிறகொன்றின் ஸ்பரிச மென்மையுடன் தொட்டுவிடும் கதை மூன்றாம் பலம். சிறப்பாக உருவாக்கப்பட்டிருக்கும் கிராபிக்ஸ் காட்சிகள் உபரிப் பலம்.

மனிதர்கள் மத்தியில் ஒளிந்து வாழக்கூடிய நிலையில் உள்ள X-Menகள் குறித்த பார்வையும் மனிதர்கள் அவர்கள்மீது கொள்ளும் வெறுப்பும் தயக்கமின்றி திரைப்படத்தில் முன்வைக்கப்படுகிறது. அமெரிக்காவை ஒரு காலத்தில் பரபரப்பிற்குள் ஆழ்த்திய கியூப் அணு ஏவுகணை விவகாரத்தை முக்கியமான ஒரு திருப்பத்திற்காக சிறப்பாக திரைப்படத்தில் கையாண்டிருக்கிறார்கள் கதையை உருவாக்கியவர்கள். மிகைகற்பனைச் சதி ஒன்றை நாடாது ஏற்கனவே நிகழ்ந்த சம்பவம் ஒன்றினை கதையில் விறுவிறுப்பிற்காக உபயோகித்திருப்பது கற்பனையின் நம்பகத்தன்மையை அதிகரிக்கவே செய்கிறது கூடவே அதன் விளைவுகளும் எதிர்பார்த்த வெற்றியை தந்திருக்கின்றன.

கிராபிக்ஸ் காட்சிகளின் தரம் சொல்லவே வேண்டியதில்லை. உச்சக்கட்டக் காட்சிகளில் வரைகலைக் கலைஞர்கள் பின்னி எடுத்திருக்கிறார்கள். அதே போல் சமீபகாலத்தில் இவ்வளவு விறுவிறுப்பும் வேகமும் அழுத்தமும் நிறைந்த உச்சக்கட்டக் காட்சியை நான் திரையில் கண்டதில்லை.

***- கனவுகளின் காதலன்***



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

திரை விமர்சனம்

# அவன்-இவன்



*அன்பின் இயக்குனர் பாலா அவர்களுக்கு,*

வணக்கம்.தமிழகத்தின் மிகச் சிறந்த இயக்குனர்களில் ஒருவராக புகழப்படுபவர். உலக சினிமா அளவிற்கு தமிழில் சினிமாவை தருகிறவர் என்ற பெயரால் இலக்கியவாதிகள் முதல் உயர் சினிமா ரசிகன் வரை பாராட்டப்படுபவர். மார்கெட் போய் நொந்து போயிருக்கும் காலத்தில் உங்கள் படத்தில் ஒரு ஐந்நூறு நாள் கால்ஷீட் கொடுத்துவிட்டால் அடுத்து ஒரு மூணு வருஷத்துக்கு ஒப்பேத்திவிடலாம் என்கிற நம்பிக்கையை நடிகர்களிடம் ஏற்படுத்தியவர். வாழ்நாளில் இயல்பாய் சந்திக்க சான்சேயில்லாத கேரக்டர்களினால் பேசப்படுபவர். என்பது போன்ற பல விமர்சனங்கள் இருந்தாலும் உங்களது படங்களுக்கான ஈர்ப்பு உயர் தட்டு மக்களிடையேயும், இலக்கியவாதிகளிடையேயும், பெரும் எதிர்பார்ப்பு இருக்கவே செய்தது. சில படங்களை பார்த்தால் அன்றைய நாள் முழுவதும் சந்தோஷமாய் இருப்போம், சில படங்களைப் பார்த்தால் மனம் கனத்துப் போய் இருப்போம். இன்னும் சில படங்கள் நம் நினைவிலிருந்து நீங்க பலநாட்கள் ஆகும். அவ்வகையில் உங்களின் சேதுவிற்கு பிறகு பெரிதாய் மனதை தைத்த படங்கள் வரவேயில்லை. தயாரித்த தயாரிப்பாளர்கள் மனதில் வேண்டுமானால் தைத்திருக்கலாம். சரி அதை விடுங்கள். அவன்-இவனுக்கு வருவோம்.

ஒரு ஊரில் ஒரு வாழ்ந்து கெட்ட ஜமீந்தார். ஆனால் இன்றும் அதே ஜமீந்தாரின் பந்தாவில் வாழ்ந்து வருபவர். தன்னைத் தானே ஹைனஸ் என்று அழைத்துக் கொள்ளும் ஒரு கோமாளி. இவரின் அடிபொடிகள் ஆர்யாவும், விஷாலும். இவர்கள் மூவரும் சேர்ந்து படம் முழுவதும் ஏதோ செய்கிறார்கள். ஆங்.. காமெடி செய்கிறேன் என்று செய்கிறார்கள். என்ன எழவு சிரிப்புத்தான் வர மாட்டேன்கிறது. இன்னொரு விஷயம் இவர்களுக்கு தனித்தனி அம்மா, ஒரு அப்பா. குடும்பமே குலத்தொழிலாய் திருட்டுத்தனம் செய்கிறார்கள். விஷாலின் அம்மா அம்பிகா பீடி வலிக்கிறார். ஒண்ணுக்கு, பீ, என்று சரளமாய் பேசுகிறார். இவரது அப்பா.. இரண்டு பொண்டாட்டிகளுக்கு நடுவே அலைகிறார். இவர்களின் ஊர் வாசலில் ஒரு மணி வேறு கட்டி வைத்து ஊருக்குள் போலீஸ் வந்தால் உஷார் படுத்துகிறார். இத்தனைக்கும் இவர்கள் ஊர் போலீஸ் காமெடி பீஸு. ரவுடிகளையும், திருடர்களையும் வைத்து கிடா விருந்து வைப்பவராம். வழக்கமாய் உங்கள் படங்களில் ஏதாவது ஒரு கேரக்டர்தான் வித்யாசமாய் இருக்கும். ரொம்ப நேரமாய் ஏதுவும் நடக்காமல் கடைசியில் திடீரென ஒரு வில்லன் வந்து சம்பந்தமேயில்லாமல் அடிமாடு, ப்ளூ கிராஸ் என்று கதை போய் ஜமீந்தார் அம்மணமாய் நடந்து கொல்லப்பட, வில்லன் கொல்லப்படுகிறான். என்ன எழவுக்குடா என்னிடமே கதை சொல்கிறாய் என்று நீங்கள் கேட்பது புரிகிறது? இல்லை நான் உங்க கதையை ஒழுங்கா சொல்லுறேனா என்று உறுதி செய்யத்தான். இல்லையெனில் உலகபட விமர்சகர்கள் எல்லாம் படம் பார்க்கத் தெரியலைன்னு சொல்லிடப் போறாங்க..

இடைவேளை வரை என்ன செய்வது என்று தெரியாமல் ஆளாளுக்கு காதல் வேறு செய்கிறார்கள். அதுவும் போலீஸ் காரி திருடனும் லவ்வுகிறார்கள். இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் லூசுப் பெண் லைலா கேரக்டரை வைத்துக் கொண்டு மாரடிப்பீர்கள்?. அப்புறம் அந்த அபித குஜாம்பால் பாத்திர பெண். ஆர்யாவின் ஜோடி. கல்லூரி படிக்கும் பெண் எப்படி இம்மாதிரியான ஆளை காதலிப்பாள். எந்த பெண்கள் காலேஜில் ஆண்கள் பாட்டுப் பாடி கிளாஸ் அட்டெண்ட் செய்யும் அளவிற்கு விடுவார்கள். பரீட்சை வேறு எழுதுவது போல் காட்சி வருகிறது. அதெப்படி?. ஓ.. இது நகைச்சுவைப் படமென்றுதானே சொன்னார்கள் சரி.. அதன்பின்பு திடீரென காட்டு இலாகா அதிகாரியை அண்ணன் தம்பி இருவரும் சேர்ந்து தாக்குகிறார்கள். ஒரு கோடி ருபாய் மதிப்புள்ள மரத்தை கடத்துகிறார் விஷால் அதற்காக ஒன்பது வருஷம் ஜெயில் என்றெல்லாம் கூட சொல்கிறார்கள். அதன்பின் கதையில் அதைப் பற்றி யாரும் மூச்சைக் கூட விடக்காணோவில்லை. படம் முடியும் தருவாயில் அய்யோ இவ்வளவு நேரம் விளையாட்டா ப்ரோடியூசர் பணத்தை வைத்து விளையாடிவிட்டோமே? என்று உணர்ந்து, ஜமீன் எதிரியின் பெண் தான் ஆர்யாவின் காதலி என்று சண்டையிட வைத்து, ஒரு பாட்டில் எல்லாம் சரியாகும் போதே. அவர் சாகப் போகிறார் என்று தெரிகிறது. அப்போதுதானே க்ளைமாக்சில் உங்கள் ட்ரேட் மார்க்கான புழுதி, சாக்கடை, சகதியில் சண்டை போட்டு வன்முறையாய் ஒரு சண்டைக் காட்சி வைக்க முடியும்.. என்ன கொடுமை உங்களை நம்பி உயிரைக் கொடுத்து நடித்துள்ள விஷால், ஆர்யா, உழைப்பை வீண் செய்து விட்டீர்கள். என்றே சொல்ல வேண்டும். மேலே உள்ள கேள்விகளுக்கான விடையை கதை என்கிற வஸ்துவை யோசிக்கும் போதும்,

திரைக்கதை என்கிற வஸ்துவை யோசிக்கும் போதும் யோசித்திருந்தால் ஒரு நல்ல படத்தை அளித்திருக்க முடியும். அது எப்போது பழக்கமில்லாத ஒன்று என்பதால் இப்படத்தில் பெரிய சறுக்கலாய் அமைந்துவிட்டது. நடுவில் வரும் சூர்யாவின் காட்சிகள் எல்லாம் படத்தின் நேரத்தை நிரப்ப எடுக்கப்பட்ட காட்சியாகவே தெரிகிறது. அட்லீஸ்ட் ஒரு விஷயத்திற்கு உபயோகம். விஷாலின் நடிப்பை வெளிப்படுத்த கிடைத்த காட்சியாக வேண்டுமானல் பார்க்கலாம். ஆனால் அதனாலும் படத்திற்கு பிரயோஜனமில்லை. படத்தில் பாராட்ட ஆயிரம் இருந்தாலும் எல்லாமே விழலுக்கு இறைத்த நீராய் போனதால் பிரயோசனமில்லாமல் போய்விட்டது.

ஆர்தர் ஆர்.வில்சனின் ஒளிப்பதிவு யுவனின் இசை என்று குறிப்பிட்டு சொல்லலாம் ஆனால் என்ன பிரயோசனம்?. விஷாலின் உழைப்பு மிகவும் பாராட்டப்பட வேண்டியது தான். விளிம்பு நிலை மனிதர்களை வைத்து படமெடுக்கிறேன். அவர்களின் கருப்பு பக்கங்களை எடுக்கிறேன் என்பதை விட, நிஜ மனிதர்களை வைத்து எடுக்க வேண்டிய கதைகள் நிறைய இருக்கிறது. ஆனால் உங்கள் படங்களின் மேல் மாறு பட்ட கருத்துக்கள் கொண்டவனாக இருந்தாலும் உங்களின் உருவாக்கத்தில் மேல் நல்ல மரியாதையுள்ளவன். அட்லீஸ்ட் அடுத்த படத்திலாவது ஒரு நல்ல படைப்பை எதிர்பார்க்கிறேன்.

*- சங்கர் நாராயணன்*

# சினித்துளி

## முகமூடி போட்ட ஜீவா!



'கோ' படம் கொடுத்த வரவேற்பை அடுத்து ஜீவா நடிப்பில் 'ரௌத்திரம்', 'வந்தான் வென்றான்', 'நண்பன்' என படங்கள் வரிசை கட்டி நிற்கின்றன.இப்படங்களை அடுத்து மிஷ்கினின் இயக்கத்தில் 'முகமூடி' என்னும் படத்தில் நடிக்க இருக்கிறார் ஜீவா. மிஷ்கினின் கனவுப் படம் 'முகமூடி'. முதலில் இப்படத்தில் நடிக்க இருந்தது சூர்யா. சூர்யாவை அடுத்து ஆர்யா, விஷால் என பல பேரிடம் மாறி இப்போது ஜீவா நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

'முகமூடி' படம் ஒரு சூப்பர் ஹிரோ சம்பந்தப்பட்ட கதையாம். படப்பிடிப்பு ஆகஸ்ட் மாதம் தொடங்க இருப்பதாகவும், 2012ல் கோடை விடுமுறைக்கு திரைக்கு வரலாம் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

## பெயர் மாறும் 'பகலவன்'!



நடிகர் விஜயை வைத்து இயக்குநர் சீமான் இயக்கவுள்ள படம் 'பகலவன்'. இப்படத்தின் தலைப்பை மாற்ற இருவரும் முடிவு செய்திருக்கிறார்கள். இயக்குநர் சீமான் தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தபோது விஜய்க்காக உருவாக்கப்பட்டக் கதை 'பகலவன்'.அவர் விடுதலையாகி வருவது தாமதமாகவே வேலாயுதம், நண்பன் படங்களில் நடித்தார் விஜய். மேற்படி படங்களை தற்போது விஜய் முடித்து விட்டதால் அடுத்த படத்துக்கு ரெடியாகிவிட்டார்.

விஜய்யிடம் சீமான் சொல்லியிருக்கும் கதைக்கு ப்கலவன் பொருத்தமான தலைப்புதான். ஆனால் அதன்பிறகு சூரியன் அவர்களுக்கு ஆகாததாகிவிட்டதால் மாற்று தலைப்பு யோசித்து வருகின்றனர்.

## மணிரத்தினத்தின் அடுத்த படம்!!



இயக்குநர் மணிரத்னம் 'ராவணன்' படத்திருக்கு பிறகு நடிகர் விஜய், தெலுங்கு நடிகர் மகேஷ்பாபுவை வைத்து மிகப்பெரும் பொருட்செலவில் 'பொன்னியின் செல்வன்' படத்தை எடுக்கத் திட்டமிட்டு அது கைவிடப்பட்டது.தற்பொழுது இரண்டு நாயகர்களை வைத்து படமொன்றை இயக்கவிருகிறாராம் மணிரத்னம். அவர்களில் கார்த்திக்கின் மகன் கவுதமும் ஒருவர். இன்னொரு நாயகனாக ஆர்யாவையோ அல்லது மகேஷ்பாபுவை நடிக்க வைக்க முயற்சிகள் நடக்கின்றனவாம்.

## கடுப்பில் வெங்கட்பிரபு!!



அஜீத் நடித்து வரும் 50வது படம் 'மங்காத்தா'. இப்படத்தை வெங்கட் பிரபு இயக்கி வருகிறார். 'மங்காத்தா' படம் ஒரு வெளிநாட்டு படத்தின் தழுவல் என செய்திகள் பரவ ஆரம்பித்தன. இச்செய்தி குறித்து இயக்குனர் வெங்கட் பிரபு 'மங்காத்தா படம் எந்த படத்தின் ரீமேக்கும் அல்ல.ஒவ்வொருபடமும் ஏதாவது ஒரு படத்தில் வரும் காட்சியையோ அல்லது கதையின் தாக்கத்தினாலோ தான் படைக்கிறோம். ஆனால் அதை நாம் எவ்வாறு படைக்கிறோம் என்பது தான் முக்கியம்.


அந்தவகையில் 'மங்காத்தா' படம் எதன் தாக்கத்தில் உருவானது என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்' என்று கூறியுள்ளார்.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....


**seven** | zero
graphic designers.
**020 7043 4319**
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ




creative artwork from **concept to design**



IDLY Express
Rice & 3 Curries £1.50
4 Vadai £1
3 Rolls £1
50 Idiyappam with
Sothy & Sambal £5
We send money worldwide, Special Rates
to India,Sri Lanka, Europe and Canada.
Croydon Best Foods
259-261 London Road, CR0 2RL
Tel : 020 8665 0082

JUNE 26
On UN's
International Day in Support of
Victims of Torture,
WE
REMEMBER
THEM
Candle Light
Vigil
@ Marina,
Chennai
Let us remember
Innocent Tamils
Killed by
Genocidal Srilankan Govt.
Srilanka Government is responsible for the killing of 146,000 innocent Tamils in Tamil Eelam. More than 90,000 children were killed and around 80,000 women were made widows in this genocide.
Also, 543 Tamilnadu fishermen were killed by the Srilankan Navy and 700 hundred fishermen are still missing in the seas. More than 2000 Tamilnadu fishermen were handicapped in the Srilankan Naval forces attack.
To show our support to these victims and to pay tribute to the dear ones killed, let us show our strength by uniting together at the Marina Beach leaving aside all our caste, creed, religion and political differences.
Join hands to make a new world which cares for humanity.
LIGHT A
CANDLE
Date : 26 - June - 2011
Time : Sunday at 5 PM
Venue : Marina Beach
near: Kannagi Statue
May 17
movement

வீரவணக்கம்
Special Commander of Malathi Brigade
Ajanthy
May 2009




A swinger in Sri Lanka
involves more than a ball.
PLAY BY YOUR CONSCIENCE
Dont Play Cricket in Sri Lanka

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk